# பாலியல் குற்றத்தினால் பாதிக்கப்பட்டவருக்கு

## இந்திய குற்றவியல் நீதிமுறை குறித்த குறிப்புகள் (சட்ட நுணுக்க விளக்கம்)

வழக்கறிஞர் இணைப்புக் குழு – பெண்ணுரிமை முன்முயற்சி

# உள்ளடக்கம்


முன்னுரை vii

நன்றி ix

## அறிமுகம் 1

## I குற்றங்களின் வகைகள் 2

1. பிணையுடன் விடுவிக்கக்கூடிய குற்றங்கள் 2
2. பிணையுடன் விடுவிக்க முடியாத குற்றங்கள் 2
3. புலன் கண்டுகொள்ளக் கூடிய குற்றங்கள் 2
4. புலன் கொள்ள முடியாத குற்றங்கள் 2
5. புலன் கொள்ளக் கூடிய குற்றங்களும், அவை நிகழ்வதைத் தடுக்க காவல் துறையின் பொறுப்பும் 3
6. விசாரணை நடக்கும் முறை / விதிமுறை 3

## II முதல் தகவல் அறிக்கை 4

1. புகாரைப் பதிவு செய்யும் முறை 4
2. POSCO சட்டம் 19 பிரிவின்படி கட்டாய தகவல் அறிவிப்பு 4
3. சிறாருக்கான சிறப்பு வழிமுறைகள் 5
4. குறிப்பிட்ட வழக்குகளில் பெண் அதிகாரியால் தகவல் பதிவு செய்தல் 5
5. மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வழி முறைகள் 6
6. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமை 7
7. முதல் தகவல் அறிக்கை பதிவும் காவல்நிலைய எல்லை வரையறையும் 8

## III நீதிமன்ற நடுவரின் பொறுப்புகள் 9

1. காவல்துறையினர் நடவடிக்கை எடுக்கவில்லையானால் இருக்கும் பரிகாரம் 10

## IV புலனாய்வு 11

1. புலனாய்வின் பல்வேறு படிகள்/நிலைகள் 12
2. ஆரம்ப கட்ட முதல் தகவல் அறிக்கைக்கு முந்தைய காவல் துறையின் புலன் விசாரணை 12
3. புலன் விசாரணையின் படிகள் 13
4. நியாயமான காவல்துறை விசாரணை 14

5. வாக்குமூலம் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் 14

சாட்சியின் விசாரணை மற்றும் வாக்குமூலம் 14

நடுவர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் 16

ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தல் 16

நடுவர் முன்னிலையில் அளிக்கப்படும் வாக்குமூலம் 16

பாதிக்கப்பட்டவரின் வாக்குமூலம் 17

பாலியல் குற்றத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் வாக்குமூலத்தை பதிவு செய்தல் 17

6. பாலியல் குற்றத்தால் பாதிக்கப்பட்ட பெண்ணை மருத்துவப் பரிசோதனை செய்தல் 17

ஒப்புக்கொண்டால் மட்டுமே மருத்துவப் பரிசோதனை 17

சிறாரின் மருத்துவப் பரிசோதனை 17

மருத்துவப் பரிசோதனை அறிக்கை 18

பாதிக்கப்பட்டவருக்கு மருத்துவ உதவி 18

7. குற்றம் சாட்டப்பட்டவருக்கான மருத்துவப் பரிசோதனை 19

காவல்துறையின் வேண்டுகோளுக்கிணங்க 19

8. வன்புணர்ச்சி குற்றம் சாட்டப்பட்டவரை மருத்துவப் பரிசோதனை செய்தல் 19

குற்றம் சாட்டப்பட்டவருக்கான மருத்துவப் பரிசோதனை அறிக்கை 20

9. சிறாரின் மீது பாலியல் தாக்குதல் செய்தது தொடர்பான விசாரணைக்கான காலக்கெடு 20

10. வழக்குக் குறிப்பேடு 20

சட்டப்பூர்வமாக வழக்குக் குறிப்பேடு பராமரிக்கப்படல் 20

நடப்புக்களின் குறிப்பேட்டை பரிசீலித்தல் 22

நடப்புக்களின் குறிப்பேட்டை ரகசியமாக வைத்தல் 22

## V புலனாய்வுக்கு பின்னால் நடைபெறும் வழிமுறைகள் 23

1. நடுவருக்கு அறிக்கை அனுப்புதல் 23

## VI அரசு வழக்குரைஞரின் பணியும், நீதிமன்ற விசாரணையும்:

1. குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் வழக்கறிஞர் ஒரு சில வழக்குகளில் நடத்தும் குற்ற வழக்குத் தொடர்வு 24

2. குற்றவியல் அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கப்படவேண்டிய புகார்களை, அரசு வழக்கறிஞர் நடத்தும் குற்ற வழக்குத் தொடர்வு 25

3. விசாரணை(Inquiry) மற்றும் வழக்கு விசாரணையில் (trial) அரசு வழக்கறிஞரின் பங்கு 25

4. குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு சாதகமான யூகங்கள் 26

5. சாட்சியளிக்கும் முன்பு நிகழ்ந்தவைகளை நினைவு கூறுதல் 27
6. வழக்கு விசாரணையின் போது குற்றம் சாட்டப்பட்டவரின் உத்திகள் 28
7. பிறழ்வு சாட்சி 28
8. குற்றம் சாட்டப்பட்டவரின் விடுவிப்பு 28

**vii. குற்றம் சாட்டப்பட்டவர் ஜாமீனில் விடுவிப்பு – அதை எதிர்க்க குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் உரிமை மற்றும் குற்றம்சாட்டும் வழக்கிற்கு ஒத்துழைப்பு: 29**

1. ஜாமீனை ரத்து செய்தல் 29
2. குற்றம் சாட்டப்பட்டவரின் விடுவிப்பு அல்லது தண்டனையை எதிர்க்கும், குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் உரிமை 29
3. குற்றம்சாட்டும் தரப்பினருக்கு ஒத்துழைப்பு அளிப்பதற்கான உரிமை 30

**VIII. குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் சொந்த வழக்கறிஞரின் பணிகள் 31**

1. குற்றத்தால் பாதிக்கப்பட்டவருடைய வழக்கறிஞர் அரசு வழக்கறிஞருடைய செயல்களில் அவருக்கு பங்களிப்பு செய்பவராகச் செயல்படுதல் 32

**IX. குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு சட்ட உதவி 33**

1. குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு சட்ட உதவி 34
2. சட்ட ஆலோசனை 34

**X. தீர்ப்பு 34**

1. தண்டனை அல்லது விடுதலை 34
2. தண்டனை 34
3. Cr.P.C பிரிவு 357–ன் படியான இழப்பீடு 34
4. Cr.P.C பிரிவு 357A-ன் படி, பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு திட்டம் 35

இணைப்பு – 1: இந்திய தண்டனைச் சட்டத்தின் படியான (Indian Penal Code, 1860) POSCO சட்டம் & PW DVA குற்றங்களும் அவற்றுக்கான தண்டனைகளும் 39

இணைப்பு – 2: குற்றவியல் சட்டத்தில் பொருத்தமான பிரிவுகள் 47

அருஞ்சொல் அகராதி 75

# முன்னுரை

பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வழக்கை தொடர்ந்து நடத்தாமல் அதிலிருந்து பின்வாங்கச் செய்ய முனைவதாக குற்றவியல் நீதி முறை உள்ளது. இந்தியாவில் பாலியல் வழக்குகள் வலுவிழந்து போனதற்கு அதிகாரபூர்வ விவரங்கள் இல்லாத போதிலும், குற்றவியல் நீதி முறையில் குற்றச்செயல் நடைபெற்றது குறித்த தகவல் தெரிவிக்கப்படும் தொடக்க நிலையிலேயே பல வழக்குகள் தோல்வியடைவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பாலியல் குற்றங்களில் விசாரணை நடைபெறும் நிலையிலேயே இந்த நடைமுறையில் உள்ள தாமதங்கள் காரணமாக அரசு பெண் வழக்கறிஞர் விலகிக் கொள்ளுதல் அல்லது போதுமான ஆதாரங்கள் இல்லாததால் குற்றவாளிகள் விடுவிக்கப்படுவது போன்றவை காரணமாக குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதும் குறைந்த அளவிலேயே உள்ளது. நீதியை நிலைநாட்டும் நடைமுறையில் இந்த அம்சங்கள் பெரும் தடைகளாக இருப்பதால் வழக்குகள் வெற்றிகரமாக முடியாமல் போவதுடன் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளும் பூர்த்தியாவதில்லை.

பாலியல் குற்றங்களில் விசாரணையை ஊக்குவிக்கும் வகையில் பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகள் பாதுகாப்பு சட்டம் 2012ல் ("POCSO Act") குற்றம் குறித்து தகவல் அளிப்பது கட்டாயமாக்கப்பட்டதுடன், பாலியல் குற்ற வழக்குகளில் மருத்துவமனைகள் தகவல் அளிப்பது 2013ம் ஆண்டு குற்றவியல் சட்டத்தில் கட்டாயமாக்கி திருத்தம் செய்யப்பட்டது. எனினும் பாதிக்கப்பட்டவர்களுக்கு காவல்துறை மற்றும் நீதித்துறை சேவைகள் அளிக்கப்படாதபோது. பல்வேறு பாதிக்கப்பட்டவர்கள் விரக்தியடைந்து குற்றம் குறித்து தகவல் அளிக்காமல் இருப்பதற்கான வாய்ப்பு உள்ளது. குற்றம் குறித்து புகார் அளிக்கப்படுகின்ற போதிலும் குற்றவியல் நீதி முறையில் உள்ள தடைகள் காரணமாக விசாரணை நிலையில் அல்லது வழக்கு நடைபெறும் நிலையில் தேக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

பாலியல் குற்றத்தினால் பாதிக்கப்பட்டவருக்கு இந்திய குற்றவியல் நீதி முறை குறித்த குறிப்புகள் (சட்ட நுணுக்க விளக்கம்) பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களுக்கு உதவுபவர்கள் குற்றவியல் நீதி முறையில் உள்ள நுணுக்கங்களைத் புரிந்து கொள்வதுடன் இந்த முறையில் இருந்து கிடைக்கக்கூடிய நியாயமான எதிர்பார்ப்புகளை தெரிந்து கொள்ள முடியும். இந்த ஆவணம் குற்றவியல் நடைமுறை விதிகள் 1973 பற்றிதீவிரமாக குறிக்கிறது. இந்த ஆவணத்தில் தொடர்புடைய விதிகள் குறித்து இணைப்பு 2ல் விரிவாக அளிக்கப்பட்டுள்ளபோதிலும் இந்த ஆவணத்தைப் படிப்பவர்கள் Cr.P.C. யை குறிப்பாக எடுத்துக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

பாதிக்கப்பட்ட பெண் தனது உரிமைகள் குறித்த அதிக விழிப்புணர்வுடன் தனக்கு எதிரான குற்றச்செயல் குறித்து புகார் செய்து அது தொடர்பான வழக்கை இறுதி வரை தொடர்ந்து நடத்துவார் என நம்பப்படுகிறது.

**இந்திரா ஜெய்சிங்**
பெண் உரிமை முயற்சிகளுக்கான வழக்கறிஞர் இணைப்பு
மார்ச் 2015.

# நன்றி

இந்த ஆவணம் திருமதி இந்திரா ஜெய்சிங் அவர்களால் உருவாக்கப்பட்டு அவரது வழிகாட்டுதலுடன் பெண் உரிமை முயற்சிகளுக்கான வழக்கறிஞர் இணைப்பு அமைப்பால் தொகுக்கப்பட்டது.

குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இந்த ஆவணத்திற்கான துவக்க பின்னணிகளை தயாரித்த வழக்கறிஞர் திரு. ஆர். கோபால் அவர்களுக்கு சிறப்பு நன்றிகள்.

பெண் உரிமை முயற்சிகளுக்கான வழக்கறிஞர் இணைப்பு அமைப்பின் செல்வி காயத்ரி சர்மா மற்றும் செல்வி மோனாலிசா இந்த ஆவணத்தை ஆய்ந்து தொகுத்தனர். செல்வி ப்ரோடோடி தத்தா மற்றும் செல்வி பிலாரிசா சர்மா நோங்பியூர் இந்த ஆவணம் வெற்றிகரமாக வெளியிடப்படுவதை உறுதி செய்தனர். குற்றவியல் சட்டம் குறித்த ஆராய்ச்சித் தகவல்களை செல்வி மைத்ரேயி குப்தா வழங்கினார்.

பாதிக்கப்பட்டவர்களின் பரிசோதனை மற்றும் சிகிச்சையில் மருத்துவர்களின் பங்களிப்பு குறித்து புரிந்து கொள்ள உதவிய செல்வி பத்மா தியோஸ்தாலிக்கு எங்களது நன்றிகள்.

மிகக் குறுகிய காலத்தில் இந்த ஆவணத்தை சரிபார்த்து (editing) உதவிய வழ்க்கறிஞர் M.N.சுமதிக்கு நாங்கள் நன்றிக்கடன் பட்டுள்ளோம்.

இந்த ஆவணத்தை தயாரிக்க நிதியுதவி அளித்த பிரிட்டிஷ் ஹை கமிஷனுக்கு எங்களது நன்றியை உரித்தாக்கி கொள்கிறோம்.

மூத்த வழக்கறிஞர் ரெபக்கா மாமன் ஜான், மூத்த அரசு வழக்கறிஞர் திரு. இஜாஸ் கான் மற்றும் தமிழ்நாடு அரசு மற்றும் சிபிஐக்கான வழக்கறிஞர் திரு. சுப்ரமணியம் பிரசாத் ஆகியோர் தங்களது கடும் பணிகளுக்கு இடையே நேரம் கொடுத்து இந்த ஆவணத்தில் உள்ள சட்ட விவரங்களை உற்று நோக்கி சரிபார்த்தமைக்காக எங்களது உளமார்ந்த நன்றிகள்.

வழக்கறிஞர் இணைப்புக் குழுவைச் சேர்ந்த கிரண் சர்மா உஜ்வாலா அளித்த ஆதரவுக்காக நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறோம். திரு.ராகுல் பஜாஜ் மற்றும் செல்வி அருந்ததி கோபால் ஆகியோர் இந்த ஆவணத்திற்கு அளித்த பங்களிப்புக்காக அவர்களுக்கு சிறப்பு நன்றிகள்.

இந்தக் கையேடு தமிழில் வெளிவர ஒருங்கிணைப்பு செய்த ஷீலு, தமிழ்நாடு பெண்கள் இணைப்புக்குழு அவர்களுக்கும், மொழியாக்கம் செய்த பாலு மற்றும் உஷா அவர்களுக்கும், வடிவமைப்பு மற்றும் அச்சில் உதவிய லாவண்யா மற்றும் ஆர் மீடியா நண்பர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

# அறிமுகம்

இந்திய குற்ற ஆவண மையத் (NCRB) தரவுகளின்படி/விவரங்களின் படி , நம் நாட்டில் பெண்களுக்கெதிரான வன்கொடுமைகள் (VAW) ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன.[1] கடந்த 2012 ஆண்டு மொத்தம் 2,44,270 VAW வழக்குகள் பதியப்பட்டுள்ளன (இது கடந்த 2011 ஆண்டை காட்டிலும் சுமார் 6.4 விழுக்காடு அதிகம்). வன்புணர்ச்சி குற்றங்கள் மட்டும் சுமார் 3% அதிகம். தொற்று நோய் போல இருக்கும் இந்த பிரச்சினை, பாலியல் பலாத்காரம் மற்றும் பெண்களைக் கேலி செய்தலில் 5.5%, மேலும் பாலியல் துன்புறுத்தல்களில் 7% அதிகரித்துள்ளது. ஆனால் NCRB 2010 –2012 க்கான விவரங்களை ஆய்வு செய்தால், இந்திய குற்றவியல் சட்டம் 1860, படி பெண்களுக்கெதிரான பல்வேறு குற்றங்களுக்காக தண்டனை அளிக்கப்பட்ட விகிதங்கள் குறைந்துள்ளது தெரியவருகிறது. (வன்புணர்ச்சிக் குற்றத்திற்கு தண்டிக்கப்பட்டது 2010 இன் 26.6% லிருந்து 2012 இல் 24.2% ஆகவும், பாலியல் தொந்தரவிற்கு 29.7% லிருந்து 24.0% ஆகவும், பெண்களைக் கேலி செய்தலுக்கு 52.8% லிருந்து 36.9% ஆகவும் குறைந்துள்ளது). தலைநகர் டெல்லியின் புள்ளிவிவரங்கள் மட்டுமே 2012ம் ஆண்டினைவிட இரண்டு மடங்கு அதிகமாக 2013ம் ஆண்டில் வன்புணர்ச்சி குற்றங்கள் பதிவானதைக் காட்டுகிறது.

## தலைநகர் டில்லியில் 2013ம் ஆண்டு பெண்களுக்கெதிரான பாலியல் குற்றங்களின் விவரம்:

| வ. எண் | குற்றங்களின் விவரம் | 2012இல் பதியப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2013இல் பதியப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | இந்திய குற்றவியல் சட்டம் 1860, படி பெண்களுக்கெதிரான பல்வேறு குற்றங்கள் | 51,479 | 73,958 |
| 2. | பெண்களை பாலியல் தொந்தரவு செய்தல் | 653 | 3,347 |
| 3. | வன்புணர்ச்சிக் குற்றத்திற்கு | 680 | 1,559 |

ஆதாரம்: Delhi Police data, reported in "Huge surge in crimes against women in Delhi", Gulf Times, 4, ஜனவரி 2014 அன்று வெளிவந்த கல்ப் டைம்ஸ் (Gulf Times) பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரிக்கின்றன' என்ற கட்டுரையில் கொடுக்கப்பட்ட காவல்துறையின் புள்ளிவிவரம்

1 NCRB 'Crimes in India' (2012), available at www.ncrb.nic.in. Last visited on 7th February, 2014

இந்த ஆவணம், இந்திய குற்றவியல் சட்டநடைமுறைகளுக்கு பின் வரும் பயனாளிகளுகளுக்காக தயாரிக்கப்பட்டுள்ள ஒரு அறிமுகமாகும்: பாலியல் வன்கொடுமைகளை அனுபவித்தவர்கள் மற்றும் வன்புணர்ச்சிக்கு ஆளானவர்கள், இளம் வழக்கறிஞர்கள், சட்ட மாணவர்கள், மற்றும் இந்திய குற்றவியல் சட்டநடைமுறைகளில் சம்பந்தப்பட்டவர்கள். இந்த சட்ட பின்னணிக் குறிப்பு பாலியல் வன்கொடுமைகளை அனுபவித்தவர்கள் சட்டப்படி முறையாக, வரிசையாகச் செய்ய வேண்டிய குற்ற விவரம் தாக்கல்செய்யவும், அதைத் தொடர்ந்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்கான ஒரு வழிகாட்டியாகும்.

## I குற்றங்களின் வகைகள்:

IPCன் படி குற்றங்கள் புலன் கொள்ள கூடியது மற்றும் புலன் கொள்ள முடியாதது, எனவும், பிணையுடன் விடுவிக்கக்கூடியது, பிணையுடன் விடுவிக்க முடியாதது எனப் பகுக்கப்பட்டுள்ளன. Cr,P.C.ன் 1ம் அட்டவணை குற்றங்கள் புலன் கொள்ளக்கூடியதா, புலன் கொள்ள முடியாததா, பிணையுடன் விடுவிக்கக்கூடியதா, பிணையுடன் விடுவிக்க முடியாததா எனப் பட்டியலிடுகிறது.

### 1. பிணையுடன் விடுவிக்கக்கூடிய குற்றங்கள் [Cr.P.C. 2(A) பிரிவின்படி]

ஒரு காவல்துறை அதிகாரி பிணையுடன் விடுவிக்கக்கூடிய குற்றம் புரிந்தவரை தகுந்த பிணையுடன் விடுவிக்கலாம்.

### 2. பிணையுடன் விடுவிக்க முடியாத குற்றங்கள் [Cr.P.C. 2(A) பிரிவின்படி]

பிணையுடன் விடுவிக்க முடியாத குற்றம் புரிந்தவரை, பிணையுடன் விடுவிக்கலாமா என்பதை தகுந்த நீதிமன்றம்தான் முடிவு செய்யும்.

### 3. புலன் கண்டுகொள்ளக் கூடிய குற்றங்கள் [Cr.P.C. 2(C) பிரிவின்படி]

காவல் துறை எந்தத் தடையுமின்றி புலனாய்வு செய்வதற்கு, குற்றம் புலன் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். அதாவது பிடி ஆணை இல்லாமலேயே குற்றம் சாட்டப்பட்டவரை கைது செய்ய அதிகாரம் இருக்க வேண்டும். CrPCன் சட்ட விதிகள், 2(C) பிரிவு, புலன் கொள்ளக் கூடிய குற்றம் சாட்டப்பட்டவர் மீது, காவல் துறை தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறது

### 4. புலன் கொள்ள முடியாத குற்றங்கள்: [Cr.P.C. 155(2) பிரிவின்படி]

தகுதி வாய்ந்த நீதிபதியால் முறைப்படி அனுமதிக்கப்பட்ட பிறகே, இம்மாதிரியான குற்றத்தை புலனாய்வு செய்ய இயலும்.

IPCன்படி பாலியல் வன்கொடுமைகள் எல்லாம் புலன் கொள்ளக் கூடிய, பிணையுடன் விடுவிக்க முடியாத குற்றங்கள் ஆகும். இதில் விலக்கு உள்ளவை பின் வருமாறு: 354வது பிரிவின் கீழ் வரும் பாலியல் துன்புறுத்தல்கள், பிரிந்து வாழும் மனைவியுடனான கணவனின் பாலியல் புணர்ச்சி(376B பிரிவின் படி) மற்றும் வார்த்தைகள், செய்கைகள், பெண்ணிடம் செய்யப்படும் அத்துமீறல்கள் (IPCன் 509 பிரிவின் படி) பிணையுடன் விடுவிக்ககூடிய குற்றங்கள் ஆகும். 376B பிரிவின் படி பாதிக்கப்பட்டவரின், புகாரின் பேரிலேயே குற்றம் புலன் கொள்ளக் கூடியதாக ஆகும்.

## 5. புலன் கொள்ளக் கூடிய குற்றங்களும், அவை நிகழ்வதைத் தடுக்க காவல் துறையின் பொறுப்பும்:

Cr.P.C. பிரிவு 149ன் படி ஒரு காவல்துறை அதிகாரி குறுக்கிட்டு புலன் கொள்ளக்கூடிய குற்றம் நிகழ்வதைத் தடுக்க இயலும். Cr.P.Cன் 150 பிரிவின்படி குற்றம் நிகழ இருப்பதை பற்றி செய்தி அறிந்த/தகவல் கிடைத்த ஒரு காவல்துறை அதிகாரி, அந்த செய்தியை தனது மேலதிகாரிக்குத் தெரிவிப்பதுடன்,அந்தக் குற்றத்தைத் தடுக்க வாய்ப்புள்ள வேறு எந்த காவல்துறை அதிகாரிக்கும் தெரிவிக்க கடமை பட்டுள்ளார். புலன் கொள்ளக்கூடிய குற்றம் நிகழ வாய்ப்பு இருப்பதை, ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதை பற்றி செய்தி அறிந்த ஒரு காவல்துறை அதிகாரி, அதை தடுக்க அவ்வாறு ஏற்பாடு செய்யும் நபரைக் கைது செய்யலாம். Cr.P.C. பிரிவு 151ன்படி செய்யும் கைது நீதிபதியின் அனுமதி அல்லது பிடி ஆணை இல்லாமலே, செய்யலாம்.. ஆனால் அவ்வாறு செய்யும் கைதின் காலம் 24 மணி நேரத்தை தாண்டக்கூடாது.

## 6. விசாரணை நடக்கும் முறை/விதிமுறை:

விசாரணை நடக்கும் முறை பிடி ஆணைப்படியா அல்லது அழைப்புப்படியா என்பதைப் பொறுத்து இருக்கிறது.

CrPC-ன் 2(X)படி, பிடி ஆணைப்படியான வழக்கு என்பது மரண தண்டனை, வாழ்நாள் சிறை வாசம் அல்லது இரண்டாண்டுக்கு மேலான சிறை வழங்க வாய்ப்புள்ள வழக்கிற்கே பொருந்தும். ஏனைய அனைத்தும் CrPC-ன் பிரிவு 2(W)படி அழைப்புப்படியான வழக்குகளே.

பிடி ஆணைப்படியான வழக்குகள்:

- காவல்துறை தகவல் அறிக்கைப்படியானது/ குற்றப் பத்திரிக்கைப்படியானது, காவல்துறை தகவல் அறிக்கைப்படி இல்லாதது போன்றவற்றிற்க்கு வெவ்வேறு நடைமுறைகள் உள்ளன.
- காவல்துறை தகவல் அறிக்கைப்படியான வழக்குகளின் நடைமுறைகள் CrPC-ன் 238 முதல் 243 வரை உள்ள பிரிவுகளில் வரையறுக்கப்பட்டுள்ளன.தனி நபர் புகாரின் பேரில் உண்டான பிடியாணை படியான வழக்குகளின் நடைமுறைகள் CrPC-ன் 244 முதல் 247 வரை உள்ள பிரிவுகளில் வரையறுக்கப்பட்டுள்ளன.
- பிடி ஆணைப்படியான வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படவேண்டும். ஆனால் அழைப்பு வழக்குகளில் முறைப்படியான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய அவசியம் இல்லை. (CrPC-ன் 251–ன் படி). ஆனால் அழைப்பு வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர் தன்னை காத்துக்கொள்ள அவருக்கு தகுந்த அழைப்பு விடுக்கப்பட வேண்டும்
- அழைப்புப்படியான வழக்கை CrPC-ன் பிரிவு 259ன் படி பிடி ஆணை வழக்காக மாற்றலாம். ஆனால் பிடி ஆணை வழக்கை அழைப்புப்படியான வழக்காக மாற்ற இயலாது.

மேலும், குற்றவியல் நடுவரோ, பெருநகர நடுவரோ அல்லது உயர் நீதி மன்றத்தால் நியமிக்கப்பட்ட நீதித்துறையின் சிறப்பு முதன்மை நடுவரோ, CrPC ன் 260ன் படியான சிறு குற்ற வழக்குகளை விசாரிக்கலாம். ஆனால் இதில் வன்புணர்ச்சி போன்ற பெருங்குற்றங்கள் அடங்காது. எனினும் பிரிவு 354A(3) ன் படியான குற்றங்கள் அடங்கும். மற்றும் பெண்களுக்கெதிரான வீட்டில் நிகழும் வன்முறைகள் சட்டம் 2005 (PWDVA) படி இறுதி உத்தரவுகளும் அடங்கும்.

## II முதல் தகவல் அறிக்கை:

### 1. புகாரைப் பதிவு செய்யும் முறை

குற்றவியல் நீதி விசாரணையில்,முதல் தகவல் அறிக்கை ஒரு முக்கியமான ஆவணமாகும். நீதி விசாரணையின் போது அது வாய் வழி சாட்சியத்தை உறுதிபடுத்த உதவும்.[2] உடனடியாக குற்றத்தின் விவரங்களுடன், சாட்சிகளின் பெயர்களுடன் பதிவு செய்யப்படும் முதல் தகவல் அறிக்கை, குற்றம் சாட்டப்பட்டவர் தண்டிக்கப்பட ஒரு உறுதியான அடித்தளமாகிறது.[3] பாதிக்கப்பட்டவர் குற்றம் புரிந்தவரைப் பற்றியும்,குற்றம் பற்றியும் தெரிந்தவை அனைத்தையும் தெளிவாகவும் முழுமையாகவும் தெரிவிக்கவேண்டும். ஒரு முதல் தகவல் அறிக்கை ஆரம்ப நிலைச் செய்திகளின் தொகுப்பாகவும், புலன் விசாரணைக்கு அடிப்படையாகவும் அமைகிறது.

CrPCயின் 154 பிரிவின் படி, புலன் கொள்ளக் கூடிய குற்றம் பற்றி வாய் வழித் தகவல் கிடைத்தவுடன், காவல்துறையினர், அதை எழுத்து மூலமாக எழுதி, அதில் தகவல் தெரிவிப்பவரின் கையொப்பம் பெறுவதுடன், அதை வாசித்தும் காண்பிக்கவேண்டும். அவ்வாறு தெரிவிக்கப்படும் தகவல் எழுத்து மூலமாக கொடுக்கப்பட்டால் அதில் காவல்துறையினர் தகவல் தெரிவிப்பவரின் கையொப்பம் பெறவேண்டும். மேற்கூறிய இரண்டு முறையிலும் காவல்துறையினர் கூறப்பட்ட செய்திகளின் சாரத்தை காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் தினப்பதிவேட்டிலோ அல்லது பொதுப் பதிவேட்டிலோ, பதிய வேண்டும். முதல் தகவல் அறிக்கை முதல் தகவல் அறிக்கை புத்தகத்திலோ, அல்லது முதல் தகவல் அறிக்கை பதிவேட்டிலோ பதியப் பட வேண்டும்.

புலன்கொள்ளக் கூடிய குற்றம் பற்றி முதல் தகவல் அறிக்கை அவசியம் பதியப் பட வேண்டும். தகவல், புலன்கொள்ளக் கூடிய குற்றம் பற்றியதா இல்லையா என்று தெளிவாக இல்லாத போது, ஆரம்ப கட்ட விசாரணை, புலன் கொள்ள முடியாத குற்றமா, புலன் கொள்ள கூடிய குற்றமா என்பதை உறுதி செய்ய மட்டுமே இருக்க வேண்டுமே ஒழிய குற்றத்தைச் சரிபார்க்க வேண்டியதில்லை.

CrPCன் 154 பிரிவின் படி, பதியப்பட்ட தகவல்கள் விவரம், தகவல்களின் நகல் ஒன்று தகவல் தெரிவிப்பவருக்கு, இனாமாக வழங்கப்பட வேண்டும்.

### 2. POSCO சட்டம் 19 பிரிவின்படி கட்டாய தகவல் அறிவிப்பு:

சிறார் பாலியல் துஷ்பிரயோகம் விஷயத்தில், அவ்வாறு POSCO சட்டத்தின் கீழ் விதிமீறல் நடக்கக் கூடுமென்று சந்தேகிப்பவரோ அல்லது அவ்வாறு சட்ட விதி மீறல் நடந்துள்ளதை

2 Thulia Kaliv. State of Tamil Nadu AIR 1973 SC 501.
3 Jagannath Narayan Nikamv. State of Maharashtra 1995 Cri LJ 795 (Bom); Ramesh Nana Ghorpadev. State of Maharashtra 1996 Cri LJ 2185 (Bom).

பற்றி அறிந்துள்ளவரோ அவ்விஷயத்தை உள்ளூர் காவல் துறைக்கோ அல்லது சிறப்பு சிறார் காவல் பிரிவிற்கோ POCSO சட்டம் 19 பிரிவின்படி கட்டாயம் தகவல் தெரிவிக்க வேண்டும். ஆனால் இது தானாகவே முதல் தகவல் அறிக்கையாக ஆகாது. எனினும் POCSO சட்டம் 19 பிரிவின்படியான இந்த தகவல் அறிக்கை மேற்கொண்டு காவல் துறையின் CrPCன் 154 பிரிவின் படி முதல் தகவல் அறிக்கை முதலிய மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்கு இது அடிப்படையாக ஆகும்.

## 3. சிறாருக்கான சிறப்பு வழிமுறைகள்:

ஒரு சிறார் POCSO சட்டம் 19 பிரிவின்படி தகவல் தெரிவித்தால் அதை பதிவு செய்ய, நீதியின் பொருட்டு,பின் வரும் முறைகளில் செய்ய வேண்டும்(1) POCSO சட்டம் 19(3) பிரிவின்படி சிறாரால் புரிந்து கொள்ளக்கூடியவாறு, எளிய வார்த்தைகளில் கூறுதல்,(2) சிறாரால் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் கூறுதல், மற்றும்(3) திறமையுள்ள, தகுதி வாய்ந்த மொழி பெயர்ப்பாளர் அல்லது தகுந்த இடை மனிதரையாவது தேவையனால் அங்கீகரிக்கப்பட்ட தொகை செலுத்தி பயன்படுத்திக்கொள்ளலாம்.

சிறாரின் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு POCSO சட்டம் 19 பிரிவின்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படும் போது காவல் துறையினர் மேற்கூறிய சட்டத்தில் கூறப்பட்டுள்ள ஷரத்துக்களின் அடிப்படையில் அதைச் செய்யவேண்டியது கட்டாயமாகும்.

**4. பெண் அதிகாரியால் தகவல் பதிவு செய்தல்:** IPC 154 பிரிவின் குறிப்பின் படி, கீழ்க்கண்ட சட்டப் பிரிவுகளின் கீழ் ஒரு பெண் புகார் அளித்தால் ஒரு பெண் அதிகாரி அல்லது ஒரு பெண் காவல் அதிகாரியே அதைப் பதிவு செய்ய வேண்டும்.

- IPC-ன் 326A பிரிவின் படி (அமிலம் முதலியவற்றைப் பயன் படுத்தி வலி/காயம் உண்டாக்கும் செயலை மனதறிந்து செய்தல்)
- IPC-ன் 326B பிரிவின் படி (மனமறிந்து அமிலம் முதலியவற்றைப் வீசுதல்/எறிதல் அல்லது வீச/எறிய முயலுதல்)
- IPC-ன் 354 பிரிவின் படி (ஒரு பெண்ணை மானபங்கம் செய்யும் நோக்கத்துடன், தாக்குதல் அல்லது குற்றமய தாக்குதல்)
- IPC-ன் 375 பிரிவின் படி (வன்புணர்ச்சி)
- IPC-ன் 376 பிரிவின் படி (வன்புணர்ச்சிக்குத் தண்டித்தல்)
- IPC-ன் 376A பிரிவின் படி (கொலை குற்றத்திற்கு தண்டித்தல் அல்லது வெறித்தாக்குதல் நிகழ்த்தி, தாக்குதலுக்கு ஆளானவரை உணர்ச்சியற்ற உயிராகச் செய்தலுக்குத் தண்டித்தல்)
- IPC-ன் 376B பிரிவின் படி (பிரிந்து வாழும் மனைவியுடன் கணவனின் வன்புணர்ச்சி)
- IPC-ன் 376C பிரிவின் படி (அதிகாரத்தில் உள்ளவரால் வன்புணர்ச்சி)

- IPC-ன் 376D பிரிவின் படி (கூட்டு வன்புணர்ச்சி)
- IPC-ன் 376E பிரிவின் படி (மீண்டும் மீண்டும் குற்றம் புரிபவருக்கு தண்டனை வழங்கும் போது) மற்றும்
- IPC-ன் 509 பிரிவின் படி(வார்த்தை, செயல், அல்லது சைகையால் ஒரு பெண்ணிடம் பாலியல் வன்முறையில் ஈடுபட எண்ணுதல்)

காவல் துறையினர் பாதிப்புக்கு ஆளான பெண்/சாட்சிக்கு அவர்களுக்கு சட்ட உதவிக்கான உரிமை உள்ளதை, யாதொரு கேள்வியும் கேட்பதற்கு முன் தெரிவிக்க வேண்டும். அவர்களுக்கு அவ்வாறு தெரிவிக்கப்பட்டதை காவல் துறையினர் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும். [Delhi Domestic Working Women's Forum vs. Union of India].[4]

## 5. மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வழி முறைகள்:

பாலியல் குற்றத்தால் பாதிப்புக்கு ஆளான பெண் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ, மனதளவிலோ அல்லது உடல் அளவிலோ மாற்றுத்திறனாளியாக இருந்தால், முதல் தகவல் அறிக்கை அவரது வீட்டிலேயே காவல் துறை அதிகாரியால் பதிவு செய்யப்பட வேண்டும். மாற்றாக பாதிப்புக்கு ஆளான பெண்ணுக்கு சௌகர்யமான ஒரு இடத்திலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யலாம்.

CrPC-ன் 154 (a) பிரிவின் படி, திறமையுள்ள, தகுதி வாய்ந்த மொழி பெயர்ப்பாளர் அல்லது தகுந்த சிறப்பு கல்வியாளர் ஒருவரையாவது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் போது பயன்படுத்திக் கொள்ளலாம்.

CrPC-ன் 154 (b) பிரிவின் படி, அவ்வாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும்போது அதை வீடியோ பதிவு செய்யவும் வேண்டும்.

CrPC-ன் 154C பிரிவின் படி, பாலியல் குற்றத்தால் பாதிப்புக்கு ஆளான பெண்ணின் வாக்குமூலத்தை குற்றவியல் நீதிபதியின் முன், CrPCன் 164 பிரிவின் படி, கூடிய விரைவில் பதிவு செய்ய வேண்டியது , காவல்துறையினரின் கடமையாகும்.

பாதிப்புக்கு ஆளான பெண்ணின் வழக்கறிஞர், அவ்வாறு வாக்குமூலம் பதிவு செய்யும் போது உடன் இருந்தால், மேற் கூறப்பட்ட அனைத்து சட்ட வழிமுறைகளும் கட்டாயம் பின்பற்ற வேண்டியதை உறுதி செய்து அருஞ் செயலாற்ற இயலும். அவர் குற்றத்தால் பாதிப்புக்கு ஆளான பெண்ணின் வாக்குமூலம் சரியாகவும் தேவையான அனைத்து தகவல்களுடனும் முழுமையாகவும் முதல் தகவல் அறிக்கை இல் பதிவு செய்வதை உறுதி செய்ய இயலும். மேலும் முதல் தகவல் அறிக்கையின் நகல் பாதிப்புக்கு ஆளான பெண்ணிற்கு கட்டணமின்றி கொடுக்கப்படுவதையும் உறுதி செய்ய இயலும்.

4 (1995) 1 SCC 14.

## 6. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமை:

CrPC-ன் 166A(C) பிரிவின் படி, ஒரு பொதுத்துறை அதிகாரி CrPC-ன் 154பிரிவின் படி கொடுக்கப்படும் தகவலை, பதிவு செய்யத் தவறினால்; கீழ் கண்ட IPC 326A, 326B, 354, 354B, 370, 370A, 376, 376A, 376B, 376C, 376E அல்லது 509 பிரிவுகளின் படி குற்றம் பற்றிய தகவல்களை பதிவு செய்யத் தவறினால், ஆறு மாதத்திற்கு குறையாத, இரண்டு ஆண்டு வரை நீடிக்கப்படக் கூடிய கடுங்காவல் தண்டனையும் அபராதத் தொகையும் செலுத்த நேரிடும். காவல்துறையினரின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமை சட்ட விரோதமாகவும், மிகுந்த கவலை அளிக்கக் கூடியதாகவும் உள்ளது. அண்மையில் உச்ச நீதி மன்றம் தனது, Lalita Kumari vs. State of Uttar Pradesh and Ors[5] ("Lalita Kumari"), பற்றிய தீர்ப்பில், அரசியல் சாசன அமர்வு பின் வருமாறு கூறியுள்ளது:

- CrPC-ன் 154 பிரிவின் படி முதல் தகவல் அறிக்கையில் புலன் கண்டுகொள்ளக் கூடிய குற்றங்கள் பற்றிய தகவல் அளிக்கப்பட்டால் பதிவு செய்வது சட்டப்படி கட்டாயமாகும். மேலும் எந்த ஒரு ஆரம்ப கட்ட விசாரணையையும் அனுமதிக்க இயலாது.
- அளிக்கப்பட்ட தகவல் புலன் கொள்ளக் கூடிய குற்றமாக இல்லாது, விசாரணை அவசியமானால், புலன் கொள்ளக் கூடிய குற்றமா இல்லையா என்பதை அறிய மட்டுமே ஒரு ஆரம்ப கட்ட விசாரணை அனுமதிக்கப்படும்.
- ஆரம்ப கட்ட விசாரணை நடந்து புலன் கொள்ளக் கூடிய குற்றமாக அறியப்பட்டால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வது சட்டப்படி கட்டாயமாகும். ஆரம்ப கட்ட விசாரணை புகாரினை முடிவுக்கு கொண்டு வந்தால், அவ்வாறு, புகார் முடிவுக்கு வந்த தகவல் பதிவு செய்யப்பட்டு அதன் பிரதி முதலில் புகார் கொடுத்த நபருக்கு, உடனடியாகவோ அல்லது ஒரு வார காலத்திற்குள் கொடுக்கப் பட வேண்டும். அதில் மேற்கொண்டு விசாரணை அவசியம் இல்லாமைக்கும், புகார் முடிக்கப்படுவதற்கும் உண்டான காரணங்களையும் தெரிவிக்க வேண்டும்.
- புலன் கொள்ளக் கூடிய குற்றம் பற்றித் தெரிவிக்கப்படும் தகவலை பதிவு செய்யாமல் தன் கடமையை செய்யாமலிருக்க காவல்துறை அதிகாரிக்கு உரிமை இல்லை. அவ்வாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாத, தனது கடமையைச் செய்யத் தவறும் அதிகாரியின் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்
- ஆரம்ப கட்ட விசாரணை புலன் கொள்ளக் கூடிய குற்றம் பற்றியதா என்பதை மட்டுமே பார்க்க வேண்டுமே தவிர, தெரிவிக்கப்பட்ட தகவல் உண்மையா இல்லையா என்பது குறித்து ஆராய்வதாக இருக்கக் கூடாது.[6]

CrPC-ன் 154(3) பிரிவின் படி பொறுப்பில் இருக்கும் ஒரு காவல் நிலைய அதிகாரி முதல் தகவல் அறிக்கை தயார் செய்ய மறுத்தால், குற்றம் பற்றிய தகவல்களை எழுதி தபால் மூலம் காவல்துறை கண்காணிப்பாளருக்குத் தெரிவிக்கலாம். அந்த புலன் கொள்ளக் கூடிய குற்றம் பற்றிய தகவலால் திருப்தி அடையும் பட்சத்தில், காவல்துறை கண்காணிப்பாளர், தானே புலன் விசாரணை மேற்கொள்ளலாம் அல்லது தன் கீழ் பணிபுரியும் ஒரு அதிகாரிக்கு புலன் விசாரணை செய்யும்படி உத்தரவிடலாம்.

5 (2008) 7 SCC 164.
6 Ibid. at para 111.

அவ்வாறு புலணாய்வு செய்யும் அதிகாரிக்கு காவல் நிலைய தலைமை அதிகாரியின் / ஆய்வாளரின் எல்லா அதிகாரங்களும் உண்டு. சட்டத்தின்படி நடத்தப்பட வேண்டிய நேரடி விசாரணை இல்லாத போது, இந்த சட்ட வாசகம் போதுமானதாக இல்லாதபோதும், சில நேரங்களில் இது ஒரு பிராயச்சித்தமாக எடுத்துக் கொள்ளப் படுகிறது.[7]

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யயாத போது பின் வரும் வழிகளையும் பின்பற்றலாம்:

- CBI விசாரணைக்கோ அல்லது புலனாய்வு செய்யும் அதிகாரியை மாற்றவோ கோருவது: குற்றவியல் நடுவரின் அதிகார எல்லை பொதுவாக உள்ளூர் காவல் நிலையம் வரைதான். மேலும் குற்றம் சாட்டப்பட்டவர் ஓர் காவல் அதிகாரியாகவோ, உள்ளூர் காவல் நிலைய அதிகாரியாகவோ இருக்கும்போது, அல்லது கடந்த கால அனுபவத்திலிருந்து நியாயமான விசாரணை நடக்காது என்ற கவலையோ இருக்குமானால், இந்திய அரசியல் சாசன சட்டப் பிரிவு 226ன் கீழ், உயர் நீதி மன்றம், விசாரனை அதிகாரியை மாற்றவோ அல்ல்து விசாரணை செய்யும் அமைப்பை மாற்றியோ உத்தரவிடலாம். நியாயமான விசாரணைக்கு வாய்பில்லை என்பதற்கான அடிப்படை சான்று இருக்கிறதென்றால், உயர்நீதிமன்றம் CBI விசாரணைக்குக் கூட உத்திரவிடலாம்.

- நடுவரின் ஆணைகள் / வழி காட்டுதல்கள்: காவல் துறையால் குற்றம் சாட்டப்பட்டவரை விசாரிக்க அதிகாரம் உள்ள நடுவர், அந்த குற்றத்தைப் புலன் கொள்வதற்கு முன், காவல் துறை ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவும், விசாரிக்கவும் உத்தரவிடலாம். அவ்வாறான ஒரு நீதிபதியின் உத்தரவுக்காக குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் நடுவருக்கு Cr.P.C. பிரிவு 156(3)–ன் கீழ் விண்ணப்பிக்கலாம்.

- தனியார் குற்ற விசாரணை: நடுவரின் முன், குற்றத்தால் பாதிக்கப்பட்ட ஒருவர் தனிநபர் குற்றவழக்குத் தொடர்வதன் மூலம், அந்த விசாரணையின் பளுவை ஏற்றுக் கொண்டு ( CrPC பிரிவு 2(D) இன் படி) நடுவர் முன் குற்றவாளியைத் தண்டிக்கக் கோரும் வழக்கைத் தொடரலாம்.

## 7. முதல் தகவல் அறிக்கை பதிவும் காவல் நிலைய எல்லை வரையறையும்:

குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் பூஜ்ய முதல் தகவல் அறிக்கையை குற்றம் நடந்த காவல் நிலைய எல்லையைத் தாண்டி, எந்த ஒரு காவல் நிலயத்திலும் பதிவு செய்யலாம். அவ்வாறான தகவல், உரிய காவல் நிலையத்துக்கு விசாரணைக்காக அனுப்பி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தல் வைக்கப்படும்.

காவல் நிலைய அதிகார எல்லையைக் காரணம் காட்டி, புலன்கொள்ளக் கூடிய குற்றம் பற்றிய முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ய மறுக்கக்கூடாது என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. காவல்துறை தேவையான நடவடிக்கை எடுத்து, விசாரணையைத் தொடங்கவேண்டும்.[8]

---

7 Sakiri Vasu v.State of UP (2008) 2 SCC 409; John CV alias John Peruvanthanam v.State of Kerala &Ors2008 Cri LJ 1305 (Ker).

8 See State of Andhra Pradeshv. Punati Ramalu AIR 1993 SC 2644; Satvinder Kaurv. State (Govt. of NCT of Delhi) AIR 1999 SC 3596; B.S. Sundareshv. State of Karnataka 2012 Cri LJ 1986 (Kant); and J Raghuraj Goud v. Sub-Inspector of Police Kukatpally 2005 Cri LJ 1301 (Kant).

Rasiklal Dalpatram Thakkar v. State of Gujarat and Ors[9] வழக்கில், உச்ச நீதிமன்றம் கூறியதாவது: CrPCன் 156(3) பிரிவின் படி நடுவரின் உத்தரவு இருக்கும் போது, அஹமதபாத் குற்றவியல் CID, இட வரையறையைக் காரணம் காட்டி புலன் விசாரணை செய்ய மறுப்பது கூடாது. குற்றக்காரணியின் ஒரு பகுதி, குஜராத் மாநிலத்தில் நடந்திருப்பதால், உச்ச நீதிமன்றம் பின் வருமாறு உத்தரவிட்டது:

- கற்றறிந்த நடுவருக்கு CrPC 156(3) பிரிவின் படி அவர் குற்றம் புலன் கொள்ளாமலே விசாரணைக்கு உத்தரவிட உரிமையுள்ளது. அப்போது நடத்தும் விசாரணையின் போது Cr.P.C. பிரிவு 156(1)–ன் கீழ் காவல்துறை அதிகாரிக்கு புலன் விசாரணை செய்ய மறுக்கும் உரிமை சிறப்பான விதிவிலக்கான சமயங்களில் தவிர சாதரணமாக இல்லை. இட வரையறையைக் காரணம் காட்டி, அவரது கருத்தின்படி விசாரணை செய்ய அவருக்கு உரிமை இல்லாத போதும், அவர் மறுக்கக் கூடாது.[10]

ஒன்றுக்கு மேற்பட்ட காவல் நிலையத்தின் இட வரையறையில் குற்றம் நடக்கலாம். உதாரணமாக, CrPC 178, 179 பிரிவுகளின் படி, அவ்வாறான குற்றத்தை விசாரிக்க அங்கு விசாரிக்க உரிமையுள்ள எந்த ஒரு நீதிமன்றமும் விசாரிக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட காவல் நிலையத்தின் அதிகார எல்லைகளில் குற்றம் நடந்திருந்தால், குற்றத்தால் பாதிப்புக்கு ஆளானவர், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் போது, இந்த தகவலை காவல் துறையினர் தெரிவிக்க வேண்டும். அவருக்கு விருப்பமான காவல் நிலையம் எது என்றும் காவல்துறை விசாரிக்க வேண்டும்.

## III நீதிமன்ற நடுவரின் பொறுப்புகள்:

CrPC பிரிவுகளின் படி, நடுவருக்குச் சிறப்பான பொறுப்புகளும் அதிகாரங்களும் உள்ளன, அவைகளுள் காவல் துறையினர் புகாரை வாங்கிக் கொள்ளாத போது, அப்புகாரை வாங்கிக் கொள்ளும் மன்றமாக செயல் படுவார். புலன்கொள்ளக் கூடிய குற்றம் பற்றித் தெரிவிக்கப்படும் தகவலை காவல்துறை முதல் தகவல் அறிக்கையாக பதிவு செய்யாமல் இருந்தால் பாதிக்கப்பட்டவருக்கு நீதிபதியை அணுக இரண்டு வழிகள் உள்ளன.

- புலன் கொள்வதற்கு முன்னால் விசாரணை நடத்த ஆணையிடல்:

CrPC-ன் 156(3) பிரிவின் படி, புலன் கொள்வதற்கு முன்னால் மட்டும், CrPCன் 190,200 மற்றும்204 பிரிவின் படியாக உள்ள குற்றத்தை புலன் விசாரனை செய்ய நீதிபதி உத்தரவு பிறப்பிக்கலாம்.

- புலன் கொண்ட பின்னால் CrPC-ன் 202 பிரிவின் படி, புலன் விசாரணை நடத்த ஆணையிடல்:

9 (2010) 1 SCC (Crl) 436
10 Ibid. at para 28.

மற்றும் உள்ள வழி என்னவென்றால், CrPC-ன் 190(1)(A) மற்றும் 2(D) பிரிவின் படி தனிநபர் புகார் மூலம், விசாரிக்கலாம். CrPC-ன் 190(1)(b) பிரிவின்படி, காவல்துறையினர் தரும் அத்தாட்சி மூலமாகவே நடுவர் புலன் கொள்ள இயலும், எனினும் தனிநபர் புகாரை நடுவர் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் அது CrPCன் 190(1)(A) பிரிவின் படியான தனிநபர் குற்ற விசாரணையாக அதைக் கருதி CrPCன்200, 202 பிரிவின் விதிகளின்படி, விசாரணையை நடத்த வேண்டும்.[11]

CrPCன் 190 பிரிவின் படியான தனிநபர் புகாராக அதைக் கருதி விசாரணையை நடத்தினால் CrPCன் 156(3) பிரிவின் படியான விசாரணைக்கு இடமில்லை. இருந்தாலும் CrPCன் 202 பிரிவின் படி, விசாரணை நடத்த ஆணையிடலாம்

தனிநபர் புகாரை நடுவர் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் அவர் பின் வரும் வழியில் ஏதேனும் ஒன்றை பின் பற்றலாம்.

- அவர் புகாரை நேரடியாக விசாரிக்கலாம். போதுமான முகாந்திரம் இருப்பதாக அவர் திருப்தியடையும் பட்சத்தில், குற்றம் சாட்டப்பட்டவரை விசாரிக்க உத்தரவிடலாம். ஆனால் அதற்கு முன் CrPCன் 202 பிரிவின் படியான விதிமுறைகள் பின்பற்றப் பட வேண்டும். புகார் அளித்தவர் அல்லது அவரது சாட்சியின் வாக்குமூலம் பதியப்படவேண்டும்.
- வழிமுறைகள் பின்பற்றுவதை தள்ளி வைத்துவிட்டு, அவர் நேரடியாகவே விசாரணைக்கு உத்தரவிடலாம்.
- வழிமுறைகள் பின்பற்றுவதை தள்ளி வைத்துவிட்டு, அவர் மற்றொருவர் மூலமாகவோ அல்லது காவல்துறை மூலமாகவோ விசாரிக்கவும் உத்தரவிடலாம்

ஆனால் CrPC-ன் 375,376 பிரிவுகளின் படி, அமர்வு நீதிமன்றம் மூலமாகவே விசாரிக்கத் தகுந்த வன்புணர்ச்சி முதலியவற்றை, குற்றத்தை புலன் கொண்ட பின்னால், காவல்துறையினர் விசாரிக்க நடுவர் உத்தரவிட முடியாது.[12]

## 1. காவல்துறையினர் நடவடிக்கை எடுக்கவில்லையானால் இருக்கும் பரிகாரம்:

குற்றம் சாட்டப்பட்டவர் ஓர் காவல் அதிகாரியாகவோ, உள்ளூர் காவல் நிலைய அதிகாரியாகவோ இருக்கும் பட்சத்தில் மற்றும் சுதந்திரமான முறையில் நியாமான விசாரணை நடக்காது என்ற கவலையோ இருக்குமானால், இந்திய அரசியல் சாசன சட்டப் பிரிவு 226ன் கீழ் உயர் நீதி மன்றம் தலையிட வேண்டி உயர் நீதி மன்றத்தை அணுகலாம்.

11 See Tula Ram and Ors v. Kishore Singh AIR (1977) SC 2401
12 Ibid.

குற்றம் நிகழ்ந்ததிற்கு ஆதாரமான தடயங்களை மறைத்தோ, கலைத்தோ, அழித்தோ அல்லது CrPCன் 161 பிரிவின் படி பொய் சாட்சியங்களின் வாக்குமூலம் மூலமாகவோ, காவல்துறையினர் வழக்கின் இறுதி அறிக்கையையோ, முடிவு அறிக்கையையோ, வேண்டுமென்றே செய்தால் நியாயமான விசாரணை நடக்கக் கோரியும், விசாரனை அதிகாரியை மாற்றவோ அல்லது விசாரணைத் துறையை மாற்றக் கோரியும், ரிட் மனு தாக்கல் செய்யலாம்.[13]

முதல் பார்வையிலேயே (prima facie ) குற்றம் நடந்து உள்ளதாக கருத இடமிருப்பதாக நிலைநாட்டப்பட்டு,[14] விபரீதமான சூழ்நிலையில் குற்றம் சாட்டப்பட்டவற்கெதிராக, அவரது பதவி மற்றும் அதிகாரத்தால் நடுநிலையான நீதிமுறைப்படியான விசாரணை நடக்காது என்று நீதி மன்றம் கருதுமானால், புகார் அளித்தவற்கு நியாயமான விசாரணை நடக்காது என்றும், வேறு சரியான வழி இல்லையென்றால் உயர்நீதிமன்றம் CBI விசாரணைக்கும் கூட உத்திரவிடலாம்.[15] உயர்நீதிமன்றம், தனக்குள்ள உள்ளார்ந்த அதிகாரத்தினைப் பயன்படுத்தி, CrPC-ன் 173 (8)–ன் பிரிவிற்கு கட்டுப்படாமல் மறு ஆய்வுக்கும் கூட உத்திரவிடலாம்.[16]

CrPCன் 309ன் உள் பிரிவின்படி, IPCன் 376,376A, 376B,376C, 376D ன் பிரிவின்படி உள்ள வழக்குகளில், நீதிமன்ற ஆய்வுக்கான விசாரணையை, நீதிமன்ற விசாரணையை,, கூடிய மட்டிலும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த தேதியிலிருந்து, இரண்டு மாதங்களுக்குள் முடிக்க வேண்டும்.

## IV. புலனாய்வு

CrPCன் 2(H) பிரிவின்படி புலனாய்வு பின் வருமாறு விவரிக்கப்படுகிறது: இச்சட்டப்படியான அனைத்து விவரங்களையும், சாட்சியங்கள், தடயங்களையும் காவல் துறை அதிகாரியோ அல்லது நடுவரால் இதன் பொருட்டு நியமிக்கப்பட்ட, நடுவர் அல்லாத ஒருவரோ சேகரித்தல்

- புலன் கொள்ளக் கூடிய குற்றம் நடந்தவுடன், அந்த குற்றம் பற்றி தகவல் கிடைத்தவுடன், காவல்துறையினர், உடனடியாக புலன் விசாரணையைத் துவங்க வேண்டும். அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டாலோ அல்லது அவர்களுக்கு நடந்ததாக தகவல் தெரிய வந்தாலோ, காவல்துறையினர் உடனடியாக புலன் விசாரணையைத் தொடங்க வேண்டும். தகவல் தெரிவிக்கப்பட்டால்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காவல்துறையினரை, CrPCன் 156 பிரிவு கட்டுப்படுத்தவில்லை.

---

12 J Prabhavathiamma v. The State of Kerala &0rs 2008 Cr LJ 4559 (Ker).
14 Minor Irrigation & Rural Engineering Services v. Sangkoo Ram Arya AIR 2002 SC 2225.
15 State of Punjab v. Davinder Pal Singh 2012 Cri LJ 1001 (SC).
16 State of Punjab v. Central Bureau of Investigation &0rs 2011 Cr LJ 4928 (SC).

- புலனாய்வின் போது நடந்த முறை கேடுகளோ, அல்லது சட்டமீறல்களோ கூட, அரசின் குற்ற விசாரணையை மறுக்க ஒரு அடிப்படையாக ஆக முடியாது என்பது இப்போது நன்கு நிலை நிறுத்தப்பட்டுள்ளது. தவறான புலனாய்வு ஒரு குற்றம் சாட்டப்பட்டவரை விடுதலை செய்ய தகுந்த அடிப்படையாகாது.

## 1. புலனாய்வின் பல்வேறு படிகள் / நிலைகள்.

உச்சநீதிமன்றம் காவல்துறையினரின் புலனாய்வில் பின் வரும் படிகள் உள்ளதாக கூறியுள்ளது.[17]

- குற்றம் நடந்த இடத்துக்கு செல்லுதல்
- வழக்கின் உண்மை விவரங்களையும், சூழ்நிலை குறித்த தகவல்களையும் சேகரித்தல்
- குற்றம் புரிந்தவராக சந்தேகத்திற்குரியவரைத் தேடிக் கண்டுபிடித்து அவரைக் கைது செய்தல்
- குற்றம் நடந்ததிற்கான தடயங்கள், சாட்சிகள் சேகரித்தல். அதில் பின்வருவன அடங்கும்: குற்றம் சாட்டப்பட்டவர் உள்பட பலரிடம் விசாரணை நடத்தி, தேவையானால் அவர்களுடைய வாக்கு மூலங்களை எழுதி வாங்குதல்: புலனாய்வுக்குத் தேவையான இடங்களைச் சோதனையிடல், தேவையான தடயங்களைக் கைப்பற்றுதல் அவ்வாறு கைப்பற்றியவைகளை வழக்கு விசாரணையின் போது தாக்கல் செய்தல்
- சேகரித்த விவரங்களின் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டவரை நடுவரின் முன் விசாரணைக்காக ஆஜர்படுத்துவது குறித்து ஒரு முடிவுக்கு வருதல். அவ்வாறாயின் CrPC 173 பிரிவின்படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

டெல்லி காவல்துறையின் நிலையாணை எண்: 303/2010–ன் படி, குற்றம் இழைக்கப்பட்டவருக்கு, வழக்கில் நடக்கும் முன்னேற்றம் குறித்து தெரிவிக்க வேண்டும். புலன் விசாரணை செய்யும் அதிகாரி குறிப்பிட்ட விஷயங்களை குறித்தோ அல்லது எழுத்து மூலமாகவோ குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் தெரிவித்தால் அதை புலன் விசாரணை செய்யும் அதிகாரி அதனைக் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

## 2. ஆரம்ப கட்ட முதல் தகவல் அறிக்கைக்கு முந்தைய காவல் துறையின் புலன் விசாரணை:

லலிதகுமாரி[18] சம்பந்தப்பட்ட வழக்கில் உச்சநீதிமன்றம் கூறியதாவது: முதல்நிலை விசாரணை என்பது நடந்ததாக கூறப்படும் குற்றம், புலன் கொள்ளக் கூடிய குற்றமா இல்லையா என்பதைக் கண்டறிய மட்டுமே இருக்கலாம். நடந்ததாக கூறப்படும் குற்றம், புலன் கொள்ளக் கூடிய குற்றமாக வெளிப்படாத மாதிரியாக இருந்த போதும், விசாரணை தேவையென்றால், புலன் கொள்ளக் கூடிய குற்றமாக வெளிப்பட்டதா இல்லையா என்பதை அறிய மட்டுமே விசாரணை செய்யலாம்.

17 H.N. Rishbud v. State of Delhi AIR 1955 SC 196.
18 Supra, n. 5.

முதல்நிலை விசாரணை நடத்தும் காவல்துறை அதிகாரி, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யுமுன்னர் உச்சநீதிமன்ற வழிகாட்டுதல்படி வழக்கை முடிக்க வேண்டினால், அதை கூடிய விரைவில் செய்ய வேண்டும். அதை புகார் கொடுத்தவருக்கு அவர் எழுத்து மூலமாகத் தெரிவிக்க வேண்டும். விருப்பப்பட்டால் புகார் கொடுத்தவர் Cr.P.C. 156(3) பிரிவின்படி தக்க நீதி கோரி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவு வேண்டி நீதிமன்ற நடுவரை அணுகலாம். லலிதகுமாரி சம்பந்தப்பட்ட வழக்கில் உச்சநீதிமன்றம் மேலும் கூறியதாவது: முதனிலை விசாரணையுடன் வழக்கை முடித்தால், அவ்வாறு முடித்ததை பதிவு செய்த விவரத்தை, புகார் அளித்தவருக்கு உடனடியாகவோ அல்லது ஒரு வார காலத்துக்குள் கொடுக்க வேண்டும். வழக்கை மேற்கொண்டு விசாரிக்கமல் முடிப்பதற்கான தகுந்த காரணங்களை சுருக்கமாகக் கூற வேண்டும்.

### 3. புலன் விசாரணையின் படிகள்:

CrPC 173–ன் படி தேவையற்ற காலதாமதமில்லாமல் புலன் விசாரணையை முடிக்க வேண்டும்.

CrPC 173(1A)–ன் படி, சிறார் பாலியல் வன்புணர்ச்சி செய்யப்பட்ட வழக்கில், காவல் அதிகர்ரியால் தகவல் பதியப்பட்ட தினத்திலிருந்து, மூன்று மாதத்திற்குள் புலன் விசாரணையை முடிக்க வேண்டும்.

CrPC 157–ன் படி, காவல் நிலைய பொறுப்பாளரோ அல்லது அவரால் நியமிக்கப்பட்ட வேறு காவல்துறை அதிகாரியோ குற்றம் நடந்த இடத்துக்கு சென்று, வழக்கின் விவரங்களையும்,உண்மைகளையும் சேகரித்து, தேவையானால் குற்றம் புரிந்தவரைத் தேடிக் கண்டுபிடித்து அவரைக் கைது செய்ய அதிகாரம் உள்ளவர். மேலும் அவர் சம்பந்தப்பட்ட அதிகாரம் உள்ள நடுவருக்கு, தகுந்த அறிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டும். CrPC 159–ன் படி, காவல்துறை அறிக்கை கிடைக்கப்பெற்ற நடுவர் புலன் விசாரணைக்கு உத்தரவிடலாம். அவரே கூட நேரடியாக முதல்நிலை விசாரணை நடத்தலாம் அல்லது தள்ளுபடி செய்யலாம். அவர் இதற்காக வேறு ஒருவரையும் நியமிக்கலாம்.

புலன் கொள்ளக் கூடிய குற்றங்களில், காவல் துறையினர், Cr.P.C. பிரிவு 154ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தபின், புலனாய்வின் போது, 156 பிரிவின்படி, ஆய்வு நடத்தி, சாட்சியங்களை கைப்பற்ற 100 மற்றும் 165 பிரிவுகளில் இடமுண்டு. குற்றம் புரிந்தவருக்கு எதிராக உள்ள சாட்சியங்களையும் சேகரிக்கலாம்.

குற்றம் சாட்டப்பட்டவரைக் கைது செய்து போலீஸ் காவலில் வைத்து அவரை விசாரித்து, குற்றம் எவ்வாறு, எங்கு நடந்ததென்று தெரிந்து கொள்ளலாம். குற்றம் சாட்டப்பட்டவர், விசாரணையின் போது, குற்றத்தை ஒப்புக்கொள்ளும் போது கிடைத்த விவரங்களின் அடிப்படையில், ஆதாரமாகக் கூடிய தடயங்கள் கிடைக்கும் பட்சத்தில், அவருக்கு எதிராக அவற்றை பயன் படுத்தலாம். தேவையானால், Cr.P.C. பிரிவு 167(2)–ன் படி நடுவர் உத்தரவு பெற்று அவரை போலீஸ் காவலில் எடுக்கலாம்.

Cr.P.C. பிரிவு 167–ன் படி அருகாமையில் இருக்கும் நடுவர் குற்றம்சாட்டப்பட்டவரை நீதிமன்றக் காவலிலோ அல்லது போலீஸ் காவலிலோ வைக்கலாம்.

பாதிக்கப்பட்டவரின் சார்பாக அரசு CrPC 173–ன் படி வழக்கு, நீதி விசாரணைக்கு தேவையான தகவல்களை ஒரு தகுந்த அறிக்கை மூலமாக மட்டுமே காவல் துறையினர், தங்கள் பரிந்துரையுடன், விரைவாக, சேகரித்து சமர்ப்பிக்க வேண்டும்.

CrPC 157–ன் படி, பாலியல் வன்புணர்ச்சி செய்யப்பட்ட வழக்கில், குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் வாக்குமூலம் வாங்கும்போது பின்பற்றப்பட வேண்டிய சிறப்பு நடைமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்படும் வாக்குமூலம் அவருடைய வீட்டிலோ அல்லது அவருக்கு ஏற்புடைய ஒரு இடத்திலோ பதியப்படவேண்டும். கூடிய மட்டும், ஒரு பெண் அதிகாரி அவ்வாக்குமூலத்தை, அவளுடைய பெற்றோர் அல்லது பாதுகாவலர், நெருங்கிய உறவினர் அல்லது அவ்விடத்தில் உள்ள சமூக ஆர்வலர் முன்னிலையில் பதிவு செய்ய வேண்டும்

மேலும், 2013 இல் கொண்டுவரப்பட்ட குற்றவியல் திருத்த சட்டத்தின் படி, CrPC161(3)–ன் படியும் IPC பிரிவு 354, 354A, 354B, 354C, 354D, 376E, அல்லது 509 படி பாதிக்கப்ட்ட பெண் கொடுக்கும் புகார்கள், தகுந்த பெண் காவல் அதிகாரி அல்லது பெண் அதிகாரியினால் மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும்

## 4. நியாயமான காவல்துறை விசாரணை.

பொதுவாக, பெண்களுக்கெதிரான குற்றங்களில் மிகக் குறைந்த அளவு விசாரணையை நடத்தி காவல்துறை அறிக்கை சமர்பிக்கிறது. பெரும்பாலான வழக்குகளில், குற்றம் சாட்டப்பட்டவர் விடுதலையாக, காவல்துறையின் போதுமான விசாரணை, சாட்சிகள் இல்லாமையே காரணமாகும். நீதிமன்றங்கள், நடைமுறை நடப்புகளைக் கருத்தில் கொண்டு, விசாரணையின் போது குற்றம் சாட்டப்பட்டவருக்கு, பலன்களை அளிப்பதை தவிர்க்கின்றன. அதை விளக்கும் இரண்டு உதாரணங்கள் (1) குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்தால் போதுமானது. (2) குற்றம் சாட்டும் தரப்பில் உள்ள குற்றச்சாட்டுக்கு ஆதரவான சாட்சியத்தின் வாக்குமூலத்தை CrPC பிரிவு 311 ன் கீழ் பதிவு செய்ய அனுமதித்தல்.

## 5. வாக்குமூலம் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம்:

**சாட்சியின் விசாரணை மற்றும் வாக்குமூலம்:** புலனாய்வின் போது, குற்றமிழைக்கப்பட்டவர், சாட்சி அல்லது சம்பவம் குறித்து உண்மையறிந்த எந்த ஒரு நபரின் வாக்குமூலத்தையும் காவல்துறையினர் பதிவு செய்யலாம். மற்றும், CrPC பிரிவு 157, 161–ன் படி, ஒரு பெண் காவல்துறை அதிகாரி மட்டுமே வன்புணர்ச்சி தொடர்பான குற்றமிழைக்கப்பட்டவர் வாக்குமூலத்தை பதிவு செய்யலாம்.

CrPC பிரிவு 161–ன் படி சம்பவம் குறித்து உண்மையறிந்த எந்த ஒரு நபரையும் காவல்துறை அதிகாரி வாய் வழி விசாரணை நடத்தலாம். CrPC 160–ன் படி, தனது எல்லைக்குட்பட்ட எந்த ஒரு நபரையும் ஆஜராகுமாறு உத்தரவிடலாம். அவ்வாறு அழைக்கப்பட்ட நபர், அவரை தண்டனைக்கு உள்ளாக்கும், குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கும், உரிமையைப் பறிக்கும் விஷயம் தவிர மீதி விஷயங்களில், உண்மையான பதிலையே அளிக்க கடமைப்பட்டவர்.

2013ம் ஆண்டின் குற்றவியல் திருத்த சட்டத்திற்குப் பின், CrPC 160–ன் உள்பிரிவின் படி, எந்த ஒரு அதிகாரியும் அவள் வீடல்லாத மற்ற எந்த இடத்திலும் விசாரணைக்கு ஆஜர் ஆக வேண்டும் என ஒரு பெண்ணை வற்புறுத்தக்கூடாது.

அவளை விசாரிக்கும் போது சொல்லும் தகவல்களை காவல் துறையினர் எழுத்து மூலம் பதிவு செய்யலாம். Cr.P.C பிரிவு 161(3)–ன் படி, அவ்வாறு பதிவு செய்யும் போது, ஒவ்வொரு நபருக்கும் தனித்தனியாகவும், உண்மையானதாகவும், தகவல்கள் இருக்க வேண்டும். ஆனால், Cr.P.C பிரிவு 162(1)–ன் படி, தகவல்களை காவல் துறையினர் எழுத்து மூலம் பதிவு செய்யும் போது தகவல் தருபவரிடம் கையெழுத்து வாங்கக் கூடாது.

Cr.P.C பிரிவு 161–ன் படி, குற்றத்தால் பாதிக்கப்பட்டவரிடம் வாங்கும் வாக்குமூலத்தை, வழக்கு விசாரணையின் போது அரசுதரப்பு சாட்சியமாக பயன்படுத்தக் கூடாது.

Cr.P.C பிரிவு 161–ன் படி, குற்றத்தால் பாதிக்கப்பட்டவரிடம் வாக்குமூலம் வாங்கும்போது, முழுமையாக அவர் நினைவுபடுத்தி விவரிக்க அவரிடம் வெவ்வேறு சமயங்களில் வாக்குமூலம் வாங்குவது நலம். மேலும் அவர் வாக்குமூலத்தில் ஏதாவது சொல்லாமல் விட்டுப் போயிருந்தால், நடுவர் முன்னிலையில் அதைப் பதிவு செய்ய Cr.P.C பிரிவு 164–ல் இடமுண்டு.மற்றும் Cr.P.C பிரிவு 161–ன் படியான வாக்கு மூலத்தில் சொல்லப்பட்டுள்ள அனைத்து விபரங்களையும், நடுவர் முன்னிலையில் அதைப் பதிவு செய்ய Cr.P.C பிரிவு 164–ன் படி செய்வது அவசியம்.

குற்றதண்டனை விசாரணைக்காக அழைக்கப்பட்ட சாட்சியின், எழுதிவாங்கப்பட்ட வாக்குமூலத்தின் ஒரு பகுதியோ அல்லது முழுமையாகவோ உண்மை என்று நிரூபிக்கப்படும் பட்சத்தில் அதனை குற்றம் சாட்டப்பட்டவர் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ மறுக்கலாம். (Cr.P.C 162–ன் உப பிரிவின் படி)

Cr.P.C பிரிவு 161–ன் படி, குற்றத்தால் பாதிக்கப்பட்டவரிடம் வாங்கும் வாக்குமூலத்தை ஒலியாகவும் காணொலியாகவும் பதிவு செய்யலாம்.

Cr.P.C பிரிவு 161–ன் படி, வாங்கும் பொய்யான அல்லது துல்லியமற்ற அல்லது முற்றுப்பெறாத வாக்கு மூலத்தை சரி செய்ய வழியுண்டு. அதை நடுவர் முன்னிலையில் சரியாகப் பதிவு செய்ய Cr.P.C பிரிவு 164–ல் இடமுண்டு.

**நடுவர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம்:** பெருநகர அல்லது குற்றவியல் நடுவர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கலாம். Cr.P.C பிரிவு 164(1)–ன் படி இங்கு அதிகார எல்லை ஒரு தடையில்லை. ஆனால் இதை புலனாய்வின் போது, விசாரணை துவங்குவதற்கு முன்பு மட்டுமே செய்யலாம். அவ்வாறு பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தை Cr.P.C 164(6)–ன், படி வழக்கை விசாரிக்க வேண்டிய பெருநகர அல்லது குற்றவியல் நடுவருக்கு முறையாக அனுப்பி வைக்கவேண்டும்.

அவ்வாறு ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க வந்தவர், வாக்குமூலம் அளிக்க விருப்பமின்மை தெரிவித்தால், அவரை கைது செய்து சிறையிலடைக்க நடுவர், Cr.P.C 164(3)–ன் படி உத்தரவு அளிக்கக் கூடாது.

அவ்வாறு ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க வந்தவருக்கு, நடுவர், அவ்வாறு ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதையும், அவ்வாறு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தால் அதை அவருக்கு எதிராக சாட்சியாக பயன்படுத்தப்படும் என்பதையும் விளக்க வேண்டும். மேலும் அவ்வாறு அளிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம், தானாகவே முன்வந்து அளிக்கப்படுவதையும் அவர். Cr.P.C பிரிவு 164(2)–ன் படி நன்கு விசாரித்து அது உண்மையென்று நம்பிய பிறகே அதை பதிவு செய்ய வேண்டும்.

ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க வந்தவர், அளிக்கும் ஒப்புதல் வாக்குமூலத்தை ஒலியாகவும் காணொலியாகவும், குற்றம் சாட்டப்பட்டவரின் வழக்கறிஞர் முன்னிலையில் பதிவு செய்யலாம்.

Cr.P.C பிரிவு 164(1)–ன் கிளைப்பிரிவின்படி, நடுவரின் அதிகாரம் கொடுக்கப்பட்ட காவல்துரை அதிகாரி குற்றம் சாட்டப்பட்டவரின் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ய இயலாது.

**ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தல்:** நடுவரின் முன்னிலையில் அளிக்கும் ஒப்புதல் வாக்குமூலத்தை அவர். Cr.P.C 164–ன் படி பதிவு செய்ய வேண்டும். மேலும் நடுவர் Cr.P.C பிரிவு 164(4)–ன் படி, ஒப்புதல் வாக்குமூலத்தை முறையாகப் பட்டியலிடல் வேண்டும்.

**நடுவர் முன்னிலையில் அளிக்கப்படும் வாக்குமூலம்:** பெருநகர அல்லது குற்றவியல் நடுவர் முன்னிலையில் வாக்குமூலம் அளிக்கலாம். Cr.P.C 164–ன் படி இங்கு அதிகார எல்லை ஒரு தடையில்லை. ஆனால் இதை புலனாய்வின் போது, விசாரணை துவங்குவதற்கு முன்பு மட்டுமே செய்யலாம். அவ்வாறு பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தை Cr.P.C 164(6)–ன், படி வழக்கை விசாரிக்க வேண்டிய பெருநகர அல்லது குற்றவியல் நடுவருக்கு முறையாக அனுப்பி வைக்கவேண்டும்.

ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க வந்தவர், அளிக்கும் ஒப்புதல் வாக்கு மூலத்தை ஒலியாகவும் காணொலியாகவும், குற்றம் சாட்டப்பட்டவரின் வழக்கறிஞர் முன்னிலையில் பதிவு செய்யலாம்.

POCSO சட்டத்தில் அளிக்கப்பட்ட விலக்கு: Cr.P.C 164–ன் படி குழந்தையின் வாக்குமூலத்தை பதிவு செய்யும் போது, POSCO சட்டத்தின் 25வது பிரிவின்படி சிறார் கூறுவதைப்போலவே பதிவு செய்யலாம். மேலும் குற்றம் சாட்டப்பட்டவரின் வழக்கறிஞர் முன்னிலையில் பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை.

**பாதிக்கப்பட்ட பெண்ணின் வாக்குமூலம்:** Cr.P.C பிரிவு 164(5A) (a) பிரிவின் படி, ஒரு காவல்துறைக்கு குற்றம் நடந்ததாக தகவல் தெரிவிக்கப்பட்டவுடன், 354, 354C, 354A, 354H, 354D, 376, 376A, 376H, 376C, 376E அல்லது 509 பிரிவுகளின் படி குற்றம் பற்றிய தகவல்களை நடுவர் முன்னிலையில் குற்றத்தால் பாதிக்கப்பட்டவருடைய வாக்குமூலத்தைப் பதிவு செய்ய வேண்டும்.

**மாற்றுத்திறனாளிகள் வாக்கு மூலத்தை பதிவு செய்தல்:** மேற்கூறப்பட்ட பாலியல் குற்றத்தால் பாதிக்கப்பட்ட பெண் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ, மனதளவிலோ அல்லது உடல் அளவிலோ மாற்றுத்திறனாளியாக இருந்தால், நடுவர் Cr.P.C-ன் 164(5A)(A) உபப்பிரிவின் படி, திறமையுள்ள, தகுதிவாய்ந்த மொழிபெயர்ப்பாளர் அல்லது தகுந்த சிறப்பு கல்வியாளர் ஒருவரையாவது வாக்குமூலம் பதிவு செய்யும் போது பயன் படுத்திக் கொள்ளலாம். அவ்வாறு வாக்குமூலம் பதிவு செய்யும் போது அதை வீடியோ பதிவு செய்யவும் வேண்டும்.

Cr.P.C பிரிவு 164(5A)(b) பிரிவின் படி மாற்றுத்திறனாளியின் வாக்குமூலம், முதன்மை விசாரணையாகக் கொள்ளப்படும். இந்திய சாட்சிச் சட்டம் 1872–ன் பிரிவு 137ன் படியான முதன்மை விசாரணையாக இது கொள்ளப்படும். ஆகவே இதன் அடிப்படையில் பாலியல் குற்றத்தால் பாதிக்கப்பட்ட பெண்ணைக் குறுக்கு விசாரணை செய்யலாம்.

## 6. பாலியல் குற்றத்தால் பாதிக்கப்பட்ட பெண்ணை மருத்துவப்பரிசோதனை செய்தல்:

**ஒப்புக்கொண்டால் மட்டுமே மருத்துவப்பரிசோதனை:** பாலியல் குற்றத்தால் பாதிக்கப்பட்ட பெண் அல்லது அவளுக்காக ஒப்புதல் அளிக்க தகுதியுள்ளவர் அளிக்கும் ஒப்புதலின் பேரிலேயே பாலியல் குற்றத்தால் பாதிக்கப்பட்ட பெண்ணை மருத்துவப்பரிசோதனை செய்யலாம் Cr.P.Cன் 164A(7)–ன் படி, அவ்வாறு ஒப்புதல் இல்லாமல் செய்யப்படும் மருத்துவப்பரிசோதனை Cr.P.Cன் 164A–ன் படி சட்டப்படியானதாகவோ, ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவோ ஆகாது.

**சிறாரின் மருத்துவப்பரிசோதனை:** சிறாரின் பெற்றோர் அல்லது காப்பாளரின் அனுமதியுடன் செய்யப்படும் மருத்துவப்பரிசோதனை மற்றும் மருத்துவ உதவி POSCO சட்டத்தின் கீழ் குற்றமல்ல என்று POCSO சட்டட்தின் 41 பிரிவு கூறுகிறது.[19] ஆனால் அவ்வாறு அனுமதி அளிக்கத்தக்க வயதை தீர்மானமாக POCSO சட்டம் சொல்லவில்லை. IPCயின் பிரிவு 90 சம்மதம் குறித்து கூறுவது. சாதாரணமாக சம்மதம் என இச்சட்டத்தின் எந்தப் பிரிவுகளின் கீழும் சம்மதமாகக் கொள்ளப்படாது. அவ்வாறு பெறப்படும் சம்மதம் காயம் ஏற்படுத்தும் வகையில் பயமுறுத்தி பெறப்படுவது, அல்லது உண்மையை திரித்துக் கூறி பெறுவது. மற்றும் சம்மதம் பெற்ற நபர் நன்றாகத் தெரிந்தோ அல்லது நம்பத்தக்க காரணங்களால் இச்சம்மதம் பயம் அல்லது தவறாகக் கருதி கொடுக்கப்பட்டது. அல்லது...

---

19 Section 41: Provisions of sections 3 to 13 not to apply in certain cases:
The provisions of sections 3 to 13 (both inclusive) shall not apply in case of medical examination or medical treatment of a child when such medical examination or examination or medical treatment is undertaken with the consent of his parents or guardian.

சிறாரின் சம்மதம் : 12 வயதுக்கு கீழ் உள்ள சிறார் கொடுக்கும் சம்மதம் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

ஆகவே சிறாருக்கு மருத்துவப்பரிசோதனை மற்றும் மருத்துவ உதவி அளிக்க மற்றும் சாட்சியங்களை சேகரிக்க ஒப்புதல் கொடுக்க தேவையான குறைந்தபட்ச வயது 12 ஆக உள்ளது. எனினும் நடைமுறையில் 12 முதல் 15 வயதிற்குட்பட்ட சிறாரின் ஒப்புதல் கொடுக்க தேவையான குறைந்தபட்ச முதிர்ச்சியை மருத்துவர் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம்.

Cr.P.C-ன் பிரிவு 164 (A)–ன் படி, அவ்வாறான மருத்துவப் பரிசோதனையை தகவல் கிடைத்த 24 மணி நேரத்துக்குள் செய்யப்படவேண்டும்.

**மருத்துவப் பரிசோதனை அறிக்கை:** Cr.P.C-ன் பிரிவு 164(1)–ன் படி, முறைப்படி பதிவு செய்யப்பட்ட மருத்துவரால் மட்டுமே மருத்துவப் பரிசோதனை செய்யப்படவேண்டும். மருத்துவப் பரிசோதனையின் ஆரம்ப மற்றும் முடிவு நேரத்தையும், எடுக்கப்பட்ட ஒவ்வொரு முடிவிற்கும் தகுந்த காரணத்தையும் முறையே Cr.P.C-ன் பிரிவு 164A(5), மற்றும் உட்பிரிவு (3)–ன் படி தெளிவாக கூற வேண்டும். Cr.P.C-ன் பிரிவு 164A(2), முறைப்படி பதிவு செய்யப்பட்ட மருத்துவர் காலதாமதமில்லாமல் மருத்துவப் பரிசோதனையை செய்ய வேண்டும். அவரது அறிக்கையில் பின்வரும் விபரங்கள் இருக்க வேண்டும்:

- பெண்ணின் பெயர் மற்றும் முகவரி
- அவளை அழைத்து வந்தவர் பெயர் மற்றும் முகவரி
- பெண்ணின் வயது
- DNA விற்காக கொள்ளப்படும் பெண்ணின் பொருள் குறித்த விவரம்
- பெண்ணின் பொதுவான மன நிலை
- தேவையான இதர விபரங்கள் போதுமான அளவில்

மருத்துவர் கால தாமதமில்லாமல் மருத்துவப் பரிசோதனை அறிக்கையை புலன் விசாரணை அதிகாரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். அவர் அத்தகவல்களை நடுவருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**பாதிக்கப்பட்டவருக்கு மருத்துவ உதவி:** IPC 326A, 376, 376A, 376B, 376C, 376D, 376E ஆகியவற்றின் கீழ் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு CrPC பிரிவு 357C இன் படி அனைத்து தனியார், பொது மற்றும் அரசு, உள்ளாட்சியினரால் நடத்தப்படும் மருத்துவமனைகளிலும் உடனடியாக முதலுதவி அல்லது சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். அவ்வாறு நடந்ததைப் பற்றி உடனடியாக காவல் துறையினருக்கும் அவர்கள் தெரிவிக்கவேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால், IPC 166B–ன் படி ஓராண்டு வரையிலான சிறைத்தண்டனை அல்லது அபராதத் தொகை அல்லது இரண்டும் சேர்த்து செலுத்த நேரிடும்.

கட்டாய தகவல் அறிவிப்பு: POCSO சட்டம் 19 பிரிவின்படி சிறார் பாலியல் வன்புணர்ச்சி அல்லது பிற பாலியல் குற்றங்கள் விஷயத்தில், குற்றம் நடந்துள்ளதை பற்றி அறிந்துள்ளவர்கள், மருத்துவர் மற்றும் மருத்துவமனைகள் உள்பட அனைவரும் அவ்விஷயத்தை உள்ளூர் காவல்துறைக்கோ அல்லது சிறப்பு சிறார் காவல் பிரிவிற்கோ POCSO சட்டம் 19 பிரிவின்படி கட்டாயம் தகவல் தெரிவிக்க வேண்டும்.அவ்வாறு செய்யத் தவறினால் POCSO சட்டம் 21 பிரிவின்படி சிறைத் தண்டனை அல்லது அபராதத்தொகை செலுத்த நேரிடும்.

POCSO சட்டம் 21 பிரிவின்படியான இக்குற்றம் புலன் கொள்ளத் தக்கதல்ல. அவ்வாறான ஒரு குற்றத்தை காவல்துறையினர் Cr.P.C. பிரிவு 155(2)–ன் கீழான நடுவர் விருப்ப அனுமதி இல்லாமல் புலனாய்வு செய்ய இயலாது.

மருத்துவர் மற்றும் மருத்துவமனைகள் IPC 357C–ன் படி உடனடியாகவும், பொதுமக்கள் POCSO சட்டம் 19 பிரிவின்படி கட்டாயம் தகவல் தெரிவிக்க வேண்டும்.

சட்ட விதிமீறல் நடக்கக் கூடுமென்று சந்தேகிப்பவருக்கு அல்லது அவ்வாறு சட்ட விதி மீறல் நடந்துள்ளதை பற்றி அறிந்துள்ளவருக்கு அதற்கு தகுந்த அடிப்படை அல்லது ஆதாரம் இருக்க வேண்டும். வழிப்போக்கர்களிடமிருந்து செவிமடுத்த புரளிகள் போதுமான ஆதாரம் ஆகாது.

## 7. குற்றம் சாட்டப்பட்டவருக்கான மருத்துவப் பரிசோதனை:

**காவல்துறையின் வேண்டுகோளுக்கிணங்க:** Cr.PC பிரிவு 53–ன் படி குற்றம் சாட்டப்பட்டவரை மருத்துவப் பரிசோதனை செய்ய இயலும். புரிந்த குற்றத்தின் தன்மையும், குற்றம் நிகழ்ந்த சூழ்நிலையும், குற்றம் சாட்டப்பட்டவரை மருத்துவப் பரிசோதனை செய்வது, குற்றம் தொடர்பான சாட்சியாக இருக்கக் கூடுமாயின், காவல் துறை மருத்துவப் பரிசோதனை செய்ய கோரலாம். ஆகவே இந்தப் பிரிவு எந்த ஒரு குற்றத்தையும் பரிசோதிக்க அனுமதிக்கிறது, காவல்துறை இதை பயன் படுத்தக்கூடும். CrPC பிரிவு 53–ன் படி. உதவி ஆய்வாளருக்குக் குறையாத பதவி வகிக்கக்கூடிய எந்த ஒரு காவல்துறை அதிகாரியும், பதிவு செய்யப்பட்ட ஒரு மருத்துவரை கைது செய்த எந்த ஒருவரையும் பரிசோதிக்க கோரலாம்.

ஆனால் கைது செய்யப்பட்டவர் ஒரு பெண்ணாயின், அவரை ஒரு பெண் மருத்துவரோ அல்லது ஒரு பெண் மருத்துவரின் முன்னிலையிலோ தான் மருத்துவப் பரிசோதனை செய்ய வேண்டும்.

## 8. வன்புணர்ச்சி குற்றம் சாட்டப்பட்டவரை மருத்துவப் பரிசோதனை செய்தல்:

CrPC பிரிவு 53A–ன் படி வன்புணர்ச்சிக் குற்றம் சாட்டப்பட்டவரை அல்லது குற்றம் செய்ய முயன்றதாக கைது செய்யப்பட்டவரை மருத்துவப் பரிசோதனை செய்ய வழி செய்கிறது. உதவி ஆய்வாளருக்குக் குறையாத பதவி வகிக்கும் எந்த ஒரு காவல்துறை அதிகாரியும், அரசாங்க மருத்துவமனையில் அல்லது உள்ளாட்சி அமைப்புக்களால் நடத்தப்படும் மருத்துவமனையில் பணிபுரியும் எந்த ஒரு பதிவு செய்யப்பட்ட ஒரு மருத்துவரையும், மருத்துவ பரிசோதனை செய்யக் கோரலாம்.

CrPC பிரிவு 53A–ன் படி மருத்துவ பரிசோதனை செய்ய தேவையான அளவு பலப்பிரயோகம் செய்யலாம்.

**குற்றம் சாட்டப்பட்டவருக்கான மருத்துவப் பரிசோதனை அறிக்கை:**

CrPC பிரிவு 53A(2)–ன் படி குற்றம்சாட்டப்பட்ட நபரைப் பரிசோதித்த மருத்துவரின் மருத்துவப் பரிசோதனை அறிக்கையில் பின் வரும் விஷயங்கள் இருக்க வேண்டும்:

- குற்றம் சாட்டப்பட்டவரின் பெயர் மற்றும் முகவரி
- அவரை அழைத்து வந்தவர் பெயர் மற்றும் முகவரி
- குற்றம் சாட்டப்பட்டவரின் வயது
- DNA–விற்காக கொள்ளப்படும் குற்றம் சாட்டப்பட்டவரின் பொருள்
- குற்றம் சாட்டப்பட்டவரின் உடலில் உள்ள காயங்களின் அடையாளங்கள்
- தேவையான இதர விபரங்கள் போதுமான அளவில்

மருத்துவப் பரிசோதனை அறிக்கையில் பின் வரும் விஷயங்கள் இருக்க வேண்டும்:

- மருத்துவப் பரிசோதனையின் ஆரம்ப மற்றும் முடிவு நேரத்தையும், எடுக்கப்பட்ட ஒவ்வொரு முடிவிற்கும் தகுந்த காரணத்தையும் தெளிவாக கூற வேண்டும்.
- பதிவு செய்யப்பட்ட மருத்துவர் வன்புணர்ச்சி குற்றம்புரிந்த அல்லது குற்றம்புரிய முயற்சி செய்த குற்றம்சாட்டப்பட்டவரை பரிசோதனை செய்து காலதாமதமில்லாமல் மருத்துவப் பரிசோதனை அறிக்கையை புலன் விசாரணை அதிகாரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். அவர் அத்தகவல்களை நடுவருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

தடயவியல் சான்றைக் கையாளும் போது, அனைத்து வழிமுறைகளையும் பின்பற்றுவதோடு, விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். சற்றும் விதிவழுவாமல், அவ்வாறு செய்யாவிட்டால், குற்றம் சாட்டப்பட்டவரின் வழக்கறிஞர் மாதிரி எடுக்கும் போதும், மூடும்போதும், ஒப்படைக்கும் போதும், சரியாக கையாளப்படாமையை சுட்டிக்காட்டி, அவ்வாறான தடயச் சான்றை ஆட்சேபனை செய்யக்கூடும்.

## 9. சிறாரின் மீது பாலியல் தாக்குதல் செய்தது தொடர்பான விசாரணைக்கான காலக்கெடு:

சிறாரின் மீது பாலியல் வன்புணர்ச்சிக் குற்றம் செய்தது தொடர்பான விசாரணையை காவல்துறை அதிகாரி, குற்றத்தைப் பதிவு செய்த தினம் முதல் மூன்று மாதத்திற்குள், முடிக்கப்பட வேண்டும். (Cr.P.C பிரிவு 173(1A)–ன் படி)

## 10. வழக்குக் குறிப்பேடு:

**சட்டப் பூர்வமாக வழக்குக் குறிப்பேடு பராமரிக்கப்படல்:** Cr.P.C பிரிவு 172–ன் படி காவல்துறையினால் நடப்புக்களின் குறிப்பேடு பராமரிக்கப்பட வேண்டும். புலன் விசாரணையின் போது, தினமும், அக்குறிப்பேட்டில் நடப்புக்களைப் பதிய வேண்டும். தகவல் கிடைத்த நேரம், விசாரணை ஆரம்பித்த மற்றும் முடித்த நேரம்,

பார்வையிடப்பட்ட இடங்கள், அங்கிருந்த சூழ்நிலைகள் பற்றி சேகரித்த விவரங்கள் முதலியவற்றை அதில் பதிய வேண்டும். Cr.p.C. பிரிவு 161ன் படி பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலமும் அதில் பதிய வேண்டும். ஆனால், Cr.P.C பிரிவு 162(1)–ன் படி, தகவல்களை காவல்துறையினர் எழுத்து மூலம் பதிவு செய்யும் போது தகவல் தருபவரிடம் கையெழுத்து வாங்கக் கூடாது.

Cr.P.C பிரிவு 161–ன் படி, வாங்கும் வாக்குமூலத்தையோ அல்லது அதன் பகுதியையோ எந்தவொரு குற்றத்தின் விசாரணையின் போதும், வழக்கு விசாரணையின் போதும் சாட்சியமாக பயன்படுத்தக்கூடாது. முறையாக வழக்குக் குறிப்பேடு பராமரிக்கப்படல் ஒரு அவசியமான படியாகும். முறையான விசாரணை நடந்ததை உறுதி செய்ய, முறையாக விசாரணையின் முடிவுகளை தினசரி சரியாகப் பதியப் பெற்ற வழக்குக் குறிப்பேடு முக்கியமானதாகும். வழக்குக் குறிப்பேடு பற்றி பின் வருமாறு கூறியுள்ளது:

> *Cr.P.C பிரிவு 172–ன் படி நடப்புக்களின் குறிப்பேடு தினசரி பதிவு செய்யப்பட்டு பராமரிக்க வேண்டும். விசாரணையின் போதும், வழக்கு விசாரணையின் போதும் குற்றவியல் நீதிமன்றம், சாட்சியாக அல்லாமல், ஒரு நடப்புக்களின் குறிப்பேட்டின் உதவியை நாடலாம். சாட்சியங்களை புனைவதைத் தடுக்கவும், விசாரணைக்கு ஏற்றவாறு அவற்றின் வரிசையை மாற்றுவதைத் தடுக்கவும், நடப்புக்களின் குறிப்பேடு தினசரி பராமரிக்கப்பட வேண்டும். தனிநபரின் சுதந்திரத்தை பாதிக்கும் சக்தியுள்ள செயலைச் செய்யக்கூடிய எந்த ஒரு அதிகாரம் படைத்தவரும், அவரின் நீதிவழுவாத செயல்களை வெளிப்படையாக நிரூபிக்கும் வகையில் நடப்புக்களின் குறிப்பேடு தினசரி பராமரிக்க வேண்டும்.*[20]

மற்றொரு வழக்கில் உச்சநீதிமன்றம் பின் வருமாறு கூறியுள்ளது:

> *Cr.P.C பிரிவு 172ன் படி புலன் விசாரணையில் ஈடுபடும் எந்த ஒரு காவல்துறை அதிகாரியும் நடப்புக்களின் குறிப்பேட்டை பராமரிக்க வேண்டும். ஒவ்வொரு மாநிலமும் அதனதன் காவல்துறை விதிமுறைகளை அல்லது காவல்துறை நிலையாணைகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் சில அவ்வாறு நடப்புக்களின் குறிப்பேட்டை பராமரிக்க வேண்டிய முறைகளையும் கூறியுள்ளன.*[21]

நடப்புக்களின் குறிப்பேட்டை Cr.P.C பிரிவு 172(1-b)–ன் படி சரிவரப் பராமரிக்கவில்லை என்பதையும், உதிரித் தாள்களில் அதை பராமரிப்பதையும் கண்ட மும்பை உயர்நீதிமன்றம், அம்மாநிலத்தில் அனைத்து காவல் நிலையங்களிலும் நடப்புக்களின் குறிப்பேட்டை Cr.P.C பிரிவு 172 (1-b)–ன் படி சரிவரப் பராமரிக்க பின்பற்ற வேண்டியது குறித்து உத்தரவிட்டது.[22]

நடப்புக்களின் குறிப்பேட்டை Cr.P.C 172–ன் படி சரிவரப் பராமரிப்பதில்லை என்பது

20 State v. Anil Jacob 2009 Cri LJ 1355 (Bom) (DB)
21 Shamshul Kanwar v. State of Uttar Pradesh AIR 1995 SC 1748
22 Mrs. Atluri Padma Venkateshwara Rao v. P.I. Pawar & Ors 2011 Cri LJ 1439 (Bom)

ஒரு ஊர் அறிந்த செய்தி. அது சட்டப்படி பராமரிக்கப்படுவதை மேற்பார்வையிடுவது என்பது நடப்பதே இல்லை. நேரத்தை மிச்சம் பிடிக்க புலனாய்வு செய்யும் அதிகாரிகள், நடப்புக்களின் குறிப்பேட்டில் பதிவுகளை உருவாக்குகின்றனர். காவல்துறை அதிகாரிகள் தவிர மற்றவருக்கு நடப்புக் குறிப்பேட்டைப் பராமரிக்க சட்டப்படி அதிகாரமில்லை. விசாரணையின் போது குற்றவியல் நீதிமன்றம் அந்த நடப்புக்களின் குறிப்பேட்டைக் கேட்டுப் பெற்று அதனை விசாரணைக்கு உதவியாகக் கொள்ளலாம். நடப்புக்களின் குறிப்பேட்டை முழுமையாகப் பார்வையிட குற்றம் சாட்டப்பட்டவருக்கு உரிமை இல்லையென்றாலும், அரசின் சாட்சியத்தின் போது குறிப்பிட்ட பதிவை பார்வையிடவும், மேலும் சில பகுதிகளையோ பார்வையிடவும், வழக்கை முழுமையாகப் புரிந்து கொள்ளவும் தேவையெனில் நீதிமன்றம் அனுமதிக்கக்கூடும்.[23] இருப்பினும் நீதிமன்றம் நடப்புக்களின் குறிப்பேட்டைக் கேட்டுப் பெற்று அதனை விசாரணைக்கு உதவியாகக் கொள்ளலாம்.[24] எனினும் நீதிமன்றம் நடப்புக்களின் குறிப்பேட்டை சாட்சியாகவோ அல்லது குற்றம் சாட்டப்பட்டவருடைய தரப்பில் முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டவோ உபயோகப்படாது.[25] நடப்புக்களின் குறிப்பேட்டை சரிவரப் பராமரிக்காதது குற்றம் சாட்டப்பட்டவர் மீதுள்ள குற்றத்தை இல்லாததாக்காது.[26]

**நடப்புக்களின் குறிப்பேட்டை பரிசீலித்தல்:** உண்மையாகவும், காலாகாலத்தில் பதிவுகள் செய்யப்பட்ட ஒரு நடப்புக்களின் குறிப்பேடு விசாரணை சரியான வழியில் செல்ல மிகவும் உதவியாக இருக்கும். புலன்விசாரணை செய்பவருக்கு அவரது மேலதிகாரிகள் இது பற்றி அவருக்கு உதவியும் ஆலோசனைகளையும் வழங்க முடியும். புலன்விசாரணை செய்பவர் மாறும் போது சரிவரப் பராமரிக்கப்பட்ட ஒரு நடப்புக்களின் குறிப்பேடு மிகவும் உதவியாக இருக்கும். இப்பராமரிப்பு விஷயத்தில் சிபிஐ இன் நடப்புக்களின் குறிப்பேடு பராமரிப்பு வழிமுறைகள், அவற்றை மேற்பார்வையிடுதல் போன்றவை ஒரு நல்ல முன்னுதாரணமாகும். இது குறித்த சிபிஐ இன் வழிகாட்டு நெறிகளின் சம்பந்தப்பட்ட பின்வரும் பகுதிகள் கவனத்தில் கொள்ளத்தக்கன:

> *11.7 புலன்விசாரணை செய்பவர் நடப்புக்களின் குறிப்பேட்டை தினமும் காவல்துறை கண்காணிப்பாளருக்கு ஆய்வுக்காக சமர்ப்பிக்க வேண்டும். அவரும் அதனை ஆய்வு செய்து மேற்கொண்டு செய்ய வேண்டியதைப் பற்றி அறிவுரை ஆணை வழங்க வேண்டும். நடப்புக்களின் குறிப்பேடு மற்றும் இணைக்கப்பெற்ற இதர ஆவணங்களைக் கொண்டு காலமுறை விவர அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும். நடப்புக்களின் குறிப்பேட்டை புலன்விசாரணை தினத்தன்றே எழுத வேண்டும். காவல்துறை கண்காணிப்பாளர் அவற்றின் சாராம்சத்தை தொடர் குறிப்புக் கோப்பில் பதிய வேண்டும். விசேஷமாகக் கேட்டாலொழிய இவற்றை தலைமை அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டியதில்லை.*

## நடப்புக்களின் குறிப்பேட்டை ரகசியமாக வைத்தல்:

நடப்புக்களின் குறிப்பேடு என்பது காவல்துறையின் அன்றாட புலனாய்வுக்கான ஒரு உள் ஆவணம். Cr.P.C பிரிவு 207–ன் படி, குற்றம் சாட்டப்பட்டவருக்கு ஒரு சில

23 Queen-Empress v. Mannu ILR 19 All 390 (FB); Re petition of Jhubboo Mahton ILR 8 Cal 739

24 Avinash Kumar v. State (1963) 2 Cr LJ 706; Habeeb Mahommed v. State of Hyderabad AIR 1954 SC 51

25 Md Ankoos & ors v. The Public Prosecutor, High Court of Andhra Pradesh 2010 Cri LJ 861 (SC).

26 Pulukuri Kottayya v. Emperor AIR 1947 PC 67; Zahiruddin v. Emperor AIR 1947 PC 75; Niranjan Singh v. State of Uttar Pradesh AIR 1957 SC 142; Hafiz Mahommad v. Emperor AIR 1931 Pat 150; Gajanand v. State AIR 1954 SC 695.

ஆவணங்களையும், வாக்குமூலங்களையும் மட்டுமே பகிர்ந்து கொள்ள இயலும். நடப்புக்களின் குறிப்பேட்டில் உள்ள தகவல்களை தரவேண்டியதில்லை. விசாரணையின் போதும், வழக்கு விசாரணையின் போதும், நீதிமன்றம் அதன் உதவியைப் பெறமுடியும் என்றாலும், குற்றம் சாட்டப்பட்டவருக்கு நடப்புக்களின் குறிப்பேட்டில் உள்ள தகவல்களை தரவேண்டியதில்லை. புலனாய்வுக்கான காவல்துறை அதிகாரி தனக்கு விஷயங்களை நினைவுபடுத்தி கொள்ளவும், அவரது வாதத்தை நீதிமன்றம் மறுதலிக்கவும், குற்றம் சாட்டப்பட்டவருக்கு நடப்புக்களின் குறிப்பேட்டில் உள்ள தகவல்களை தரலாம். இருப்பினும், நடப்புக்களின் குறிப்பேட்டின் பிரதியை அரசு வழக்குரைஞருக்கு அனுப்புவது வழக்கம். குற்றம் சாட்டப்பட்டவரின் வழக்குரைஞர் அதை அதிகார முத்திரை இல்லாமல் பார்வையிடுவதும், அதை பயன் படுத்தி தங்கள் வாதங்களையும், குறுக்கு விசாரணைகளையும் செய்வது சாதாரணமாக நடைபெறுகிறது.

## V. புலனாய்வுக்கு பின்னால் நடைபெறும் வழிமுறைகள்:

### 1. நடுவருக்கு அறிக்கை அனுப்புதல்:

Cr.P.C பிரிவு 173(2)(i)–ன் படி புலன் விசாரணைக்குப் பின், காவல்துறை அறிக்கையை/ குற்றப்பத்திரிக்கையை நிலைய பொறுப்பில் உள்ள சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரி, நடுவருக்கு, குற்றச்சாட்டினை புலன் கொள்வதற்காக சமர்ப்பிக்க வேண்டும்.

Cr.P.C பிரிவு 173 (2)(i)–ன் படி புலன் விசாரணைக்குப் பின் காவல்துறையினர் சமர்ப்பிக்கும் அறிக்கையில் பின் வருவன இடம் பெற வேண்டும். சம்பந்தப்பட்டவர்களின் பெயர்கள், தகவலின் தன்மை, வழக்கைப் பற்றி அறிந்தவர்கள் எனக் கருதப்படும் நபர்களின் பெயர்கள், இன்ன பிற.

புலன் விசாரணைக்குப் பின் காவல்துறையினர் அறிக்கை சமர்ப்பிக்கும் போது, மேற்கொண்டு விசாரணை தேவையில்லை என்று, முடிவு அறிக்கை சமர்பித்தால்,குற்றமிழைக்கப் பட்டவரும், முதலில் தகவல் தந்தவரும் நடுவரால் கேட்கப்பட வேண்டும். முடிவு அறிக்கை சமர்பிக்கும் போதெல்லாம், சிறப்பு நீதிமன்றம், மற்றும் குற்றவியல் நீதிமன்றமும், முதலில் தகவல் தந்தவருக்கு அதை அறிவிக்க வேண்டும். முதலில் தகவல் தந்தவர் காவல் துறையினரின் அந்த முடிவு அறிக்கையை எதிர்த்து பதில் அறிக்கையை தாக்கல் செய்யலாம். நடுவரின் முன் முதலில் தகவல் தந்தவர் பின் வருமாறு முறையிடலாம்:

- காவல்துறையினர் அவளது புகாரை தீவிரமாக எடுத்துக்கொள்ளவில்லை என்றும், அதனை சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றும் முறையிடலாம்.
- குற்றத்தை மேலும் புலன் விசாரணை செய்ய போதுமான ஆதாரங்கள் உள்ளதாகவும் முறையிடலாம்.

முதலில் தகவல் தந்தவரின் பதில் அறிக்கையையும், வாதங்களையும் நீதிபதி கேட்ட பின்குற்றத்தை புலன் கொள்ள போதுமான ஆதாரங்கள் முடிவு அறிக்கையிலும், நடப்புக்களின் குறிப்பேட்டிலும் உள்ளதாக கருதினால் அரசு வழக்குரைஞர், அதனை விசாரிக்கும் பணியை திரும்பப் ஏற்றுக் கொள்வார்.

POCSO சட்டத்தின் 25(2) வது பிரிவின்படி, முடிவு அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களையும் மற்றும் வாக்குமூலங்களின் பிரதிகளையும் பெற பாலியல் குற்றத்தால் பாதிக்கப்பட்ட சிறார் மற்றும் அவரின் பெற்றோருக்கு உரிமை உண்டு.

குற்றம் சாட்டப் போதுமான ஆதாரங்கள் இருப்பதாக (161வது பிரிவின்படி, வாக்கு மூலங்களும், தினசரிக் குறிப்பேட்டில் ஆதாரமும் இருப்பதாக) நடுவர் கருதினால், காவல் துறையினர் சமர்ப்பிக்கும் முடிவு அறிக்கையை புறந்தள்ளி, மேற்கொண்டு குற்றம் சாட்டப்பட்டவர் மீது விசாரணையத் தொடர அவருக்கு அழைப்பு விடுக்கலாம்.

- மருத்துவப் பரிசோதனை அறிக்கை குறித்த சிறப்பு பிரிவு:

IPC பிரிவு 376, 376A, 376B, 376C,376D, அல்லது 376E ஆகியவற்றின் கீழ் குற்றம் சம்பந்தப்பட்ட புலன் விசாரணையாக இருப்பின், நடுவரிடம் கொடுக்கும் குற்ற அறிக்கையில் குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் மருத்துவ அறிக்கை இணைக்கப்பட்டுள்ளதா என குறிப்பிட வேண்டும், {Cr.P.C 173(2)(i) (h) இன் படி}

Cr.P.C பிரிவு 173(2)(ii) இன் படி, குற்றம் பற்றி முதல் தகவல் தந்தவருக்கு, அவரது புகாரின் அடிப்படையில் எடுக்கப்பட்ட காவல்துறையினரின் நடவடிக்கை குறித்து தெரிவிக்க வேண்டும்.

## vi. அரசு வழக்குரைஞரின் பணியும், நீதிமன்ற விசாரணையும்:

### 1. குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் வழக்கறிஞர் ஒரு சில வழக்குகளில் நடத்தும் குற்ற வழக்குத் தொடர்வு:

தனிநபர் புகாராக பதியப்பட்ட போது, குற்றத்தால் பாதிக்கப்பட்டவர், தனது வழக்கறிஞரைப் பயன்படுத்தலாம். காவல்துறை வழக்காகப் பதியப்பட்டாலும், அவ்வழக்கு காவல் துறையினரின் தவறான அணுகுமுறையால், அரசு வழக்குரைஞரின் கூட்டுச்சதியால் அல்லது அக்கறையின்மையாலோ சரிவர விசாரிக்கப்படமாட்டாது என்று கருத இடமிருந்தால், Cr.P.C பிரிவு 302–ன் கீழ் நடுவரிடம் குற்ற வழக்குத் தொடர்வு நடத்த விண்ணப்பிக்கலாம். அவ்விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், குற்றத்தால் பாதிக்கப்பட்டவர், தனது விருப்படி ஒரு வழக்கறிஞரையும் குற்ற வழக்குத் தொடர்வு நடத்த பயன்படுத்தலாம்.

Cr.P.C-ன் பிரிவு 309–ன் உள் பிரிவின்படி, I.P.C&ன் 376, 376A, 376B, 376C, 376Dன் பிரிவின் படி உள்ள வழக்குகளில், நீதிமன்ற ஆய்வுக்கான விசாரணையை, நீதிமன்ற விசாரணையை, கூடிய மட்டிலும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த தேதியிலிருந்து,இரண்டு மாதங்களுக்குள் முடிக்க வேண்டும்.

## 2. குற்றவியல் அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கப்படவேண்டிய புகார்களை, அரசு வழக்கறிஞர் நடத்தும் குற்ற வழக்குத் தொடர்வு:

நடுவரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் தனிநபர் புகாரில் சட்டத் தலையீட்டின் போது குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் வழக்கறிஞரை, CrPC பிரிவு 301(2)இன் படி அரசு வழக்கறிஞரின் ஆலோசனைப்படி நடக்க கோர முடியாது. ஏனெனில் அச்சமயம் அரசு வழக்கறிஞர் இந்த வழக்குக்கு பொறுப்பு என்று கூற இயலாது.

தனிநபர் புகாரின்படி நடக்கும் குற்ற வழக்குத் தொடர்பாக இருந்தாலும் குற்றவியல் அமர்வு நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞர்தான் நடத்த வேண்டும். வழக்கு ஒப்படைக்கப்பட்ட பின் CrPC பிரிவு 225, 226 இன் படி அரசு தரப்பு வழக்கைத் தொடங்கி. நடத்த வேண்டும்.

குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் வழக்கறிஞர் குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் புகாரை, நிர்ணயிக்கப்பட்ட நடுவரின் முன் குற்றத்தைப் புலன் கொள்ளக் கோரி தாக்கல் செய்யும் உரிமை உள்ளவர். மேலும் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர், அவரது சாட்சியங்களையும் CrPC பிரிவு 202(2)–ன் படி விசாரிக்கக் கோரலாம், குற்றம்சாட்டப்பட்டவர் ஆஜராகி வழக்கு ஒப்படைக்கப்படும் வரையிலும் அவர் குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் பிரதிநிதியாக செயல்படலாம்.

காவல்துறையினரின் வழக்கு முடிவு அறிக்கை புலன் கொள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் அரசு வழக்கறிஞர் குற்ற வழக்குத் தொடர்வை நடத்துவார்.

## 3. விசாரணை (Inquiry) மற்றும் வழக்கு விசாரணையில் (trial) அரசு வழக்கறிஞரின் பங்கு:

குற்றம்சாட்டப்பட்டவர் வந்த பிறகோ அல்லது கொண்டு வரப்பட்ட பிறகோ; CrPC பிரிவு 207 இன் படி ஆவணங்கள் மற்றும் வாக்குமூலங்களின் நகல்கள் கொடுக்கப்பட்ட பின், அரசு வழக்கறிஞர், குற்றம் சாட்டப்பட்டவர் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களை விளக்கி, குற்றச்சாட்டுக்களைப் பதிவு செய்யக் கோருவார். அல்லது அவர் செய்த குற்றங்களை விளக்கி தகவல் தரக் கோருவார்.

குற்றச்சாட்டுக்களைப் பதிவு செய்வதன் நோக்கம்:

- குற்றம்சாட்டப்பட்டவர் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களை சுருக்கமாகவும், சரியாகவும் அவருக்கு எடுத்துரைத்தல்.
- அவருக்கெதிராக வழக்கில் நிரூபிக்க எண்ணியுள்ள குற்றச்சாட்டுக்களையும், அவர் எந்தெந்த குற்றச்சாட்டுகளுக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்று நிரூபிக்க வேண்டும் என விளக்குதல்.

- குற்றச்சாட்டுக்களைப் பதிவு செய்யும் போது சாட்சியங்களை நீதிமன்றம் சரிபார்த்து நீக்க வேண்டியதில்லை. அவருக்கெதிராக வழக்கு விசாரணையில் குற்றம் சாட்டும் தரப்பில் குற்றத்தை நிரூபிக்க இயலுமா என்று பார்க்க வேண்டியதில்லை.

குற்றச்சாட்டுக்களைப் பதிவு செய்த பின் குற்றம் சாட்டப்பட்டவரின் வேண்டுகோள் கேட்கப்படும். அரசு வழக்கறிஞர் ஆதாரமாக சமர்பிக்கப்படும் ஆவணங்களைப் பட்டியலிடுவார். அவற்றை ஒவ்வொன்றாக குற்றம் சாட்டப்பட்டவரோ அல்லது அவரது வழக்கறிஞரோ அதன் உண்மைத்தன்மையை ஏற்றுக்கொள்ளவோ மறுக்கவோ செய்யலாம் Cr.P.C. பிரிவு 294.

சாட்சியங்கள் ஆரம்பிக்கும் முன்னரோ அல்லது அதற்கு பின் உடனடியாகவோ குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் குற்றம் சாட்டப்பட்டவரை அடையாளம் காட்டக் கோரப்படுவார்.

தடவியல் சான்றுகள், மருத்துவ பரிசோதனை அறிக்கை அத்துடன் மருத்துவ வழக்குச் சான்று அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

CrPC பிரிவு 313–ன் படி குற்றம் சாட்டப்பட்டவரை நீதிமன்றம் விசாரிக்க தேவையான கேள்விகளை தயார் செய்து அரசு வழக்கறிஞர் உதவுவார்.

## 4. குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு சாதகமான யூகங்கள்:

வன்புணர்ச்சி அல்லது பிற பாலியல் வழக்குகளில், ஒப்பிட்டு உறுதி செய்யப்படாதிருந்த போதும், குற்றத்தால் பாதிக்கப்பட்டவரை குறுக்கு விசாரணை செய்தபோது அவரின் வாக்குமூலம் நிரூபணம் ஆகியிருந்தால் குற்றம் சாட்டப்பட்டவரை குற்றவாளியாக்கப் போதுமானது. 1872ம் ஆண்டின் இந்திய சான்றாதாரச் சட்டம் (Indian Evidence Act, 1872 -“IEA”), உண்மையை நிரூபிக்கத் தேவையான குறைந்த பட்ச சாட்சியங்களின் எண்ணிக்கையை வரையறுக்கவில்லை. நம்பத்தகுந்த ஒரேஒரு சாட்சியத்தின் சாட்சிகூட சட்டபூர்வமானதே. 1872ம் ஆண்டின் இந்திய சான்றாதாரச் சட்டத்தின் வேறு சில அம்சங்கள்:

- IPC பிரிவு 376–ன் (2)துணை பிரிவின் (a) முதல் (n) வரையிலான பிரிவுகளின்படி, பாலியல் வண்புணர்ச்சி வழக்குகளில், ஒப்புதல் இல்லையென்பது கேள்வியே கேட்காமல் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிடும். (பிரிவு 114A)

- குற்ற விசாரணையில், IPC பிரிவு 354, 354A, 354B. 354C, 376, 376A, 376B, 376C, 376D அல்லது 376E ஆகியவற்றின் கீழ் நிகழ்ந்த அல்லது நிகழ்த்த முயன்ற வழக்குகளில், பெண்ணின் ஒப்புதல் ஒரு பிரச்சனையாக ஆகும் போது, பெண்ணின் பாலியல் முன்னனுபவம், அவள் ஒப்புதல் அளித்தாளா என்பதை முடிவு செய்ய, கணக்கில் கொள்ளப்படமாட்டாது. (53A பிரிவு)

- குற்ற விசாரணையில், IPC பிரிவு 376, 376A, 376D அல்லது 376E ஆகியவற்றின் கீழ் நிகழ்ந்த அல்லது நிகழ்த்த முயன்ற வழக்குகளில், பெண்ணின் ஒப்புதல் ஒரு பிரச்சனையாக ஆகும் போது, பெண்ணின் பாலியல் முன்னனுபவம், அவளது முறையற்ற நடத்தை ஆகியன அவள் ஒப்புதல் அளித்தாளா என்பதை முடிவு செய்ய, கணக்கில் கொள்ளப்படமாட்டாது. (பிரிவு 146–ன் வாசகம்)

- 2013-ம் ஆண்டு 53A பிரிவு மேற்படி IEA சட்டத்தில் சேர்க்கப்பட்டது. இதன்படி பாலியல் தாக்குதல் வழக்குகளில் ஒப்புதல் ஒரு பிரச்சினையாக ஆகும் போது, பெண்ணின் பாலியல் முன்னனுபவம், அல்லது அவளது நடத்தை ஆகியன அவள் ஒப்புதல் அளித்தாளா அல்லது ஒப்புதலின் தன்மை என்ன என்பதை குறுக்கு விசாரணையின் மூலமாகவோ வேறு சாட்சியங்களைக் கொண்டே நிரூபனம் செய்ய அனுமதி இல்லை.

### 5. சாட்சியளிக்கும் முன்பு நிகழ்ந்தவைகளை நினைவு கூர்தல்:

IEA சட்டம் பிரிவு 159-ன் படி, முன்னால் வாக்குமூலம் அல்லது விசாரணையின் போது அளித்த வாக்குமூலங்களை நினைவு கூர்தல் குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் மற்றும் சாட்சியத்தின் உரிமை. அந்த வாக்குமூலத்தை குற்றம் சாட்டப்பட்டவர் பார்க்கவும் சாட்சியத்தை குறுக்கு விசாரணை செய்யவும் உரிமையுண்டு.

இந்த காலகட்டத்தில், சம்பவம் நிகழ்ந்து பல ஆண்டுகள் கழிந்து, குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சி குற்றத்தை விவரிக்கிறார். எனவே, அவர்கள் மிகச் சரியாக அவர்களது வாக்குமூலத்தை நினைவு கூறமுடியும் அல்லது குறுக்கு விசாரணையையும் தாக்குப்பிடிக்க இயலும் என எதிர்பார்க்க முடியாது.

மேற்கூறியபடி, CLA ஒரு விதிவிலக்கை ஏற்படுத்தியுள்ளது. Cr.P.C-ன் 164 பிரிவின் படி மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளியின் வாக்குமூலம், முதன்மையான வாக்குமூலமாகக் கொள்ளப்படும்.[27]

கவனிக்கப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், புலனாய்வு செய்யும் அதிகாரி சாட்சிக்கு ஒரு கேள்விப் பட்டியலை, புலனாய்வின் போது, அனுப்புகிறார். அவரது பதிலை பிரிவு 161-ன் கீழ் பதிவு செய்கிறார். அதன் நகல் ஒன்று சாட்சியிடம் இருக்கவே செய்யும். அவ்வாறு நகலை வைத்துக்கொள்ளக் கூடாதென்று எந்த வழி முறையும் இல்லை.

பல சமயங்களில், சாட்சி சொல்ல ஆரம்பிக்கும் முன், நீதிமன்றம், சாட்சியை அவரது Cr.P.-ன் 161 பிரிவின் படியான சாட்சியத்தை படிக்கும்படியோ அல்லது கேட்கும்படியோ சொல்லும். சாட்சியும் தேவையான முக்கியமான விவரங்களை தனது உள்ளங்கையிலோ அல்லது சிறு தாளிலோ குறிப்பதை, குற்றம் சாட்டப்பட்டவரின் வழக்கறிஞர், சாட்சியத்தை மடக்க உபயோகிப்பார். குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் வழக்கறிஞர் இவற்றை அதிகாரபூர்வமற்ற முறையில், அணுக முடிகிறது. இன்றைய சூழ்நிலையில் சட்டபூர்வமாக, மாசற்ற ஒரு முறையில் இவற்றை சாட்சியோ அல்லது குற்றத்தால் பாதிக்கப்பட்டவரோ அணுக வழி செய்வது நீதியினைக் காக்கும் ஒரு செயலாகும்.

---

27 In an offence punishable under Section 354, 354A, 354B, 354C, 354D, sub-section (1) or (2), section 376, 376A, 376B, 376C, 376D, 376E or 509, IPC, it is compulsory for a magistrate to record the statement of the survivor under section 164, Cr.P.C., and if she is suffering from temporary or permanent mental or physical disability, her statement before the Magistrate shall be taken as the examination-in-chief during the trial and her deposition would commence from cross-examined.

குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் வழக்கறிஞர், வழக்கு விசாரணைக்கு முன்பே அவருடன் நெருக்கமாக கலந்து பேசிட வேண்டும். அது அவர் நீதிமன்றத்தை தைரியமாக எதிர்கொள்வதை உறுதி செய்யும். மேலும், நீதிவிசாரணைக்கு முந்தைய நாளே அவருக்கு முறைப்படி ஆலோசனை வழங்க வேண்டும்.

## 6. வழக்கு விசாரணையின் போது குற்றம் சாட்டப்பட்டவரின் உத்திகள்:

வழக்கு விசாரணையின் போது குற்றம் சாட்டப்பட்டவரின் வழக்கறிஞர்கள், சாட்சியங்களின், விவரங்களைப் பதிந்த தேதி, நேரம் முதலியவற்றை நினைவில் கொள்ளாமையை வெட்ட வெளிச்சமாக்குவர். குற்றம் சாட்டப்பட்டவரின் வழக்கறிஞர்கள், சாட்சியங்களின் வாக்கு மூலத்தைப் படித்துவிட்டு, அதிலுள்ள முரண்பாடுகளைச் சுட்டிக்காட்ட முயலுவார்கள். Cr.P.C பிரிவு 161–ன் படி, வாக்குமூலம் வாங்கும் போது சொல்லப்பட்ட செய்திக்கும், முதன்மை விசாரணையில் சாட்சி சொல்லும் போது சொல்லும் செய்திக்கும் வேறுபாடு இருக்கவே செய்யும். எனவே குற்றம் சாட்டப்பட்டவரின் வழக்கறிஞர்கள், சாட்சியங்களின் வாக்குமூலத்தைப் படித்துவிட்டு, குறுக்கு விசாரணையின் போது அதில் உள்ள முரண்பாடுகளை விளக்கி அவரைக் குழப்ப முயலுவார்கள்.

Cr.P.C பிரிவு 161–ன் படி பல சாட்சிகள் சொல்லும் போது, அவை ஒரே மாதிரியாகவே இருப்பதாகத் தோன்றும். குற்றம் சாட்டப்பட்டவரின் வழக்கறிஞர்கள் அவர்களை குறுக்கு விசாரணை செய்யும் போது, குற்றம் நடைபெற்ற விதம், அவை பதிவு செய்யப்பட்ட விதம், மற்றும் நேரம் இவைகளில் அவர்களுக்குள் இருக்கும் வேறுபாடுகளை பதிவாக்குவார்கள்.

## 7. பிறழ்வு சாட்சி:

சாட்சி Cr.P.C பிரிவு 161 பிரிவின் கீழான, காவல்துறையினருக்கான தன் முந்தைய வாக்குமூலத்தை மறுதலித்தால், பிறழ் சாட்சியாக மாறியதாகக் கூறப்படுவார். காவல்துறையினருக்கான சாட்சி தன் முந்தைய வாக்குமூலத்தை மறுதலித்தால், பிறழ் சாட்சியாக மாறியதால், குற்றம்சாட்டும் தரப்பு தனது வழக்கை கைவிட வேண்டியதில்லை. பிறழ் சாட்சியாக மாறியவரை மேற்கொண்டு குறுக்கு விசாரணை செய்து சான்றாகக் கூடியவைகளைப் பெற வேண்டியதுதான். சட்டப்படி, நம்பத்தகுந்த பிறழ் சாட்சியின் வாக்குமூலங்களை குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிராக கருதலாம்.

## 8. குற்றம் சாட்டப்பட்டவரின் விடுவிப்பு:

அமர்வு நீதிமன்றத்தில், குற்றவியல் நீதி விசாரணையின் போது, குற்றம் சாட்டும் தரப்பு தனக்குத் தேவையான அனைத்தையும் சான்றாகப் பெற வேண்டியதை அனுமதிக்க வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர் Cr.P.C பிரிவு 313–ன் கீழ் பரிசோதிக்கப்படவேண்டும். அப்போது வெளிப்படும் குற்றம்சாட்டும் எந்த ஒரு வாக்குமூலத்தையும் ஏனைய சாட்சியங்களுடன் குற்றம்சாட்டப்பட்டவர் இணைத்துப் பார்க்கப்படும். குற்றம்சாட்டப்பட்டவரின் விடுவிப்பு இதன் பிறகே நடக்கக் கூடும்.

அமர்வு நீதிமன்றத்தில், Cr.P.C பிரிவு 232–ன் கீழ் நடக்கும் வழக்கு விசாரணையின் போது குற்றம் சாட்டும் தரப்பு சாட்சியை விசாரணை செய்த பிறகு, Cr.P.C பிரிவு

313–ன் கீழ் அவரது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பின்பே குற்றம்சாட்டப்பட்டவரின் விடுவிப்பு நடக்கக் கூடும். பிடியாணையின் கீழ் நடக்கும் வழக்கு விசாரணையின் பின் விடுதலை செய்யப்படுவதோ அல்லது தண்டிக்கப்படுவதோ Cr.P.C பிரிவு 247–ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பிறகே நடக்கக் கூடும். Cr.P.C பிரிவு 255–ன் கீழ் நடக்கும் சம்மன் வழக்கிலும் இம்மாதிரியான முறையே பின்பற்றப்பட வேண்டும்.

## vii. குற்றம் சாட்டப்பட்டவர் ஜாமீனில் விடுவிப்பு – அதை எதிர்க்க குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் உரிமை மற்றும் குற்றம்சாட்டும் வழக்கறிஞருக்கு ஒத்துழைப்பு:

Cr.P.C-ன் கீழ், அரசினால் மேற்கொள்ளப்படும் குற்றம்சாட்டும் வழக்குகளில் தலையிட குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் உரிமை மிகக் குறைவு.[28] இருப்பினும், வழக்குச் சட்டங்களிலும், மற்ற சட்டங்களிலும் ஏற்பட்ட மாறுதல்களால், அரசாங்கம் துவக்கிய வழக்குகளில் குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் தலையீட்டு உரிமைகள் நிலைநாட்டப்பெற ஒரு பரந்த விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஏற்பட்ட மாறுதல்கள் பின் வருமாறு:

### 1. ஜாமீனை ரத்து செய்தல்:

உச்சநீதிமன்றம் பின்வருமாறு கூறியது; கைவசம் உள்ள சாட்சியங்களையும், சாரங்களையும் புறந்தள்ளி, கொடிய குற்றங்களில் கொடுக்கப்படும் விபரீதமான ஜாமீன் உத்தரவு, சட்ட விரோதமானது மட்டுமல்ல. அரசு மட்டுமின்றி குற்றத்தால் பாதிக்கப்பட்டவரும் தகுந்த நீதி மன்றத்தை அணுகி, அந்த ஜாமீனை ரத்து செய்யக் கோரலாம்.[29] இது இப்போது சட்டப்படி நன்கு உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கு முன், புகாரளித்தவர் மற்றும் முதல் தகவல் தந்தவருக்கு, குற்றம் சாட்டப்பட்டவரின் ஜாமீனில் தலையிட உரிமை இருக்கவில்லை. புகாரளித்தவர் மற்றும் முதல் தகவல் தந்தவருடைய வழக்கறிஞர்கள், குற்றம் சாட்டப்பட்டவரின் ஜாமீனை எதிர்க்க உரிமை இருக்கவில்லை மிஞ்சிப்போனால், அரசு வழக்குறைஞரின் அறிவுறுத்தல்படி நடக்கலாம்.[30]

### 2. குற்றம் சாட்டப்பட்டவரின் விடுவிப்பு அல்லது தண்டனையை எதிர்க்கும், குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் உரிமை:

CrPC பிரிவு 372–ன் உட்பிரிவின் கீழ் குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு, குற்றம் சாட்டப்பட்டவரின் விடுவிப்பு அல்லது குறைவான தண்டனையை எதிர்க்கும் அல்லது

28 These limited rights flow from sub-section (2), Section 301, Cr.P.C. and are to the extent that a lawyer briefed by a private party must assist the prosecution by acting under the Public Prosecutor, and if the prosecution is being conducted by a Special Public Prosecutor, the permission of the Court for such assistance, as provided for under the proviso to Section 24(8), Cr.P.C., must also be obtained. At the conclusion of the evidence, written arguments with the permission of the Court can also be filed. Additionally, in prosecutions before a Magistrate, the Court may grant permission to any person to conduct the prosecution under Section 302, Cr.P.C., and if so the burden normally upon the shoulders of the State would have to be discharged by such person either personally or by engaging a lawyer.

29 Puran v. Rambilas AIR 2001 SC 2023.

30 All India Democratic Women's Association v. State & Ors 1998 Cri LJ 2629 (Mad); Praveen Malhotra v. State 1990 Cri LJ 2184. See also Indu Bala v. Delhi Administration 1991 Cr LJ 1774 (Del); Dr. Sunil Puri v. State of Chhattisgarh 2006 Cri LJ 2866 (Ch'garh).

தேவைக்கு குறைவான இழப்பீட்டை எதிர்க்கும் உரிமை உள்ளது.

குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு அவரது வழக்கறிஞர் குற்றம் சாட்டப்பட்டவரின் தண்டனை அல்லது விடுவிப்பு குறித்து தகவல் தெரிவிக்க வேண்டும். வழக்கின் அனைத்து நீதிமன்ற விசாரணையிலும் பங்கு கொள்ள வேண்டும். அவற்றில் நடைபெறுபவைகள் குறித்து அவ்வப்போது குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். **TNLSA** (தமிழ்நாடு சட்ட் உதவி மையம்) உடன் இணைந்து செயலாற்றி, போதுமான இழப்பீட்டை குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு காலாகாலத்தில் பெற்றுத்தர வேண்டும்.

மேலும், டெல்லி உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் படி, வன்புணர்ச்சியினால் பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கான உதவி மைய வழக்கறிஞர், குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு குற்றம் சாட்டப்பட்டவரின் காவல் அல்லது ஜாமீன் மனு குறித்து தகவல் தெரிவிக்க வேண்டும்.

(சுற்றறிக்கை எண் 53/ ஆவணக் கிளை/**PHQ** 2011, டில்லி காவல்துறை ஆணையர்)

## 3. குற்றம் சாட்டும் தரப்பினருக்கு ஒத்துழைப்பு அளிப்பதற்கான உரிமை:

(புலனாய்வில் எஃப்ஐஆர் பதிவு செய்யப்பட்டபின்பும், குற்றம் கண்டுகொள்ளப்பட்டு Cr.P.C–ன் பிரிவு **190(1)**(b) படி காவல்துறை அறிக்கையின் பேரில் மேல் நடைவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்பும், நடப்பில் புகார் அளித்தவரோ அல்லது குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் Cr.P.C–ன் எந்தப் பிரிவிலும் தனிநபரின் தலையீட்டுக்கு வழி இல்லையென்றாலும் Cr.P.C–ன் பிரிவு 302(1) படி சிறிய அளவில் அரசுத்துறை வழக்கறிஞருக்கு அவர் கீழ், அவரது வழிகாட்டுதல் படி, பணி புரிவதன் மூலம் செய்யலாம். அரசுத்துறை வழக்கறிஞர் என்பவர் பொதுத்துறையில் பணிபுரிபவராதலால், அவர் முன் சம்பந்தப்பட்ட பொருள்களையும், சாட்சியங்களையும், தகுந்த விவாதங்களையும் வைப்பதால், குற்றம் சாட்டப்பட்டவரின் ஜாமீன் மனுவை எதிர்த்து அவரது கடமைகளை சரிவரச் செய்ய உதவலாம்.

ஆனால், அரசுத்துறை வழக்கறிஞர் சுதந்திரமாக செயல்படாத போது, குற்றம் சாட்டப்பட்டவருக்கு சாதகமான மன நிலையுடயவராக உள்ளபோது, நீதியின் நலனுக்குப் பாதிப்பு ஏற்படும் இக்கட்டான நிலை பற்றி, Cr.P.C–ல் குறிப்பிடப் படவில்லை. வேறு பொறுப்பு அரசுத்துறை வழக்கறிஞரை நியமிக்க செஷன்ஸ் நீதிபதிக்கோ அல்லது மாஜிஸ்ட்ரேட்டிற்கோ Cr.P.C–ன் படி அதிகாரமில்லை. அதற்கு மாற்று வழியாக சட்ட திருத்தமோ அல்லது சட்ட விளக்கமோ செய்யப்பட வேண்டும்.

மேலும், புலன்விசாரணை சமயத்தில், அனைத்து பொருள்களும் காவல்துறையின் வசம் இருக்கும்போது, வழக்கை நடத்தும் பொருப்பில் உள்ள அரசுத் துறை வழக்கறிஞருக்கு புலன்விசாரணை நடத்தும் அதிகாரி விவரங்களை சரிவர விளக்காத போது, நீதி தடுமாறிப் போகக்கூடும். அவ்வாறான சூழ்நிலை ஏற்படாமல் இருக்க புகார் அளித்தவரது

வழக்கறிஞர், புலன் விசாரணை சமயத்தில் ஜாமீனை எதிர்ப்பதில் பெரும் பங்கு வகிக்க வேண்டும்.

ஜஸ்டிஸ் ஜெ. எஸ் வர்மா கமிட்டியின் பரிந்துரைகள்:

குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு உதவும் வழக்கறிஞரின் முக்கிய பணியை ஜஸ்டிஸ் ஜெ. எஸ் வர்மா கமிட்டி அங்கீகரித்தது கமிட்டி தனது அறிக்கையின் 26, 27 வது பத்தியில் முறையே கீழ் வருமாறு குறிப்பிட்டது:[31]

26. பாலியல் வன்கொடுமை, பாலியல் தாக்குதல் சம்பந்தப்பட்ட வழக்குகளில் புகார் அளித்தவருக்கோ அல்லது குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கோ விசாரணைக்கு முன்போ அல்லது. விசாரணையின் போதோ, கூடுதல் சட்ட பிரதிநிதித்துவம், வேண்டப்பட்டால் அதை கொடுக்க வேண்டும். குற்றத்தை விசாரிக்கும் பொறுப்பு அரசிடமே முழுமையாக இருந்த போதும், பாலியல் வன்புணர்ச்சி, பாலியல் தாக்குதல் சம்பந்தப்பட்ட வழக்குகளில் புகார் அளித்தவருக்கோ அல்லது குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கோ தன் சொந்த வழக்கறிஞர் வைத்துக்கொள்ளும் வாய்ப்பு இருக்க வேண்டும். அவ்வழக்கறிஞர் அரசுத்துறை வழக்கறிஞருக்கு உதவவும், சாட்சிகளை விசாரிக்கவும், நீதிமன்றதுக்கு தெரிவிக்கவும் அனுமதிக்கப்பட வேண்டும்.

27. Cr.P.C-ன் 24(8) வது பிரிவின் கிளைப் பிரிவின் படி, குற்றத்தால் பாதிக்கப்பட்ட வருக்குதன் சொந்த வழக்கறிஞர் வைத்துக்கொண்டு, ப்ராசெக்யூஷனுக்கு உதவும் வாய்ப்பை நீதிமன்றம் அளிக்க வேண்டும் என்பதை நாங்கள் கவனத்தில் கொண்டுள்ளோம். இருந்தாலும், குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்குத் தன் சொந்த வழக்கறிஞர் வைத்துக் கொள்ளும் சுயவுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பது அவசியமாகும் என்று நாங்கள் கூற விரும்புகிறோம். அதாவது, நீதிமன்றத்தில் நடைபெறும் நீதி வழங்கும் நடைமுறையில் குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு தன் சொந்த வழக்கறிஞர் வைத்துக் கொள்ளும் சுய உரிமை அளிக்கப்பட வேண்டும் என்பது சட்டபூர்வமான ஒரு உரிமையாக ஆக்கப்படவேண்டும்; அதாவது, குற்றமிழைத்தவருடைய சொந்த வழக்கறிஞர், நீதிமன்றத்தால் செவிமடுக்கப்படும் சுய உரிமை இருக்க வேண்டும் என்றும் அவர் வெறுமனே அரசு வழக்கறிஞருக்கு எடுபிடியாக மட்டுமே இருக்க வேண்டியதில்லை. இவ்வாறு செய்யப்பட்டால், நீதி வழங்கும் முறை மேலும் சீராகும் என்று இந்தக் குழு நம்புகிறது.

## VIII. குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் சொந்த வழக்கறிஞரது பணிகள்:

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன், புலன் விசாரணையின் போது பெண்களுக்கெதிரான கொடுமைகள் இழைக்கப்பட்ட வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவரின் பிணை விடுப்பு மனுவை முறையாக எதிர்க்க சட்ட உதவி தேவைப் படலாம். சட்ட உதவி வழக்கறிஞரின் பணி Cr.P.C–ன் 24(8) உட்பிரிவு, மற்றும் 301(2) பிரிவின் படியும் இருக்கலாம். (1) அரசு வழக்கறிஞருக்கு உதவியாக அவரது ஆலோசனைப்படி

31 Report of the Committee on Amendment to Criminal Law. Accessed from: http://www.thehindu.com/multimedia/archive/01340/Justice_Verma_Comm_1340438a.pdf. Last visited on 7th February, 2014.

நடத்தல், சிறப்பு அரசு வழக்கறிஞர் நியமிக்கப்பட்டால், நீதிமன்றத்தின் அனுமதியுடன் அவருக்கு குற்றம் சாட்டும் தரப்பிற்கு உதவுதல் (2) சாட்சியங்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டவுடன், நீதிமன்றத்தின் அனுமதியுடன் எழுத்து மூலமான வாதங்களை சமர்ப்பிக்கலாம். Cr.P.C–ன் பிரிவு 2(u)–ன் படி, அரசு வழக்கறிஞருக்கு உதவியாக செயல்படுபவரும் அரசு வழக்கறிஞராகவே கருதப்படுவார். எனவே, அரசு வழக்கறிஞருடைய செயல்களும், பொறுப்புகளும் சட்ட உதவி வழக்கறிஞருக்கும்/ குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் சொந்த வழக்கறிஞருக்கும் குற்றம் சாட்டும் தரப்புக்கு உதவும் அந்த வழக்கில் உரிமை உண்டு.

Delhi Domestic Working Women's Forum v. Delhi Police,[32] இல் மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வு, குற்றத்தால் பாதிக்கப்பட்டவருடைய சொந்த வழக்கறிஞரின் செயல்பாடுகள் குறித்து பின் வருமாறு விளக்கம் கூறியது.

பெண்களுக்கெதிரான பாலியல் வன்கொடுமைகள் இழைக்கப்பட்ட வழக்கில் அவருக்கு சட்ட உதவி வழங்கப்பட வேண்டும். குற்றவியல் நீதிமன்றத்தின் நடைமுறைகளை நன்கு அறிந்தவர் அவருக்கு உதவ துணை இருக்க வேண்டும். குற்றத்தால் பாதிக்கப்பட்டவருடைய சொந்த வழக்கறிஞரின் பணி அவருக்கு நீதிமன்றத்தின் நடைமுறைகளை நன்கு விளக்குவதோடு, அவரை வழக்கை சந்திக்க முறையாக தயார் செய்யவும், காவல் நிலையத்திலும், நீதி மன்றத்திலும் உதவவும், மற்ற முகவர்களிடமிருந்து எவ்வாறு வேறு விதமான உதவிகளைப் பெற முடியும் என்பதையும் அவருக்கு விளக்க வேண்டும். (உம்) மன ஆலோசனை அல்லது மருத்துவ உதவி.[33]

குற்றத்தால் பாதிக்கப்பட்டவருடைய வழக்கறிஞரின் பங்களிப்பின் அளவையும் வேலையின் கால அளவையும் குறித்து நீதிமன்றம் கூறியதாவது: புகார் அளித்தவருக்கு ஆரம்பகட்டத்தில் காவல்நிலையத்தில் உதவிய அதே நபர் கடைசி வரையில் அவருடைய சட்டப் பிரதிநிதியாக இருப்பது மிகவும் முக்கியம்.[34]

## 1. குற்றத்தால் பாதிக்கப்பட்டவருடைய வழக்கறிஞர் அரசு வழக்கறிஞருடைய செயல்களில் அவருக்கு பங்களிப்பு செய்பவராகச் செயல் படுதல்:

குற்றத்தால் பாதிக்கப்பட்டவருடைய வழக்கறிஞர்/சட்ட உதவி வழக்கறிஞர் எந்த அளவுக்குத் தலையிடலாம், அரசு வழக்கறிஞரிடம் உள்ள வழக்கு கோப்புகளை எவ்வளவு தூரம் கையாளலாம் என சட்டம் அறுதியிட்டுச் சொல்லவில்லை ஆதலால், சாதாரணமாக அரசு வழக்கறிஞர் தன்னிடம் உள்ள வழக்கு கோப்புகளை அவர் கையாள்வதை. பார்வையிடுவதை குற்றவிசாரணையில் உதவி செய்வதை தடை செய்ய வேண்டியதில்லை அரசு வழக்கறிஞரிடம் உள்ள வழக்கு குறிப்பேடு நீங்கலாக[35] மற்ற வழக்கு கோப்புகளை, கையாளவும், குற்றவிசாரணையில் உதவவும் செய்யலாம் அவர் அரசு வழக்கறிஞரிடம் சம்பந்தப்பட்ட உண்மைகளையும், தகுந்த சட்ட விவாதங்களையும் எடுத்துரைக்கலாம்.

---

32 1995 Scc(1) 14.
33 Ibid. at para 15.
34 Ibid.
35 Under Section 172 of the Cr.P.C only the Court may call for a Case Diary in pending inquiry or Trial and may use it only for the aid of the inquiry or Trial and not as evidence. The Case Diary contains the day to day proceedings of investigation and includes statements recorded under Section 161 of the Code.

குற்றத்தால் பாதிக்கப்பட்டவருடைய வழக்கறிஞர்/சட்ட உதவி வழக்கறிஞர் நீதிமன்றத்தின் அனுமதியுடன் அரசு வழக்கறிஞருக்கு சம்பந்தப்பட்ட உண்மைகளையும், தகுந்த சட்ட விவாதங்களையும் எடுத்துரைத்து ப்ராசெக்யூஷனில் உதவுவதும், நாடப்படுவதும் சட்டபூர்வமாக்கபடுவது குறித்தும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். குற்றவியல் நீதியின் பகிர்ந்தளிப்பில் வாய்மொழியான வாக்குமூலங்களும், Cr.P.C பிரிவு 301(2)–ன் கீழ் செய்யப்படும் எழுத்து மூலமான வாதங்களும்தான் அடிப்படையாகின்றன. எனவே அரசு வழக்கறிஞருடைய வாய்மொழியான வாதங்களின் போது, சில சட்ட வாதங்கள் முன் வைக்கப்படாவிட்டாலோ அல்லது தேவையான உண்மைகள் நீதிமன்றத்தின் முன் கவனமின்மையாலோ அல்லது வேறு காரணத்தாலோ வைக்கப்படாவிட்டாலோ (உம்) குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் வழக்கறிஞர்/சட்ட உதவி வழக்கறிஞர் அரசு வழக்கறிஞர் சந்தித்து விவாதிக்க நேரமின்மை) குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் வழக்கறிஞர்/சட்ட உதவி வழக்கறிஞர் அரசு வழக்கறிஞருடைய அனுமதியுடன் அவ்வாறான கேள்வியை எழுப்ப அனுமதிக்கப்பட வேண்டும்.

Cr.P.C பிரிவு 301(2)–ன் பின் வரும் வாசகங்கள் கவனிக்கப்பட வேண்டியவை: வழக்கின் குற்ற விசாரணை நடத்தும் பொறுப்பில் உள்ள அரசு வழக்கறிஞர் அவ்வாறு (எந்த ஒரு தனி நபராலும்) நீதிகேட்டு வாதாடுபவர், அரசு வழக்கறிஞருடைய அனுமதியுடன் குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் வழக்கறிஞர் பரந்த உதவிகளைச் செய்ய வழிகோலுகிறது.

குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் வழக்கறிஞர் அரசு வழக்கறிஞருக்கு சம்பந்தப்பட்ட வழக்கின் முன்னேற்றம் குறித்து சொல்லலாம். (உம்) சாட்சியங்களுக்குப் பாதுகாப்புத் தேவை என்பது குறித்து விளக்கலாம்.

ஒரு வேளை அரசு வழக்கறிஞர் தனது வேலையை செய்யவில்லையென்றால், குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் வழக்கறிஞர் சட்டப்படி தேவையான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

## IX. சட்ட உதவி:

பாரம்பரியமாக, சட்ட உதவி என்ற கருத்து, கடுமையான குற்றம் சாட்டப்பட்டவரின், தனது பொருளாதார நிலை காரணமாக அவர் செலவு செய்து சொந்தமாக ஒரு வழக்கறிஞரை வைத்து வாதாட இயலாத போது அவருக்கு அரசாங்க செலவில் ஒரு வழக்கறிஞரை வைத்துக் கொள்ளவே ஏற்பட்டது.

இந்திய அரசியல்சாசன சட்டத்தின், 39A பிரிவின் வழிகாட்டும் கொள்கையின்படி, தேவையான சட்ட உதவி அமைத்துக் கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும் மேலும் பாகுபடில்லாமல், நீதிமுறை, நீதி வழங்குவதையும் உறுதி செய்ய வேண்டும். 1987 ஆண்டின் சட்ட சேவை அதிகாரிகள் சட்டம் (LSA) அரசியல் சாசன சட்டத்தின் இந்த வழிகாட்டும் ஆணையை நிறைவேற்றியுள்ளது. மேலும் இச்சட்டத்தின் 12வது பிரிவின்படி, அனைத்து பெண்களும், குழந்தைகளும் இந்த உதவிக்கு தகுதியானவர்கள்.

### 1. குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு சட்ட உதவி

ஒரு பெண் கொடுத்த, புலன் கொள்ளக்கூடிய குற்றம் சம்பந்தமான புகாருக்கு புலன் விசாரணை நடத்தும் காவல்துறை அதிகாரி முதல்நிலை புலன் விசாரணையை நடத்திய பின், Cr.P.C. 156(1) பிரிவின்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமலும்,வழக்கு முடிக்கப்பட்டால், புகார் கொடுத்தவர் Cr.P.C. 156(3) பிரிவின்படி தக்க நீதிகேட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவு வேண்டி மாஜிஸ்ட்ரேட்டை அணுக சட்ட உதவி அமைத்துக் கொடுக்க கோருவது அவரது உரிமையாகும்.

### 2. சட்ட ஆலோசனை:

1987 ஆண்டின் சட்ட சேவை அதிகாரிகள் சட்டம் (LSA) பிரிவு 2–ன் படி, சட்ட சேவை என்பது எந்த ஒரு விஷயத்திலும் சட்ட ஆலோசனை வழங்குவதையும் உள்ளடக்கும்.

அந்த சட்டஆலோசனை, பொருத்தமானால், Cr.P.C பிரிவு 161–ன் கீழ் வாக்குமூலம் பதிவு செய்யப்படும் விதத்தையும், அவை எங்கு, எப்போது பதிவு செய்யப்படலாம் என்பதையும், குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு விசாரணையின் பல நிலைகளில் அவ்வப்போது தனது உரிமைகளை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ளலாம் என்பதையும் எடுத்துரைக்கலாம்.

## X. தீர்ப்பு:

### 1. தண்டனை அல்லது விடுதலை:

Cr.P.C பிரிவு 235–ன் படி, வாதங்களையும் சட்ட நுணுக்கங்களையும் கேட்ட பின், நீதிபதி தீர்ப்பு வழங்குகிறார்.

### 2.தண்டனை:

குற்றவாளி தண்டிக்கப்படும் போது, தண்டனை குறித்த குற்றவாளியின் வாதத்தை செவிமடுத்த பின், தக்க தண்டனை அளிப்பார்.

> குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு, அவரது வழக்கறிஞர், வழக்கின் இறுதித் தீர்ப்பு குறித்தும், அதற்கு மேல் மேல்முறையீடு அல்லது சிறையில் அடைப்பது அல்லது விடுதலை குறித்து அறிவிக்க வேண்டும்.

### 3. Cr.P.C 357–ன் படியான இழப்பீடு:

Cr.P.C பிரிவு 357–ன் படி, இழப்பீடு, குற்றம் சாட்டப்பட்டவரின் அபராதத் தொகையிலிருந்து, வழங்கப்படலாம். அபராதத் தொகை அவரது, தண்டனையில் இல்லையென்றால், Cr.P.C பிரிவு 357(3)–ன் படி அபராதத் தொகை விதிக்காமல் தகுந்த இழப்பீடு குறித்து நீதிமன்றம் உத்தரவிடலாம்.

## 4. Cr.P.C பிரிவு 357A-ன் படி, பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு திட்டம்

பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்கும் திட்டத்தை ஒவ்வொரு மாநில அரசும் தயாரித்து, பாதிக்கப்பட்டவருக்கும், அவரது இழப்பை சந்தித்த, மறுவாழ்வளிக்கப்பட வேண்டிய அவரது வாரிசுகளுக்கும் தகுந்த நிதி ஒதுக்க வேண்டும். நீதிமன்றத்தின் பரிந்துரைப்படி, மாவட்ட அல்லது மாநில சட்ட சேவை அதிகாரிகள் அமைப்பு அளிக்கப்பட வேண்டிய தகுந்த இழப்பீட்டை முடிவு செய்யும்.

குற்றம் சாட்டப்பட்டவரைக் கண்டுபிடிக்க முடியாவிட்டாலோ அல்லது அடையாளம் கண்டுகொள்ள முடியாவிட்டாலோ, மேலும் வழக்கு நடைபெறாவிடில், பாதிக்கப்பட்டவர் மற்றும் அவரது வாரிசுகள் மாவட்ட அல்லது மாநில சட்ட சேவை அதிகாரிகள் அமைப்புக்கு Cr.P.C பிரிவு 357A(4)–ன் படி இழப்பீடு கோரி மனு செய்யலாம்.

நீதிமன்றத்தின் பரிந்துரைப்படி அல்லது இழப்பீடு கேட்டு கொடுக்கப்பட்ட மனு கிடைத்தவுடன், மாவட்ட அல்லது மாநில சட்ட சேவை அதிகாரிகள் அமைப்பு உடனடியாக, இரண்டு மாதத்திற்குள்ளாக விசாரணை நடத்தி, தகுந்த இழப்பீட்டை வழங்க வேண்டும்.

# இணைப்புகள்

# இணைப்புகள்

## இணைப்பு 1

**அட்டவணை 1: இந்திய தண்டனைச் சட்டத்தின் படியான (Indian Penal Code, 1860) POSCO சட்ட குற்றங்களும் அவற்றுக்கான தண்டனைகளும்**

| எண் | குற்றமும் விளக்கமும் | இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் தண்டனை |
|---|---|---|
| 1. | **பிரிபு 354 A**<br>ஆண் ஒருவனின் பின்வரும் செய்கைகள் பாலியல் துன்புறுத்தலில் அடங்கும்: (i) உடல் ரீதியாகத் தொடுவது, வரவேற்க முடியாத பாலியல் தனமை நிறைந்த சமிக்ஞைகளுட்ன் அச்சாரம் (கூப்பிடுவது)செய்வது (ii) பாலியல் சலுகை தரும்படி கோருவது நிர்ப்பந்திப்பது (iii) பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக பாலியல் ஆபாச மானவற்றைக் காட்டுவது; (iv) பாலியல் பொருள் தரும் கூற்றுகள் | (I) முதல் (iii) வரையிலான நிகழ்வுகளுக்க 3 ஆண்டுகள் வரை நீளக் கூடிய சிறைத் தண்டனை அல்லது நீளக்கூடிய கடுங்காவல் சிறைத்தண்டனை அபராதம் அல்லது இரண்டும் (iv)வது வகைப்பட்ட குற்றத்திற்கு 1 ஆண்டு சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும். |
| 2. | **பிரிவு 354 B**<br>துகிலுரியும் நோக்கத்துடன் அல்லது நிர்வாணப்படுத்த வற்புறுத்தி ஒரு பெண்ணைத் தாக்குவது அல்லது குற்ற நோக்கத்துடன் வலுக்கட்டாயப்படுத்துவது | மூன்றாண்டுகளுக்குக் குறையாத சிறைத்தண்டனை அது 7 ஆண்டுகள் வரை நீளலாம் மேலும் அபராதம் விதிக்கவும் வாய்ப்புள்ளது. |
| 3. | **பிரிவு 354 C**<br>பாலியல் உறுப்புகளை அந்தரங்க நிலையில் இருப்பதை உற்றுப் பார்த்தல், படம் பிடித்தல் (Voyeurism) தனித்து இருந்து ஒரு செய்கையில் ஈடுபடும் பெண்ணை, வழக்கமாக யாரும் அதனைப் பார்க்கமாட்டார்கள் என்றிருக்க அவளின் செய்கையை உற்றுப் பார்க்கும் அல்லது அவளை / அவளின் செய்கையைப் படம் பிடிக்கும் ஆணின் குற்றம் புரிபவனின் தூண்டுதலால் அதனைச் செய்யும் வேறு எந்தவொரு நபரின் / நபர்களின் செயல்பாடு குற்றமாகும். | முதல் முறையான குற்றம் ஓராண்டு சிறை தண்டனை, அது மூன்றாண்டுகள் வரை நீளலாம். அத்துடன் அபராதம் அடுத்து அடுத்து குற்றமிழைப்பது மூன்றாண்டு சிறை தண்டனை, அது ஏழு ஆண்டுகள் வரை நீளலாம் அத்துடன் அபராதமும் விதிக்கலாம். |
| 4. | **பிரிவு 354 D**<br>பின் தொடர்தல் என்கிற குற்றம் ஒரு ஆணால் (Stalking) is an offence by a man who (i) ஒரு பெண்ணை ஆண் பின்தொடர்ந்து, அந்தப் பெண் மறுத்த போதும், மிகத் தெளிவான முறையில் ஆர்வமின்மையை வெளிப்படுத்திய போதும், இருவருக்குமிடையிலான தனிப்பட்ட பேச்சுவார்த்தைக்கு ஊடலுக்கு தொடர்பு கொள்ள முயல்வது அல்லது தொடர்புகொள்வது; அல்லது (ii) ஒரு பெண் வலைமனையை, இ மெயிலை அல்லது வேறு எந்தவிதமான மின்னணு தகவல் தொடர்பு கொள்வதைக் கண்காணிப்பது | முதல் முறையான குற்றம் மூன்றாண்டுகள் வரை நீளக்கூடிய சிறை தன்டணனை. அத்துடன் அபராதம் விதிக்கப்படலாம் அடுத்து அடுத்து குற்றமிழைப்பது ஏழாண்டுகள் வரையிலான சிறை தண்டனை அத்துடன் அபராதமும் விதிக்கலாம். |

| எண் | குற்றமும் விளக்கமும் | இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் தண்டனை |
|---|---|---|
| 5. | **பிரிவு 370**<br>ஒருவரை அடிமைப் படுத்தி சுரண்டுவதற்காக ஒரு மனிதரைக் கடத்தி வணிகம் செய்வது (Trafficking) குற்றமாகும். முதலாவதாக அச்சுறுத்தல் மூலமும், இரண்டாவதாக பலவந்தம்/ மிரட்டல் மூலமும் மூன்றாவதாக கடத்தல் மூலமும, நான்காவதாக, ஏமாற்றுவது மூலமும், ஐந்தாவதாக அதிகார துஷ்பிரயோகம் மூலமும், ஆறாவதாக தூண்டுவது பணப்பரிமாற்றம் போன்றவை உள்ளடக்கிய தூண்டுதல் மூலமும் (a) ஆள் பிடிப்பது (b) பிறிதொரு இடத்துக்குக் கடத்துவது (c) பதுக்கி வைப்பது (d) கைமாற்றுவது அல்லது (மீ) பெற்றுக்கொள்வது மனிதரைக் கடத்தி வணிகம் செய்யும் குற்றமாகும். சரண்டுவது என்பதில் பாலியல் சுரண்டலும் அடங்கும். | பிரிவுகள் 370 (4), 370 (5), 370 (6) ஆகியவை சிறார்களைக் கடத்துவதுடன் தொடர்புடையவை. இந்தக் குற்றத்திற்கு ஆயுள் தண்டனை வரை நீளக் கூடிய குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் வரையிலான கடுங்காவல் தண்டனை அளிக்கப்பபடும். அத்துடன் அபராதமும் விதிக்கப்படலாம்.<br>ஏழு ஆண்டுகளுக்குகுறையாதபத்துஆண்டுகள் வரைநீட்டிக்கக்கூடியகடுங்காவல்தண்டனையும் அத்துடன் அபராதமும் விதிக்கப்படலாம் |
| 6. | **பிரிவு 370 A**<br>கடத்தப்பட்டு வணிகம் செய்யப்படும் ஒரு நபரை சுரண்டுவது குற்றமாகும். ஒருவர் அதனைத் தெரிந்து செய்திருக்கலாம் அல்லது ஒரு சிறார் கடத்தப்பட்டு வணிம் செய்யப்பட்டிருக்கிறார் என்று உணர்ந்துகொள்வதற்கான வாய்ப்புகள் இருக்கும் சூழலில் அந்த சிறாரைப் பாலியல் சுரண்டல் செய்வதும் குற்றமாகும்.<br>ஒருநபரைஅடிமைப்படுத்திசுரண்டுவதற்காகக் கடத்திவணிகம் செய்வதுதெரிந்திருந்தும் அ ல் ல து அ த னை உ ண ர் ந் து கொள்வதற்கானவாய்ப்புகள் இருக்கும் சூழலில்அந்தநபரைபாலியல்சுரண்டல்செய்வதும் குற்றமாகும் | **பிரிவு 370 A**<br>இந்தக் குற்றத்திற்கு ஏழு ஆண்டுகள் வரை நீளக் கூடிய குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் வரையிலான கடுங்காவல் தண்டனை அளிக்கப்பபடும். அத்துடன் அபராதமும் விதிக்கப்படலாம்.<br>ஐந்து ஆண்டுகள்வரைநீளக்கூடியகுறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள்வரையிலானகடுங்காவல்த ண்டனைஅளிக்கப்படும் அத்துடன் அபராதமும் விதிக்கப்படலாம் |

| எண் | குற்றமும் விளக்கமும் | இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் தண்டனை |
|---|---|---|
| 7. | **பிரிவு 375**<br>பின்வருவனற்றில் ஒரு ஆண் ஈடுபட்டால் அது பாலியல் வன்புணர்ச்சி என்று கொள்ளப்படும் (a) பெண்ணின் யொனி, வாய், சிறுநீர் கழிவுப் பாதை அல்லது குதத்தில் ஆண் குறியை எந்த அளவுக்கேனும் நுழைத்தல் அல்லது வேறு ஒருவருடன் அவ்வாறு ஒரு பெண்ணை செய்யும்படி செய்தல் அல்லது (b) பெண்ணின் யொனி, வாய், சிறுநீர் கழிவுப் பாதை அல்லது குதத்தில் ஏதேனும் ஒரு பொருளை அல்லது ஆண் குறியில்லா உடல் பாகத்தை எந்த அளவுக்கேனும் நுழைத்தல் அல்லது வேறு ஒருவருடன் அவ்வாறு ஒரு பெண்ணை செய்யும்படி செய்தல் அல்லது (c) பெண்ணின் யொனி, வாய், சிறுநீர் கழிவுப் பாதை அல்லது குதத்தில் நுழைத்தலுக்காக பெண்ணின் எந்தவொரு உடல் பாகத்தையும் கையாளுவது அல்லது தன்னிடமோ அல்லது வேறு ஒருவருடனோ அவ்வாறு ஒரு பெண்ணை செய்யும்படி செய்தல் அல்லது (d) ஒரு பெண்ணின் யோணி, குதம் சிறுநீர் வெளியேறும் வழியில் ஒருவன் வாய் வைப்பது அல்லது தன்னுடனோ அல்லது வேறு ஒருவனுடனோ ஒரு பெண்ணை அவ்வாறு செய்யச் செய்வது. மேற்சொன்னவை பின்வரும் ஏழு நிலைமைகளில் நிகழ்ந்திருக்கலாம் முதலாவது.அவளின் விருப்பத்திற்கு எதிராக இரண்டாவதாக.அவளின் ஒப்புதல் இல்லாமல். மூன்றவதாக. அவளையோ அல்லது அவளின் நேசத்திற்குரிய ஒருவரையோ காயப்படுத்துவார்கள்/ கொலை செய்வார்கள் என்ற மரண பயத்தை உருவாக்கியதின் மூலம் பெறப்பட்ட அவளின் ஒப்புதல் நான்காவதாக. ஒருவன் தான் அவளின் கணவன் இல்லை என்று தெரிந்திருக்க, அந்த மனிதன் தான் சட்டபூர்வமாக மணந்துகொண்ட கணவன்தான் என்ற நம்பிக்கையின் பேரில் அந்தப் பெண் அளித்த சம்மதம் ஐந்தாவதாக. ஒப்புதல் அளிக்கும்போது மனநிலை சரியில்லாதிருந்து, அல்லது போதையில் இருந்து, செயலைச் செய்தவனோ அல்லது வேறு ஒருவன் அளித்த போதையூட்டும் பொருளின் செல்வாக்கின் கீழ் இருந்து அவளுக்கு என்ன நடக்கிறது, என்ன விளைவுகள் ஏற்படும் என்று தெரியாமல் அளித்த சம்மதத்தின் பேரில் ஆறாவதாக. பெண்ணுக்கு 18 வயது நிறைவடையாத போது அவளின் சம்மதத்துடனோ அல்லது சம்மதம் இன்றியோ ஏழாவதாக. சம்மதத்தை தெரிவிக்க இயலாத சூழலில் விளக்கவுரை | **பிரிவு 376**<br>உட்பிரிவு (2), கீழான நிகழ்வுகள் தவிர, வன்புணர்ச்சியில் ஈடுபட்டவர் யாராக இருந்தாலும் அவருக்கு 7 ஆண்டுகளுக்குக் குறையாத கடுங்காவல் தண்டனையோ அல்லது ஆயுள் தண்டனையோ அளிக்கப்படலாம் அத்துடன் அபராதம் விதிக்கப்படலாம். (2) யாராக இருந்தாலும், (ணீ) ஒருகாவல்அதிகாரிஎன்றால் வீ) அவர் நியமனம் செய்யப்பட்டுள்ளகாவல்நிலையஎல்லைக்குஉட்பட்டஅல்லது வீ வீ ) வேறுஎந்தகாவல்நிலையவளாகத்திற்குள்அல்லது வீவீவீ)அந்த அதிகாரியின் அல்லது அவரது கீழமை அதிகாரியின் பாதுகாவலில் உள்ளபெண்ணைஅல்லது தீ) ஒரு பொதுஊழியர் தன் காவலில் அல்லது தனது கீழமைஊழியரின் பாதுகாவலில் இருக்கும் பெண்ணை (நீ) மத்திய அல்லது மாநில அரசின் கட்டளையின் கீழ் ஒரு பகுதியில் பணிக்கு அனுப்பப்பட்ட ஆயுதப் படையின் உறுப்பினர் அதந் பகுதியில் உள்ள ஒரு பெண்ணை; அல்லது (பீ) ஒருசிறையின் அல்லதுதண்டனைக் காவல்இல்லத்தின் அல்லது காவல்கண்காணிப்பிற்கானஇதரஇடங்கள்அல்லதுசட்டத்தின் படியோசட்டத்தின் கீழோபெண்கள்/ சிறார்கள்நிலையத்தின் நிர்வாகி அல்லதுஊழியர், அ ந் த சி றை யி ல் அ ல் ல து த ண் ட னை க் காவல்இல்லத்தின் அல்லதுபெண்கள்/ சிறார்கள்நிலையத்தில் தங்கியிருக்கும் ஒருவரைபாலியல்வன்புணர்ச்சி செய்தால் அல்லது (மீ) மருத்துவமனையொன்றில் நிர்வாகத்தில் இருப்பவர் அல்லது ஊழியராக இருப்பவர்அந்த மருத்துவமனையொன்றின் பெண்ணை வன்புணர்ச்சி செய்தால் ; அல்லது (யீ) ஒருபெண்ணின் உறவினர், பாதுகாவலர், ஆசிரியர் அல்லதுஅந்தப் பெண்ணின் மீது அதிகாரம் உடையவர் அல்லதுஅந்தப் பெண்ணின் நம்பிக்கைக்குபாத்திரமானநிலையில் இருக்கும் ஒருநபர் அப்பெண்ணின் மீது பாலியல்வன்புணர்ச்சி குற்றம் இழைத்தால் அல்லது (ரீ) வகுப்புவாத அல்லது பிளவு வாத வன்முறையின் போது பாலியர் வன்புணர்ச்சி குற்றம் இழைத்தால்; அல்லது (லீ) ஒரு கர்ப்பமுற்றிருக்கிறாள் என்று தெரிந்தும் வன்புணர்ச்சி செய்தால் ; அல்லது (வீ) 16 வயதுக்குட்பட் ஒரு பெண்ணை வன்புணர்ச்சி செய்தால்; (ழீ) ஒப்புதல் தரஇயலாத நிலையில் உள்ள ஒரு பெண்ணை பாலியல் வன்புணர்ச்சி செய்தால்; அல்லது (ளீ)ஒரு பெண்ணைக் கட்டுப்படுத்தும், அதிகாரம் செய்யும் நிலையில் இருந்துகொண்டு அதுபோன்ற பெண்ணின் மீது பாலியல் வன்புணர்ச்சி குற்றம் இழைத்தால்; |

| எண் | குற்றமும் விளக்கமும் | இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் தண்டனை |
| --- | --- | --- |
| | 1. இந்தப் பிரிவைப் பொறுத்தவரை யோனி என்பதற்குள் பெண் குறியின் உதடு மடிப்புகளும் (labia majora) உள்ளடங்கியதாகும். விளக்கவுரை 2. ஒரு பெண் வாய் வார்த்தைகள் மூலமோ, உடல் மொழி மூலமோ, அல்லது எந்தவித வார்த்தை அல்லது வார்த்தைகள் அல்லாத வெளிப்பாட்டின் மூலமோ எந்தவித சந்தேகத் திற்கும் இடம் அளிக்காத வகையில் ஒரு குறிப்பிட்ட பாலியல் நடவடிக்கையில் பங்கேற்க ஒரு பெண் அளிக்கும் ஒப்புதல் என்பது சம்மதம் என்பதற்கான பொருளாகும். ஒரு பெண் உள் நுழைத்தலை உடல் ரீதியாக எதிர்க்கவில்லை என்பதனாலேயே, அதுதான் உணமை விவரம் என்பதாலேயே, அவள் அந்த பாலியல் செயல்பாட்டுக்குச் சம்மதம் தெரிவித்தாள் என்று ஆகாது. விதிவிலக்கு 1. ஒரு மருத்துவச் செயல்பாடு அல்லது குறுக்கீடு பாலியல் வன்புணர்வு என்று ஆகாது . விதிவிலக்கு 2. ஒரு ஆண் பதினைந்து வயதுக்குக் குறையாத வயதுடைய தன் மனைவியுடன் கொள்ளும் உடல் உறவு பாலியல் வன்புணர்ச்சி ஆகாது. | அலலது (l) மன அல்லது உடல் இயலாமையால் துன்புறும் பெண்ணிடம் வன்புணர்ச்சி செய்தால்; அல்லது (m) வன்புணர்ச்சியின் போது உடல் காயங்கள்அல்லது ஊனத்தை ஏற்படுத்துவது, அல்லது உடல் சிதைவை ஏற்படுத்துவது அல்லது பெண்ணின் உயிருக்க அபாயத்தை ஏற்படுத்துவது; அல்லது (n) ஒரு பெண்ணின் மீது மீண்டும் மீண்டும் பாலியல் வன்புணர்ச்சி குற்றத்தைச் செய்வது , ஆகிய குற்றங்களுக்கு பத்து ஆண்டுகளுக்குக் குறையா கடுங்காவல் தண்டனை முதல் ஆயுள் தண்டனை வரை அளிக்கப்படலாம். ஆனால், ஆயுள் தண்டனை என்பது அந்த நபரின் இயற்கையான வாழ்நாள் வரைக்குமான தண்டனை என்று பொருளாகும். அத்துடன் அபராதமும் விதிக்கப்படலாம். |
| 8. | **பிரிவு 376** A<br>பிரிவு 376 (1) மற்றும் (2)ல் கூறப்பட்ட குற்றங்களைச் செய்து அதன் தொடர்ச்சியாக வன்புணர்ச்சி செய்யப்பட்டவரின் மரணத்துக்கு அல்லது நிரந்தரமாக எந்த அசைவும் இல்லாத உடல் நிலைக்கு தள்ளியவருக்கான தண்டனை | 20 ஆண்டுகளுக்குக் குறையாத கடுங்காவல் தண்டனை. அது ஆயுள் தண்டனையாக நீளவும் செய்யலாம். ஆயுள் தண்டனை எனும்போது, அந்த நபரின் இயற்கையான வாழ்நாள் முடியும் வரையிலும் அவர் சிறையில் இருக்க வேண்டும். அல்லது மரண தண்டனை |
| 9. | **பிரிவு 376** C<br>அதிகாரப் பொறுப்பில் உள்ள ஒருவர் பாலியல் உறவு கொள்வது அதிகாரப் பொறுப்பில் உள்ள அல்லது நம்பிக்கைக்குப் பாத்திரமான பொறுப்பில் உள்ளஒருவர் ; ஒரு பொது ஊழியர்; ஒரு சிறையின் அல்லது தண்டனைக் காவல் இல்லத்தின், அல்லது காவல் கண்காணிப்பிற்கான இதர இடங்கள் அல்லது பெண்கள்/ சிறாா்கள் நிலையத்தின் அல்லது மருத்துவமனையின் நிர்வாகி அல்லது ஊழியர் அதுபோன்ற தன் பொறுப்பை அல்லது தா்மகா்த்தா உறவு நிலையை துஷ்பிரயோகம் செய்து , ஒரு பெண்ணைத் தூண்டி, அல்லது மயக்கி, தன் காவலின் கீழோ அல்லது அவரின் பொறுப்பில் இருக்கும்போதோ, அல்லது அவரது வளாகத்தில் இருக்கும் போதோ ஒரு பெண்ணிடம் உடல் உறவு கொள்வதை பாலியல் வன்புணர்ச்சி என்று கொள்ளப்பட மாட்டாது. | ஐந்தாண்டுகளுக்குக் குறையாத கடுங்காவல் தண்டனை அது 10 ஆண்டுகள் வரை நீளலாம் அத்துடன் அபராதம். |

| எண் | குற்றமும் விளக்கமும் | இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் தண்டனை |
|---|---|---|
| 10. | **பிரிவு 376 D**<br>கூட்டு பாலியல் வன்புணர்ச்சி ஒரு நபரோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களோ பொது கருத்துடன்/ நோக்கத்துடன் ஒரு குழுவாக கூட்டாக செயல்பட்டு ஒரு பெண்ணை பாலியல் வன்புணர்ச்சிக்கு உட்படுத்தும் செயநள ஈடுபட்டால், அவ்வாறு சம்பந்தப்பட்ட ஒவ்வொரு நபரும் தனித்தனியே வன்புணர்ச்சி குற்றத்தை செய்தவர் ஆவார். | 20 ஆண்டுகளுக்குக் குறையாத கடுங்காவல் தண்டனை. அது ஆயுள் தண்டனையாக நீளவும் செய்யலாம். ஆயுள் தண்டனை எனும்போது, அந்த நபரின் இயற்கையான வாழ்நாள் முடியும் வரையிலும் அவர் சிறையில் இருக்க வேண்டும். அத்துடன் அபராதமும் விதிக்கப்படும். அபராதத் தொகை பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு அளிக்கப்பட வேண்டும். அவரின் மருத்துவச் செலவுக்கும் மறுவாழ்வுக்கும் போதமான தொகையாகவும் அது இருக்க வேண்டும். |
| 11. | **பிரிவு 376 E**<br>திரும்பத் திரும்ப குற்றம் செய்யும் குற்றவாளிகளுக்கு முன்னதாக 376, 376A or 376D ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றம் செய்து தண்டனை பெற்று அதன் பின் மேற்சொன்ன பிரிவுகளில் ஏதேனும் ஒன்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றம் செய்தவர் | **பிரிவு 376 E**<br>அவரின் வாழ்நாள் இயற்கையாக முடியும் வரையிலான ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனை |
| 12. | **பிரிவு 377**<br>இயற்கைக்கு மாறான முறையில், மனம் விரும்பி ஆணுடனோ, பெண்ணுடனோ அல்லது மிருகத்துடனோ தெரிந்தே உடலுறவு கொள்பவர்கள் இந்தப் பிரிவின் கீழ் தண்டிக்கப்படுவார்கள்.<br>விளக்கம்: இந்தக் குற்றதில் சொல்லப்படுகின்றன தெரிந்தே உடலுறவு கொள்வதென்பதில் உள் நுழைப்பதே குற்றம் செய்வது என்று பொருளாகும். ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை. | ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை. |
| 13. | **பிரிவு 509**<br>பெண்ணின் கௌரவத்திற்கு பாதகம் விளைவிக்க நினைக்கும் எவரும், அப்படியான வார்த்தையைச் சொன்னவர், அந்தப் பெண் கேட்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஏதேனும் ஒலி எழுப்பியவர் அல்லது அந்தப் பெண் பார்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் சைகை செய்தவர் அல்லது ஏதேனும் ஒரு பொருளைக் காட்டியவர், அல்லது ஒரு பெண்ணின் அந்தரங்கத்தில் தலையிடுபவர் இந்தப் பிரிவின் கீழ் குற்றம் இழைத்தவர் ஆகிறார். | மூன்று ஆண்டுகள் வரை நீளக் கூடிய சாதாரண சிறைத் தண்டனை அத்துடன் அபராதம் |

**அட்டவணை 2: பாலியல் குற்றங்களிலிருந்து சிறார்களைக் காக்கும் சட்டம்** (The Protection of Children from Sexual Offences Act, 2012) **கீழான குற்றங்களும் அவற்றுக்கான தண்டனைகளும்:**

| எண் | குற்றமும் விளக்கமும் | POCSO வின் கீழ் தண்டனை |
|---|---|---|
| 1. | **பிரிவு 3**<br>ஒரு நபர் பின்வருவனவற்றில் ஈடுபட்டால் ஊடுருவும் /உள்நுழைக்கும் பாலியல் தாக்குதல் குற்றத்தைச் செய்தவராக கொள்ளப்படும்.<br>a) சிறாரின் யோனி, வாய், சிறுநீர் கழிவுப் பாதை அல்லது குத்தத்தில் ஆண் குறியை எந்த அளவுக்கேனும் நுழைத்தல் அல்லது வேறு ஒருவருடன் அவ்வாறு ஒரு சிறானர செய்யும்படி செய்து அல்லது<br>b) சிறாரின் யோனி, சிறுநீர் கழிவுப் பாதை அல்லது குதத்தில் ஏதேனும் ஒரு பொருளை அல்லது ஆண் குறியைத் தவிர வேறு ஏதேனும் உடல் பாகத்தை எந்த அளவுக்கேனும் நுழைத்தல் அல்லது வேறு ஒருவருடன் அவ்வாறு ஒரு சிறாரைச் செய்யும்படி செய்து அல்லது<br>c) சிறாரின் யோனி, சிறுநீர் கழிவுப் பாதை அல்லது குதத்தில் நுழைத்தலுக்காக அச்சிறாரின் எந்தவொரு உடல் பாகத்தையும் கையாளுவது அல்லது தன்னிடமோ அல்லது வேறு ஒருவருடனோ அவ்வாறு ஒரு சிறாரைச் செய்யும்படிச் செய்தல் அல்லது<br>d) ஒரு சிறாரின், ஆண்குறி, யோனி, குதம், சிறுநீர் வெளியேறும் வழியின் ஒருவன் வாய் வைப்பது அல்லது தன்னுடனோ அல்லது வேறு ஒருவனுடனோ ஒரு சிறாரை அவ்வாறு செய்யச் செய்வது. | **பிரிவு 4**<br>ஏழு ஆண்டுகளுக்கு குறையாத ஆயுள் தண்டனை வரை, நீளக் கூடிய சிறைத் தண்டனை விதிக்கப்படும் அத்துடன் அபராதம் விதிக்கப்படும். |
| 2. | **பிரிவு 5**<br>மிகக் கடுமையான ஊடுருவும்/ உள்நுழைக்கும் பாலியல் தாக்குதல்:<br>a) ஒரு காவல் துறை அதிகாரி சிறாருக்கு எதிராக மிகக் கடுமையான ஊடுருவும்/ உள்நுழைக்கும் பாலியல் தாக்குதல் குற்றத்தில் ஈடுபட்டால்<br>(i) அது அவருடைய நியமன எல்லைக்குட்பட்ட காவல் நிலையத்திலோ அல்லது அதன் வளாகத்திலோ நடந்திருந்தால், அல்லது<br>(ii) அந்த அதிகாரி நியமனம் செய்யப்பட்ட காவல் நிலையத்தை தவிர வேறு ஏதாவது காவல் நிலைய வளாகத்தில் நடந்திருந்தால் அல்லது | **பிரிவு 6**<br>பத்து ஆண்டுகளுக்கு குறையாத கடுங்காவல் தண்டனை, ஆயுள் தண்டனை வரை நீளக்கூடிய தண்டனை விதிக்கப்படும். அத்துடன் அபராதம் விதிக்கப்படும். |

| | | |
|---|---|---|
| | (iii) அவர் தன் கடமையைச் செய்யும் போதோ அல்லது வேறு சமயத்திலோ நடந்திருந்தால், அல்லது<br>(iv) அவர் காவல் அதிகாரி என்று தெரியக் கூடிய அல்லது அடையாளம் காணக் கூடிய இடத்தில் நடந்திருந்தால்<br>(b) ஒரு ஆயுதப் படை அல்லது பாதுகாப்பு படை உறுப்பினர் சிறாருக்கு எதிராக ஊடுருவும்/ உள்நுழைக்கும் பாலியல் தாக்குதல் குற்றத்தைச் செய்தால்,<br>(i) அவர் பணிக்கு அனுப்பப்பட்ட பகுதியில் குற்றத்தில் ஈடுபடல், அல்லது<br>(ii) ஆயுதப்படை அல்லது பாதுகாப்பு படையின் கட்டுபாட்டில் உள்ள எந்தப் பகுதியிலும் குற்றத்தில் ஈடுபடல் அல்லது<br>(iii) தன் கடமையைச் செய்யும் போதோ அல்லது வேறு சமயத்திலோ, குற்றத்தில் ஈடுபடல் அல்லது<br>(iv) ஆயுதப்படை அல்லது பாதுகாப்பு படை உறுப்பினர் என்று தெரியக் கூடிய அல்லது அடையாளம் காணக்கூடிய இடத்தில் குற்றத்தில் ஈடுபடல்<br>(c) பொது ஊழியராக இருக்கும் ஒரு நபர் சிறாருக்கு எதிராக ஊடுருவல்/ உள்நுழைக்கும் பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்<br>(d) ஒரு சிறையின் அல்லது தண்டனைக் காவல் இல்லத்தின், பாதுகாப்பு இல்லம், கண்காணிப்பு இல்லம் அல்லது சட்டத்தின் படியோ அல்லது சட்டத்தின் கீழோ அமைக்கப்பட்ட காவல் அல்லது கண்காணிப்பிற்கான இதர இடங்களின் நிர்வாகத்தினரோ அல்லது ஊழியரோ, அந்த சிறை, தண்டனைக் காவல் இல்லம், பாதுகாப்பு இல்லம், கண்காணிப்பு இல்லம் அல்லது இதர காவல், பாதுகாப்பு இல்லங்களில் தங்கியிருக்கும் சிறாரின் மீது ஊடுருவும் /உள்நுழைக்கும் பாலியல் தாக்குதல் குற்றம் இழைத்தால், | |

*குறிப்பு:* **POCSO** *சட்டத்தின் பிரிவு 42 படியும் மேலும் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 166*A*, 354*A*, 354*B*, 354*C*, 354*D*, 370, 370*A*, 375, 376, 376*A*, 376*C*, 376*D*, 376ணி அல்லது* **section** *509 படியும் ஒரு செயல்பாடு அல்லது செய்யாமல் விடுத்தது தண்டனைக்குரிய குற்றம் என்றால், தற்போது நடப்பில் இருக்கும் சட்டங்கள் எவற்றிலும் என்ன சொல்லப்பட்டிருந்த போதிலும், இந்த இரண்டு சட்டங்களில் சொல்லப்பட்டவையில் எந்த சட்டத்தில் கூடுதல் கடுமையான தண்டனை சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த தண்டனை அவருக்கு அளிக்கப்படும்.*

| | | |
|---|---|---|
| 3 | e) அரசு அல்லது தனியார் மருத்துவமனையின் நிர்வாகத்தினரோ அல்லது ஊழியரோ சிறாரின் மீது ஊடுருவும்/ உள்நுழைக்கும் பாலியல் தாக்குதல் குற்றம் இழைத்தல்.<br>f) கல்வி நிறுவனங்கள் மற்றும் மத நிறுவனங்களின் நிர்வாகத்தினர் அல்லது ஊழியர் சிறாரின் மீது ஊடுருவும் /உள்நுழைக்கும் பாலியல் தாக்குதல் குற்றத்தில் ஈடுபடல்.<br>g) சிறாரின் மீது குழுவாக ஊடுருவும்/ உள்நுழைக்கும் கூட்டுப் பாலியல் தாக்குதல் குற்றம் இழைத்தல்<br>விளக்கவுரை: ஒரு சிறாரின் மீது ஒன்றோ அதற்கு மேற்பட்ட நபர்களோ ஒரு பொதுக் கருத்து மற்றும் நோக்கத்துடன் பாலியல் தாக்குதல் புரிவது, ஒவ்வொரு நபரும் கூட்டு ஊடுருவும்/ உள்நுழைக்கும் பாலியல் தாக்குதல் புரிந்ததாக கருதப்படும். ஒவ்வொரு நபரும் தான் ஒருவனே அக்குற்றத்தைப் புரிந்தால் கிடைக்கும் தண்டனை என்னவோ அத்தண்டனைக்கு ஆட்பட்டவர் ஆவார்.<br>(h) மரணம் விளைவிக்கும் ஆயுதங்களுடன், தீ அல்லது சூடேற்றப்பட்ட பொருள் அல்லது அரிக்கக் கூடிய தன்மையுடைய பொருள்களை உபயோகித்து சிறாரின் மீது ஊடுருவும்/ உள்நுழைக்கும் பாலியல் தாக்குதல் நிகழ்த்துவது<br>(i) சிறாரின் உடலுக்கு அல்லது மனதுக்கு கொடுங்காயம் மற்றும் கொடுந்துன்பம் விளைவிக்கும் காயம் ஏற்படுத்துவது மற்றும் சிறாரின் பாலுறுப்புக்கு சேதம் விளைவிக்கும் வகையில் ஊடுருவும்/ உள்நுழைக்கும் பாலியல் தாக்கதல் நிகழ்த்துவது.<br>(j) ஊடுருவும்/ உள்நுழைக்கும் பாலியல் தாக்குதல் சிறார் மீது நடத்தப்படும் பட்சத்தில்<br>(i) சிறாரின் உடலைத் திறனிழக்கச் செய்யும் வகையில் அல்லது மனநல சட்டம், 1987 பிரிவு 2 (b) ல் கூறப்பட்ட வகையில் சிறாரின் மனநலம் பாதிக்கும் அல்லது சிறாரின் தினசரி வேலைகளைச் செய்வதை தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ எந்தவிதத்திலும் வலுவிலக்கச் செய்யும், அல்லது<br>(ii) பெண் சிறாரைக் பாலியல் தாக்குதலின் விளைவாக கருவுறச் செய்யும், அல்லது<br>(iii) சிறாருக்கு எச்ஐவி தொற்று ஏற்படும் வகையில் அல்லது சிறாருக்கு மரணம் ஏற்படுத்தக் கூடிய வேறு எந்த நோய் தொறுறம் ஏற்படும் வகையில் சிறாருக்கு தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ தன் தினசரி வேலைகளைச் செய்வதில் திறனிழக்கச் செய்தல் அல்லது மனநலம் பாதிக்கச் செய்தல் அல்லது<br>(k) சிறாரின் உடல் மற்றும் மன இயலாமையைச் சாதகமாகப் பயன்படுத்தி ஊடுருவும்/ உள்நுழைக்குவும் பாலியல் தாக்குதலை நிகழ்த்துவது அல்லது | |

| | | |
|---|---|---|
| | (l) சிறாரின் மீது ஒன்றுக்கு மேற்பட்ட முறை அல்லது மீண்டும் மீண்டும் ஊடுருவும்/ உள்நுழைக்கும் பாலியல் தாக்குதல் நிகழ்த்துவது, அல்லது<br>(m) 12 வயதுக்குட்பட்ட சிறாரின் மீது ஊடுருவும்/ உள்நுழைக்கும் பாலியல் தாக்குதல் நிகழ்த்துவது<br>(n) சிறாரின் ரத்த உறவினர் அல்லது தத்தெடுத்த முறையில், அல்லது திருமண முறையில் உறவினர் அல்லது வளர்ப்பு முறையில் உள்ளவர் அல்லது சிறாரின் பெற்றோர்களுடன் குடும்ப உறவில் உள்ளவர் அல்லது ஒரே வீட்டில் அந்த சிறாருடன் தங்கியிருக்கும் அல்லது குடும்ப உறவுமுறையில் இல்லத்தில் வாழ்வதற்கான உரிமை பெற்று அங்கு வாழும் நபர், அச்சிறார் மீது நிகழ்த்தும் ஊடுருவும்/ உள்நுழைக்கும் பாலியல் தாக்குதல்<br>(o) சிறாருக்கு சேவை அளிக்கும் நிறுவனத்தின் தலைமை அல்லது அதிகாரப் பொறுப்பில் உள்ள ஒருவர், அல்லது உரிமையாளர், அல்லது ஊழியர் சிறாரின் மீது ஊடுருவும்/ உள்நுழைக்கும் பாலியல் தாக்குதல் நடத்துதல்.<br>(p) சிறாரின் மீது அதிகாரப் பொறுப்பில் அல்லது நம்பிக்கைக்குரிய நிலையில் ஒரு நிறுவனம் அல்லது இல்லத்தில் உள்ள நபர் நிறுவனத்திலோ, இல்லத்திலோ அல்லது வேறு இடத்திலோ சிறார் மீது ஊடுருவும்/ உள்நுழைக்கும் பாலியல் தாக்குதல் நிகழ்த்துதல். (q) சிறார் கருத்தரித்து இருப்பதை உணர்ந்தே அச்சிறார் மீது ஊடுருவல்/ உள்நுழைக்கும் பாலியல் தாக்குதல் நிகழ்த்துதல்<br>(r) சிறார் மீது ஊடுருவல்/உள்நுழைக்கும் பாலியல் தாக்குதல் நிகழ்த்தி, கொலை முயற்சியும் செய்வது.<br>(s) வகுப்புவாத, பிரிவினைவாத வன்முறையின் போது சிறார் மீது ஊடுருவும்/உள்நுழைக்கும் பாலியல் தாக்குல் கொடுத்தல்.<br>(t) ஏற்கனவே, சிறார் மீது ஊடுருவும்/உள்நுழைக்கும் பாலியல் தாக்குதல் குற்றத்தை நடத்தி தண்டனை பெற்ற நபர் மீண்டும் இச்சட்டத்தின் கீழோ அல்லது நடைமுறையில் உள்ள வேறு சட்டத்தின் கீழோ தண்டனை பெறக்கூடிய பாலியல் குற்றங்களைச் செய்தல்<br>(u) சிறாரின் மீது ஊடுருவும்/ உள்நுழைக்கும் பாலியல் தாக்குதல் நிகழ்த்தி, சிறாரை நிர்வாணமாக்கி பொதுமக்கள் பார்க்க நடக்க வைத்தல், ஊடுருவும்/ உள்நுழைக்கும் பாலியல் தாக்குதல் நிகழ்த்தியதாக கருதப்படும். | |

| எண் | குற்றமும் விளக்கமும் | POCSO வின் கீழ் தண்டனை |
|---|---|---|
| 4 | **பிரிவு 9**<br>பாலியல் தாக்குதல் பாலியல் நோக்கத்துடன் சிறாரின் ஆண்குறி, யோனி, குதம் மற்றும் மார்பு பகுதியைத் தொடுதல் அல்லது அவ்வாறு தன்னிடமோ அல்லது வேறு ஒருவருடனோ சிறாரைச் செய்யும்படிச் செய்தல் அல்லது பாலியல் நோக்கத்துடன் ஊடுருவல்/ உள்நுழைத்தல் இல்லாமல் உடலைத் தொடும் வகையில் செய்யும் வேறு எந்த செயலம் பாலியல் தாக்குதலாகக் கொள்ளப்படும். | **பிரிவு 8**<br>மூன்று ஆண்டுகளுக்கு குறையாத ஐந்து ஆண்டுகள் வரை நீட்டிக்கக் கூடிய சிறைத்தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும். |
| | **பிரிவு 9**<br>மிகக் கடுமையான பாலியல் தாக்குதல் இச்சட்டத்தின் பிரிவு 5ல் சொல்லப்பட்ட எவரும், பாலியல் தாக்குதல் செய்ததாக கொள்ளப்படும் நிகழ்வு கடுமையான பாலியல் தாக்குதல் என்று கருதப்படும். இதில் பிரிவு 5 (j) (ii)-ல் சொல்லப்பட்ட பெண் சிறார் ஒருவரைக் கருத்தரிக்க செய்வதும் மட்டும் அடங்காது. | **பிரிவு 10**<br>ஐந்து வருடங்களுக்கு குறையாத ஏழு வருடங்கள் வரை நீட்டிக்கக் கூடிய சிறைதண்டனையும் அபராதமும் விதிக்கப்படும். |
| 5 | **பிரிவு 11**<br>பாலியல் துன்புறுத்தல்<br>பாலியல் நோக்கத்துடன் சிறாருக்கு பாலியல் துன்புறுத்தல் அளிப்பது<br>i) ஏதேனும் வார்த்தை அல்லது சத்தம் அல்லது உடலசைவுகள் அல்லது ஏதாவது ஒரு பொருளை அல்லது உடலின் ஒரு பாகத்தை சிறார் கேட்கவேண்டும் அல்லது பார்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன செய்வது<br>ii) சிறாரை தன் உடலை அல்லது உடலின் ஒரு பாகத்தை காட்சிப் பொருளாக்கிக் துன்புறுத்தும் நபருக்கோ அல்லது வேறு எந்த நபருக்கோ காட்டச் செய்வது<br>(iii) ஆபாச நோக்கத்துடன் சிறாருக்கு ஊடகமோ அல்லது பிற வடிவத்திலோ பொருள்களைக் காட்டுவது<br>(iv) சிறாரை நேரடியாகவோ அல்லது மின்னனு, நவீன தொழில்நுட்ப முறைகளில் அல்லது வேறு முறைகளில் மீண்டும் மீண்டும், தொடர்ச்சியாக, தொடர்வது, ðார்ப்பது அல்லது தொடர்பு கொள்வது<br>(v) சிறாரின் உடல் பாகத்தையோ அல்லது அவர்கள் பாலியல் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதையோ உண்மையாக அல்லது உண்மைபோல் ஜோடிக்கப்பட்டு மின்னனு சாதனத்தின் மூலம், படமாகவோ, நவீன தொழில் நுட்ப முறையிலோ வேறு ஏதாவதொரு வகையிலோ ஏதேனும் ஒரு ஊடகத்தில் வெளியிடுவது குறித்து மிரட்டுவது.<br>(vi) ஆபாச நோக்கத்திற்காக சிறாரை ஆசைகாட்டுவது அல்லது ஆபாசமான வகைகள மனநிறைவை பெறுவதற்காக சிறாரை ஆசைகாட்டி மயக்குவது. | **பிரிவு 12**<br>மூன்றாண்டுகள் வரை நீட்டிக்கக்கூடிய சிறைத் தண்டனை மற்றும் அபராதமும் விதிக்கப்படலாம் |

| | | |
|---|---|---|
| 6 | **பிரிவு 13**<br>சிறாரை ஆபாச நோக்கத்திற்கு பயன்படுத்தல் பாலியல் மனநிறைவுக்காக சிறாரை ஊடகங்களில் எந்த வகையிலாவது பயன்படுத்தல் (நிகழ்ச்சி அல்லது விளம்பர படங்களில் தொலைக்காட்சிகளில் அல்லது இணையத்தில் அல்லது வேறு எந்த மின்னனு வடிவிலோ அல்லது அச்சடிக்கப்பட்ட வடிவிலோ, அத்தகைய நிகழ்ச்சி அல்லது விளம்பரம் தனிப்பட்ட உபயோகத்திற்காகவோ அல்லது விநியோகத்திற்காகவோ கருத்தில் கொண்டு எடுக்கப்பட்டதும் அடங்கும்), அவை<br>a) சிறாரின் பாலியல் உறுப்புகளை பிரதானப்படுத்துதல்,<br>b) நிஜமான அல்லது உருவகப்படுத்தப்பட்ட பாலியல் செயல்களில் (அது உள்நுழைத்தல் அல்லது உள்நுழைத்தல் அல்லாததாகவும் இருக்கலாம்) ஈடுபட்டுள்ள சிறாரை பயன்படுத்துதல்.<br>c) சிறாரை அநாகரீகமாக அல்லது ஆபாசமாக பிரதிநிதித்துவப்படுத்துதல்<br>ஆகியவை சிறாரை ஆபாச நோக்கத்திற்காக பயன்படுத்தும் குற்றச் செயல்கள்.<br>விளக்கவுரை<br>சிறாரை பயன்படுத்துதல் என்பது சிறாரை உள்ளடக்கிய எந்த வகையான ஊடகங்களையும் உதாரணமாக, அச்சிட்ட மின்னனு, கணினி அல்லது இன்னபிற தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி ஆபாசப் பொருட்களை தயாரிக்கும் பணி செய்தல் தயாரித்தல், கொடுத்தல், கடத்துதல், வெளியிடுதல், வழிவகுத்தல் மற்றும் விநியோகித்தல் ஆகியவை அடங்கும். | **பிரிவு 14 (1)**<br>ஐந்து ஆண்டுகள் வரையான சிறை தண்டனையும் அத்துடன் அபராதமும் விதிக்கப்படும்<br>இரண்டாவது முறையும் அல்லது அடுத்தடுத்தும் குற்றம் செய்தால் ஏழு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.<br>கடத்துதல், வெளியிடுதல், வழிவகுத்தல் மற்றும் விநியோகித்தல் ஆகியவை அடங்கும். |
| 7 | **பிரிவு 14 (2)**<br>ஆபாச நோக்கங்களுக்காக சிறாரைப் பயன்படுத்தும் ஒரு நகர் ஆபாசச் செயல்களில் தாநே நேரடியாக ஈடுபட்டு பிரிவு 3ல் குறிப்பிட்டுள்ள குற்றத்தைச் செய்தால் | **பிரிவு 14 (2)**<br>பத்து ஆண்டுகளுக்கு குறையாக ஆயுள் தண்டனை வரை நீட்டிக்கப்படக்கூடிய சிறை தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும். |
| 8 | **பிரிவு 14 (3)**<br>ஆபாச நோக்கங்களுக்காக சிறாரைப் பயன்படுத்தும் ஒரு நபர், ஆபாச செயல்களில் தானே நேரடியாக ஈடுபட்டு, பிரிவு 5ல் குறிப்பிட்டுள்ள குற்றத்தைச் செய்தல் | **பிரிவு 14 (3)**<br>ஆயுள் வரை கடுங்காவல் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும் |
| 9 | **பிரிவு 14 (4)**<br>ஆபாச நோக்கங்களுக்காக சிறாரைப் பயன்படுத்தும் ஒரு நபர், ஆபாச செயல்களில் தானே நேரடியாக ஈடுபட்டு, பிரிவு 7ல் குறிப்பிட்டுள்ள குற்றத்ரைச் செய்தல் | **பிரிவு 14 (4)**<br>ஆறு ஆண்டுகளுக்கும் குறையாக எட்டு ஆண்டுகள் வரை நீட்டிக்கக்கூடிய சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும். |
| 10 | **பிரிவு 14 (5)**<br>ஆபாச நோக்கங்களுக்காக சிறாரைப் பயன்படுத்தும் ஒரு நபர், ஆபாச செயல்களில் தானே நேரடியாக ஈடுபட்டு பிரிவு 9ல் குறிப்பிட்டுள்ள குற்றத்தைச் செய்தல் | **பிரிவு 14 (5)**<br>எட்டு ஆண்டுகளுக்கும் குறையாக பத்து ஆண்டுகள் வரை நீட்டிக்கக்கூடிய சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும். |
| 11 | **பிரிவு 15**<br>சிறாரை உள்ளடக்கிய ஆபாச பொருட்களை எந்த வடிவிலேனும் வணிக நோக்கில் சேகரித்து வைக்கும் நபர். | **பிரிவு 15**<br>3 ஆண்டு வரை நீட்டிக்கக் கூடிய சிறை தண்டனையும் அல்லது அபராதம் அல்லது இரண்டுமே விதிக்கப்படும். |

| | | |
|---|---|---|
| 12 | **பிரிவு 16**<br>ஒரு நபர் குற்றத்திற்கு உடந்தையாக இருத்தல் முதலாவதாக எந்த நபரையாவது அக்குற்றத்தைச் செய்ய தூண்டுதல், அல்லது இரண்டாவதாக ஒன்றோ அதற்கு மேற்பட்ட நபர்களுடனோ இணைந்து குற்றம் செய்ய சதித்திட்டம் தீட்டுதல், அவ்வாறு செய்யப்பட்ட சதியின் காரணமாக ஒரு செய்ல அல்லது சட்டவிரோத விடுபடல் நடந்திருக்கும் பட்சத்தில் மற்றும் அந்த குற்றத்தை செய்வதற்காக, அல்லது மூன்றாவதாக குற்றம் புரிவதற்கு ஏதுவாக எந்தவொரு செயலோ அல்லது சட்டவிரோத விடுபடலோ செய்ய உள்நோக்கத்தோடு திட்டமிட்டு உதவுவது. | **பிரிவு 17**<br>ஒரு நபர் குற்றத்திற்கு உடந்தையாக இருக்கும் அக்குற்றம் நடந்து முடிந்திருந்தால் அக்குற்றத்திற்கு வரையறுக்கப்பட்டுள்ள தண்டனையைப் பெறுவார். |
| | **பிரிவு 18**<br>இந்த சட்டத்தின் கீழ் தண்டனை விதிக்கப்படக்கூடிய எந்தவொரு குற்றத்தைப் புரிய முயற்சித்தாலும், அந்த குற்றத்தைச் செய்தாலும், அல்லது அவருடைய முயற்சியில் குற்றம் செய்வதற்குரிய ஏதாவது செயலைச் செய்தாலும் அவர் தண்டனைக்குரியவர் | அந்தந்த குற்றத்திற்கு வரையறுக்கப்பட்டுள்ள சிறைத்தண்டனை, ஆயுள் தண்டனையின் பாதிக் காலம் வரை நீட்டிக்கப்படக்கூடியது அல்லது குற்றத்திற்கேற்ப, அவற்றில் வரையறுக்கப்பட்டுள்ள அதிகபட்ச சிறைத்தண்டனையின் பாதிக்காலம் வரை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும். |

*குறிப்பு: POCSO சட்டத்தின் பிரிவு 42 படியும் மேலும் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 166***A***, 354***A***, 354***B***, 354***C***, 354***D***, 370, 370***A***, 375, 376, 376***A***, 376***C***, 376***D***, 376ணி அல்லது* **section** *509 படியும் ஒரு செயல்பாடு அல்லது செய்யாமல் விடுத்தது தண்டனைக்குரிய குற்றம் என்றால், தற்போது நடப்பில் இருக்கும் சட்டங்கள் எவற்றிலும் என்ன சொல்லப்பட்டிருந்த போதிலும், இந்த இரண்டு சட்டங்களில் சொல்லப்பட்டவையில் எந்த சட்டத்தில் கூடுதல் கடுமையான தண்டனை சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த தண்டனை அவருக்கு அளிக்கப்படும். னி*

**அட்டவணை3. குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் (The Protection of Women from Domestic Violence Act 2005) பெண்களின் பாதுகாப்புக்கான சில முக்கியமான சட்ட வாசகங்கள் :**

| எண் | வாசகங்கள் |
|---|---|
| 1. | **பிரிவு 3.** குடும்ப வன்முறைக்கான வரைவிலக்கணம் இந்த சட்டத்தைப் பொறுத்தவரை, பிரதிவாதி செய்த, செய்யத் தவறிய பின்வரும் நடத்தைகள் குடும்ப வன்முறை என்று கருதப்படும்<br>(a) பாதிப்புக்கு ஆளான நபரின் உடல் அல்லது மன ஆரோக்கியம், பாதுகாப்பு, உயிர், கை கால்களுக்கு ஆபத்து விளைவிக்கின்ற, அல்லது தீங்கு அல்லது காயம் விளைவிக்கின்ற அல்லது மேற்கண்டவற்றைச் செய்ய முனைதல். மேற்சொன்னவற்றில் உடல் துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகம், வார்த்தை துஷ்பிரயோகம், உணர்வுகள் துஷ்பிரயோகம், பொருளாதார துஷ்பிரயோகம் ஆகியவையும் அடங்கும்; அல்லது<br>(b) வரதட்சனை, அல்லது சொத்து, அல்லது மதிப்புவாய்ந்த பொருளுக்கான சட்ட விரோத கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள, பாதிப்புக்கு ஆளானவரை, அல்லது அவளுக்கு உறவான நபர்களை துன்புறுத்துதல், தீங்கு செய்தல், காயமேற்படுத்துதல் அல்லது ஆபத்து விளைவித்தல் மூலம் நெருக்கடி கொடுத்தல் ; அல்லது<br>(c) மேலே சொல்லப்பட்ட பிரிவுகள் (a) மற்றும் (b) சொல்லப்பட்டுள்ள நடத்தைகளில் ஏதேனும் ஒன்றின் மூலம் பாதிக்கப்பட்ட பெண்ணையோ அல்லது அவரின் உறவினரையோ மிரட்டும் செயல், அல்லது;<br>(d) பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு மன அல்லது உடல் காயங்கள் அல்லது துன்பம் ஏற்படுத்துவது. விளக்கவுரை<br>1 இந்தப் பிரிவின் நோக்கத்தைப் பொருத்தவரை<br>. . . . . . . . . . . . . . . . . . . . . . .<br>(ii) பாலியல் துஷ்பிரயோகம் (sexual abuse) என்பதில் பெண்ணை துஷ்பிரயோகம் செய்கிற, அவமானப்படுத்துகிற, தரம் தாழ்த்துகிற, அல்லது வேறு வகையின் பெண்ணின் கௌரவத்தைப் பாதிக்கும் எந்தவொரு செயலும் அடங்கும் ; |

# இணைப்பு 2

## குற்றவியல் சட்டத்தில் பொருத்தமான பிரிவுகள்

| பிரிவு எண் | குற்றவியல் சட்டத்தில் பொருத்தமான பிரிவுகள் |
|---|---|
| 2(D) ''புகார்'' | ''புகார்'' என்றால், யாரோ ஒருவர், தெரிந்தவராக அல்லது, தெரியாதவராக இருக்கலாம், ஒரு குற்றத்தைச் செய்துவிட்டார் என்றால், இந்த சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கக் கோரி வாய் வழி அல்லது எழுத்து வழியாக, நடுவர் முன்னிலையில் செய்யப்படும் குற்றச்சாட்டு. ஆனால் காவல்துறை அறிக்கை இதில் உள்ளடங்காது. |
| 24. அரசு வழக்குரைஞர் | பத்தாண்டுக்கு குறையாத வழக்குரைஞராக அனுபவம் உள்ள ஒருவரை மத்திய/ மாநில அரசு, குறிப்பிட்ட ஒரு வழக்குக்காகவோ அல்லது ஒரு குறிப்பான வகையில் அடங்கும் வழக்குகளுக்காகவோ சிறப்பு அரசு வழக்குரைஞராக நியமிக்கலாம்.<br><br>இருந்த போதும், குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் தனது விருப்பத் தேர்வின்படி,ஒரு வழக்குரைஞரை, அரசு வழக்குரைஞருக்கு குற்ற விசாரணை நடவடிக்கையில் உதவியாக செயல்படும்படி, நீதிமன்றம் அனுமதிக்கும் என்றால், நியமிக்கலாம். |
| 26. வழக்கு விசாரணை நீதிமன்றங்கள் | இந்த சட்டத்தின் மற்ற வாசகங்களுக்குட்பட்டு:<br><br>(அ) இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழான எந்த ஒரு குற்றத்தையும்<br><br>1. உயர் நீதி மன்றம் அல்லது<br><br>2. அமர்வு நீதி மன்றம் அல்லது<br><br>3. எந்த குற்றத்தை எந்த நீதிமன்றம் விசாரிக்கலாம் என்று காட்டுகின்ற, முதல் அட்டவணையில் கண்டுள்ள வேறு எந்த நீதிமன்றமும்.<br><br>இந்திய தண்டனைச் சட்டம் (45 1860) பிரிவுகளான 376, 376A, 376B, 376C, 376D, 376E ஆகியவற்றின் கீழ் குற்றங்களை, சாத்தியமானவரை, ஒரு பெண் நீதிபதி தலைமைதாங்கும் நீதிமன்றமே விசாரிக்க வேண்டும்.<br><br>(ஆ) ஏதாகிலும் ஒரு சட்டம் குறிப்பிட்ட வழக்கை குறிப்பிட்ட நீதிமன்றம்தான் விசாரிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தால் அந்த குறிப்பிட்ட நீதிமன்றம் விசாரிக்க வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்படவில்லையானால்<br><br>1) உயர் நீதி மன்றம் அல்லது<br><br>2. முதல் பட்டியலில் உள்ள படி குற்றத்தினை விசாரிக்க உரிமையுள்ள நீதிமன்றம் விசாரிக்கலாம் |
| 149. புலன் கொள்ளக் கூடிய குற்றங்களை காவல்துறையினர் தடுக்க வேண்டும் | புலன் கொள்ளக் கூடிய குற்றம் நடப்பதை எந்த ஒரு காவல்துறை அதிகாரியும்,தடுப்பதற்காக தலையிட வேண்டும்.தனது சக்திக்குட்பட்டு புலன் கொள்ளக் கூடிய குற்றம் நடப்பதை எந்த ஒரு காவல்துறை அதிகாரியும் தடுத்து நிறுத்த வேண்டும். |
| 150. புலன் கொள்ளக் கூடிய குற்றங்கள் நடத்துவதற்கான திட்டம் பற்றிய தகவல்கள் | புலன் கொள்ளக் கூடிய குற்றங்கள் நடத்த திட்டம் பற்றிய தகவல்கள் தெரிந்த எந்த ஒரு காவல்துறை அதிகாரியும் தனது மேலதிகாரிக்கு அத்தகவலைத் தெரிவிக்க வேண்டும் மேலும் அச்சம்பவம் நடப்பதைத் தடுக்க கடமைப்பட்டுள்ள/ அக்குற்றத்தை புலன் கொள்ளக் கடமைப்பட்டுள்ள வேறு ஒரு காவல்துறை அதிகாரிக்கும் அத்தகவலைத் தெரிவிக்க வேண்டும். |

| | |
|---|---|
| **151. புலன் கொள்ளக் கூடிய குற்றங்களைத் தடுக்க காவல்துறையினர் கைது நடவடிக்கை** | 1, புலன் கொள்ளக் கூடிய குற்றங்கள் நடத்த திட்டம் பற்றிய தகவல்கள் தெரிந்த எந்த ஒரு காவல்துறை அதிகாரியும், நடுவரின் அனுமதி இல்லாமலும், பிடியாணை இல்லாமலும் கூட, அம்மாதிரி குற்றம் செய்யத் திட்டமிட்டுள்ள நபரைக் கைது செய்வதைத் தவிர அக்குற்றம் நடை பெறுவதைத் தடுக்க வேறு வழி இல்லை என்றால், திட்டமிட்டுள்ள நபரைக் கைது செய்யலாம்.<br>2, உட்பிரிவு (1) இன் கீழ் கைது செய்யப்பட்ட எவரையும், கைது செய்த சமயத்திலிருந்து 24 மணி நேரத்துக்கு மேல் காவலில் வைக்கக் கூடாது. அதற்கு மேலும் அவரை காவலில் வைக்க தகுந்த ஆணை அல்லது நடைமுறையிலிருக்கும் சட்டத்தின் வேறு பிரிவில் இடமிருந்தாலொழிய அவரை காவலில் வைக்கக் கூடாது. |
| **154. புலன் கொள்ளக் கூடிய குற்றங்கள் பற்றிய தகவல்கள்** | புலன் கொள்ளக் கூடிய குற்றம் பற்றி வாய் வழித் தகவல் கிடைத்தவுடன், காவல் அதிகாரி அல்லது அவரின் கட்டளையைப் பெற்றவர், அதை எழுத்து மூலமாக எழுதி, அதில் தகவல் தெரிவிப்பவரின் கையொப்பம் பெறுவதுடன், அவருக்கு அதை வாசித்தும் காண்பிக்கவேண்டும். அவ்வாறு தெரிவிக்கப்படும் தகவல் எழுத்து மூலமாக கொடுக்கப்பட்டால் அதில் காவல்துறையினர் தகவல் தெரிவிப்பவரின் கையொப்பம் பெறவேண்டும். மேற்கூறிய இரண்டு முறையிலும் காவல்துறையினர் கூறப்பட்ட செய்திகளின் சாரத்தை காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் மாநில அரசின் ஆணைப்படி பராமரிக்கப்படும் பொதுப் பதிவேட்டில், பதிய வேண்டும். |
| **155. புலன் கொள்ள முடியாத குற்றம் பற்றிய தகவல். அதைப் பற்றிய புலன்விசாரணை** | அந்த காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இடத்தில் நடைபெற்ற புலன் கொள்ள முடியாத குற்றம் பற்றி தகவல் கிடைத்தவுடன், காவல்துறை அதிகாரி, அவரோ அல்லது அவரின் உத்தரவு பெற்ற பிரிதொரு காவல்துறை பணியாளர் அதை எழுத்து மூலமாக பதிவு செய்து, காவல்துறையினர் கூறப்பட்ட செய்திகளின் சாரத்தை, காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் மாநில அரசின் ஆணைப்படி பராமரிக்கப்படும் இந்த நோக்கத்திற்காக பராமரிக்கப்படும் பதிவேட்டில். பதிய வேண்டும். அச்செய்தியை மாஜிஸ்ட்ரெட்டிற்குத் தெரிவிக்க வேண்டும்.<br>2) அம்மாதிரியான குற்றத்தை வழக்கு விசாரிக்க/ விசாரணைக்கு உத்தரவிட தகுதி வாய்ந்த நடுவரால் முறைப்படி அனுமதிக்கப்படாத போது எந்த காவல்துறை அதிகாரியும் இம்மாதிரியான குற்றத்தை புலனாய்வு செய்யக் கூடாது.<br>3) தகுதி வாய்ந்த நடுவரால் முறைப்படி அனுமதிக்கப்பட்ட காவல்துறை அதிகாரிக்கு, அக்காவல் நிலையப் பொறுப்பாளருக்குள்ள, புலன் கொள்ள கூடிய குற்றம் பற்றி, பிடியாணை இல்லாமல் கைது செய்யும் அதிகாரம் தவிர மற்ற அனைத்து அதிகாரமும் உண்டு.<br>4) ஒரே சமயத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குற்றங்கள் நடந்தால், அவற்றில் ஏதேனும் ஒன்று புலன் கொள்ளக் கூடிய குற்றமாக இருந்தால், மற்றவை புலன் கொள்ள முடியாத குற்றமாகவே இருந்தாலும், அவை புலன் கொள்ளக் கூடிய குற்றமாகவே கருதப்படும். |
| **156. புலன் கொள்ளக் கூடிய குற்றத்தை விசாரிக்க காவல் துறை அதிகாரிக்குள்ள அதிகாரம்** | 1) காவல்நிலைய பொறுப்பு அதிகாரி, நடுவரின் ஆணை இல்லாமலேயே, அந்த காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, அந்த எல்லைக்குட்பட்ட குற்றத்தை விசாரிக்கும், நீதிமன்றத்தின் அதிகார எல்லைக்குட்பட்ட, புலன் கொள்ளக் கூடிய குற்றத்தை புலன் விசாரணை செய்யும் அதிகாரம், XIIIவது அத்தியாயத்தின் படி உள்ளது.<br>2) அவ்வாறான, காவல்நிலைய பொறுப்பு அதிகாரியின் மேற்படி செயல், எந்த ஒரு நிலையிலும், மேற்படி பிரிவின்படி அவருக்கு அந்த அதிகாரமில்லை என்ற கேள்விக்கு எப்போதும் ஆளாகாது.<br>3) நீதிபதிக்கு Cr.P.Cன் 190) பிரிவின்படி அவர் மேற்கூறியவாறு புலனாய்வுக்கு உத்தரவிட உரிமையுள்ளது. |

| | |
|---|---|
| **157. புலனாய்வு நடைமுறை** | 1) கிடைத்த தகவல் அல்லது பிறவற்றின் அடிப்படையில், காவல்நிலைய பொறுப்பு அதிகாரிக்கு, 156 பிரிவின் படி விசாரிக்க காவல்துறை அதிகாரிக்குள்ள அதிகாரத்தின்படி, குற்றம் நடந்துள்ளதாக சந்தேகப்பட காரணமிருந்தால், புலன் விசாரணை செய்யவும், காவல்துறை அறிக்கையின்படி அக்குற்றத்தை புலன் கொள்வதற்கான நீதிமன்ற நடுவருக்கு அறிக்கை அனுப்பவும், அவ்வாறான அறிக்கையின்படி தானே நேரில் செல்லவோ அல்லது மாநில அரசால் பொதுவான. சிறப்பு ஆணை மூலம் அங்கீகரிக்கப்பட்ட தனது கீழதிகாரி ஒருவரை அனுப்பவோ, குற்றம் நடந்த இடத்துக்குச் சென்று, உண்மைகள், சூழ்நிலைகள் குறித்து ஆய்வு செய்யவும், தேவைப்பட்டால், குற்றமிழைத்தவரை தேடி, கைது செய்யவும் வேண்டும்.<br>நிபந்தனைகள்:<br>அ) தனியொரு நபரின் பெயரைச் சொல்லி, குற்றம் பற்றி தகவல் தெரிவிக்கப் பட்டால், அது கொடிய குற்றமாக இல்லையென்றால், அந்த அதிகாரியோ அல்லது அவர் கீழ் பணி செய்யும் வேறு ஒருவரோ, சம்பவம் நடந்த இடத்துக்கு நேரில் சென்று ஆய்வு செய்ய வேண்டியதில்லை.<br>ஆ) ஆய்வு செய்ய போதுமான முகாந்திரம் இல்லை என்று காவல் நிலைய பொறுப்பு அதிகாரிக்குத் தோன்றினால், அதை ஆய்வு செய்ய வேண்டியதில்லை.<br>இ) மேலே சொன்ன இரண்டு உட்பிரிவுகளின்படியும், காவல் நிலைய பொறுப்பு அதிகாரி தனது அறிக்கையில் அந்த கிளைப்பிரிவு 1ஐ முழுமையாக பின்பற்ற முடியாததற்கான காரணத்தை தெரிவிக்க வேண்டும். அந்த உட்பிரிவு 2ஐப் பொறுத்தவரை, தகவல் கொடுத்தவர் இருந்தால் அவருக்கு, மாநில அரசினது முறைப்படி, தான் அந்தப் புகாரை மேற்கொண்டு ஆய்வு செய்யப்போவதில்லை என்ற தகவலை மாநில அரசு குறிப்பிட்டுள்ள முறையின்படி தெரியப்படுத்த வேண்டும். |
| **159. புலன் விசாரணை செய்ய, துவக்க கட்ட விசாரணை நடதுவதற்கான அதிகாரம்.** | காவல்துறையினரின் அறிக்கை கிடைக்கப் பெற்ற நடுவர், இந்த சட்டத்தில் சொல்லப்பட்ட வகையில், புலன் விசாரணைக்கு உத்தரவிடலாம், அவரே கூட நேரடியாக துவக்க கட்ட விசாரணை நடத்தலாம், முதனிலை விசாரணை நடத்த,தன் கீழ் உள்ள வேறு ஒரு நடுவரை நியமிக்கலாம் அல்லது தள்ளுபடி செய்யலாம். |

| | |
|---|---|
| **161. சாட்சியங்ளை காவல் துறையினர் விசாரித்தல்** | 1) இந்த அத்தியாயத்தின் கீழ் புலனாய்வு செய்யும், மாநில அரசின் ஆணைப்படி / சிறப்பு ஆணைப்படி நியமனம் செய்யப்பட்ட எந்த ஒரு காவல்துறை அதிகாரியும், அல்லது அவரது சார்பாக செயல்படும் அதிகாரியும், சம்பவம் குறித்த சூழ்நிலை, உண்மையை அறிந்ததாகச் சொல்லப்படும் எந்த ஒரு நபரையும் வாய் வழி விசாரணை நடத்தலாம்.<br>2) அவ்வாறு அழைக்கப்பட்ட நபர்,அவரை தண்டத்திற்குள்ளாக்கும், குற்றச் சாட்டுக்குள்ளக்கும், உரிமையைப் பறிக்கும் விஷயம் தவிர மீதி விஷயங்களில், உண்மையான பதிலையே அளிக்க வேண்டும்.<br>3) இந்தப்பிரிவின் கீழ் விசாரணையின் போது அவர் முன்னிலையில் அளிக்கப்பட்ட வாக்கு மூலங்களை எழுத்தில் வடிக்க வேண்டும். அவ்வாறு செய்யும் போது ஒவ்வொரு நபருக்கும் தனித்தனியாக பதிவு செய்ய வேண்டும். மேலும் IP.C–ன் 354, 354A, 354B, 354C, 354D, 376, 376A, 376B, 376C, 376D, 376E, அல்லது 509 பிரிவுகளின் படியான குற்றங்கள் ஒரு பெண் மீது நிகழ்த்தப்பட்டதாக கூறப்படும் புகார்கள், பெண் காவல் அதிகாரியால் அல்லது பெண் அதிகாரியால் மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும் |
| **162. காவல்துறையிடம் அளிக்கப்படும் ஒப்புதல் வாக்கு மூலத்தில் கையெழுத்திடக் கூடாது: வாக்குமூலத்தைச் சான்றாதாரமாகப் பயன்படுத்துதல்** | (1) இந்த அத்தியாயத்தின் கீழான புலன் விசாரணை மேற்கொள்ளும் ஒரு காவல்துறை அதிகாரி, ஒருவர் அளிக்கும் கூற்றை எழுத்துபூர்வமாகப் பதிவு செய்வார் என்றால், அதில் சம்பந்தப்பட்டவரின் கையொப்பத்தைப் பெறக் கூடாது. அப்படிப்பட்ட எந்த கூற்றிலும், ஆவணத்திலும், அந்த நோக்கத்தில் காவல்துறை குறிப்பேடு போன்ற எதிலும், அல்லது அதுபோன்ற ஆவணம் எதிலும், எந்த நோக்கத்திற்காக இருந்தபோதும், கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றைத் தவிர எந்தக் குற்றத்தின் தொடர்பாகவும் எந்த விசாரணையின் தொடர்பாகவும் கையொப்பம் பெறக் கூடாது.<br>அதுபோன்ற விசாரணைகள் அல்லது வழக்கு விசாரணைகளில் குற்றம் சாட்டும் தரப்பிற்காக, சாட்சியம் ஒருவர் அழைக்கப்பட்டு, அவரின் வாக்குமூலம் எழுத்து வடிவத்திற்கு மாற்றப்படும்போது, அந்த கூற்றின் ஏதேனும் ஒரு பகுதி முறையாக நிரூபிக்கப்படும் என்றால், அது குற்றம் சாட்டப்பட்டவர் அதனை பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பிருக்கிறது என்றால், நீதிமன்றத்தின் அனுமதியுடன் குற்றம் சாட்டும் தரப்பினர் இந்திய சான்றாதாரச் சட்டம் 1872 பிரிவு 145ன் படி முரண்பட முடியுமென்றால்; மேலும், அந்த கூற்றின் எந்தவொரு பகுதியும் பயன்படுத்தப்படும்போது, அதனை அந்த சாட்சியை மறு விசாரணையிலும் பயன்படுத்தலாம். இருந்தபோதும், அவ்வாறு செய்வது குறுக்கு விசாரணையில் குறிப்பிடப்பட்ட ஒன்றை விளக்குவதற்காக மட்டுமே இருக்க முடியும்.<br>(2) இந்திய சான்றாதாரச் சட்டம் 1872ன் பிரிவு 32(1)ன் கீழ் செய்யப் படும் எந்தக் வாக்குமூலத்திற்கும், அல்லது, அந்தச் சட்டத்தின் பிரிவு 27ன் வாசகங்களைப் பாதிக்கும் எந்த ஒன்றுக்கும் இந்தப் பிரிவில் உள்ள எதுவும் பொருந்தாது.<br>விளக்கம் – உட்பிரிவு (1)ல் குறிப்பிட்டுள்ள வாக்குமூலத்தில் உண்மை விவரம் அல்லது சூழ்நிலை குறித்த விடுபடல் ஏதேனும் இருப்பின் அது வழக்கிற்கு முக்கியமானதாகவும், பொருத்தமானதாகவும் இருக்கும் பட்சத்தில் முரண்பாடாக கொள்ளப்படும். அவ்வாறு ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஏற்படும் முரண்பாடு விடுபடல் என கொள்ளத்தக்கதா என்பது உண்மை குறித்த கேள்வியே ஆகும். |

**164. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் வாக்குமூலங்களைப் பதிவு செய்தல்**

1) பெருநகர அல்லது குற்றவியல் நடுவர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கலாம். Cr.P.Cன் படி இங்கு அதிகார எல்லை ஒரு தடையில்லை. இந்தப்பிரிவின் / நடப்பில் இருக்கும் வேறு சட்டத்தின் கீழ் விசாரணையின் போது ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கலாம். ஆனால் இதை புலனாய்வின் போது, விசாரணைக்கு முன்பு மட்டுமே செய்யலாம்.

அப்போது நடப்பில் இருக்கும் எந்த ஒரு சட்டத்தின் மூலம் நடுவருக்கான அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள காவல் அதிகாரி ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்யக் கூடாது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

2) ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதையும், அவ்வாறு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தால் அதை அவருக்கு எதிராக சாட்சியாக பயன்படுத்தப்படும் என்பதையும் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க வந்தவருக்கு, நடுவர், விளக்க வேண்டும். மேலும் அவ்வாறு அளிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம், தானாகவே முன்வந்து அளிக்கப்படுகிறது என்பதை அவர் உறுதி செய்துகொண்ட பின்னரே அதை பதிவு செய்ய வேண்டும்

3) அவ்வாறு ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க வந்தவர், வாக்குமூலம் அளிப்பதற்கு முன்பான ஒரு சமயத்தில் வாக்குமூலம் அளிக்க மறுத்தால், அவரை காவல்துறை கைது செய்து தன் காவலில் வைத்துக்கொள்வதற்கு நடுவர் அங்கீகாரம் அளிக்கக் கூடாது.

4) Cr.P.C பிரிவு 281–ன் படி பதிவு செய்யப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தை தகுந்த முறைப்படி பதிவு செய்தல் வேண்டும். அந்த பதிவில் ஒப்புதல் வாக்குமூலத்தை செய்தவர் கையொப்பம் இடல் வேண்டும். அப்பதிவின் அடியில், பின்வருமாறு பொருள்தரக் கூடிய குறிப்பினை பதிவு செய்ய வேண்டும்:

“நான், ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதையும், அவ்வாறு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தால் அதை அவருக்கு எதிராக சாட்சியாக பயன்படுத்தப்படும் என்பதையும் விளக்கினேன் மேலும் அளிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம், தானாகவே முன்வந்து அளிக்கப்படுவதையும் நன்கு விசாரித்து அது உண்மையென்று நம்புகிறேன். இது என் முன்னிலையில் நிகழ்ந்து அதனை நான் செவிமடுத்தேன். எழுதப்பட்டது, ஒப்புதல் வாக்குமூலம் அளித்தவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது, அவர் அதை சரியானது என்று ஒப்புக்கொண்டார். இந்த வாக்குமூலம் அவரது முழுமையான. உண்மையான தகவல்களின் தொகுப்பாகும்.

நடுவர் கையொப்பம்”

5) ஒப்புதல் வாக்குமூலத்தைத் தவிர உட்பிரிவு (1)–ன் கீழான வேறு எந்த வாக்குமூலமும், கீழே குறிப்பிட்ட வகையில், வழக்குக்குப் பொருத்தமான வகை எது என்று நடுவர்மதிப்பிடுகிறாரோ அந்த வகையில் சான்றாதாரமாகப் பதியப்பட வேண்டும். அவ்வாறு வாக்குமூலம் அளிப்பவருக்கு நடுவர் தேவையான சத்யப்ரமாணம் செய்து வைக்கலாம்.

6) அவ்வாறு பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தை, வழக்கை விசாரிக்க வேண்டிய பெருநகர அல்லது குற்றவியல் நடுவருக்கு முறையாக அனுப்பி வைக்கவேண்டும்

| | |
|---|---|
| **165. காவல்துறை அதிகாரியால் தேடுதல் மேற்கொள்ளப்படல்** | 1) புலன் விசாரணை நடத்தும் காவல்நிலைய பொறுப்பாளர்/ காவல்துறை அதிகாரி, அது அவர் புலன் ஆய்வு செய்ய பணிக்கப்பட்ட குற்றம் பற்றிய புலனாய்வுக்குத் தேவையான ஏதோ ஒன்று, அவர் காவல் நிலையத்தின் அதிகார எல்லையில் கிடைக்கக்கூடும் என்று நம்பி, அது, வேறு எந்த ஒரு வழியிலும் கிடைப்பது சாத்தியமில்லை என்றும் நம்பினால், தேவையற்ற காலதாமதமில்லாமல் அந்த அதிகாரி, தனது நம்பிக்கையின் அடிப்படையை விளக்கி, எழுத்து மூலம் பதிவு செய்துவிட்டு, முடிந்தவரையில் எந்த பொருள் தேவையோ அதை தேடவோ அல்லது தேடுவதற்கு ஏற்பாடு செய்யவோ வேண்டும்.<br>2) மேற்படி பாரா 1–ன் படி , மேலே செல்லும் காவல்துறை அதிகாரி, முடிந்த வரை, அதை அவரே தேட வேண்டும்.<br>3) அதை அவரே தேட இயலவில்லையென்றால், அதற்கு அதிகாரமுள்ள வேறொரு பொறுத்தமான அதிகாரி இல்லையென்றால், தன் கீழ் பணி புரியும், எந்த ஒரு அதிகாரியையும், அவர் அவ்வாறு செய்வதற்கான காரணங்களை எழுத்து மூலம் வடித்துவிட்டு, தேடுதற்கான உத்தரவை எழுத்து மூலம் தெரிவித்துவிட்டு, எங்கே தேடவேண்டும் என்பதை சுட்டிக்காட்ட வேண்டும். அவ்வாறு உத்தரவிடப்பட்ட அதிகாரி, அதை அங்கே தேடவேண்டும்<br>4) இந்தப்பிரிவின் தேடுதற்கான தேடல் ஆணைகள் பற்றிய வழிகாட்டுதல்களும், Cr.P.C–ன் 100 பிரிவில் உள்ள தேடல் சம்பந்தமான பொதுவான வழிகாட்டுதல்களும், முடிந்தவரை, இந்தப்பிரிவின் தேடுதல்களுக்கும் பொருந்தும்.<br>5) மேற்படி உட்பிரிவு 1ன் படி அல்லது துணைப்பிரிவு 3–ன் படி பதியப்பட்டவைகளின் நகல், அருகில் உள்ள அந்தக் குற்றத்தை புலன் கொள்ள அதிகாரம் படைத்த நடுவருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். தேடப்பட்ட இடத்தின் உரிமையாளர் அல்லது அந்த இடத்தை அனுபவத்தில் வைத்திருப்பவருக்கு, அவர் மனு கொடுத்தால், அதன் நகலை நடுவர் கட்டணமில்லாமல், கொடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| **167 புலனய்வை 24 மணி நேரத்துக்குள் முடிக்க முடியாத போது** | 1) ஒரு நபர் கைது செய்யப்பட்டு, சிறையிலடைக்கப்பட்ட பின், பிரிவு 57ல் விதிக்கப்பட்ட கால கெடுவான 24 மணி நேரத்துக்குள் புலனாய்வை முடிக்க இயலாது என்று தெரிந்தால்: கிடைத்த செய்தி/குற்றச்சாட்டு உண்மையானது என்று நம்புவதற்கிடமிருந்தால், புலன் விசாரணை நடத்தும் காவல் நிலைய பொறுப்பாளர்/ உதவி ஆய்வாளருக்கு கீழில்லாத காவல்துறை அதிகாரி எனும்போது, அருகாமையில் உள்ள நீதித்துறை நடுவருக்கு, வழக்கு சம்பந்தமான கீழே கொடுக்கப்பட்டுள்ள பதிவுகள், குறிப்புகளடங்கிய பதிவேட்டின் நகலை அனுப்புவதுடன் குற்றம்சாட்டப்பட்டவரையும் நடுவரிடம் அனுப்பி வைக்க வேண்டும்.<br>2) குற்றம் சாட்டப்பட்டவரைப் பெற்றுக்கொண்ட நடுவர், அக்குற்றம் அவரது நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டு எல்லைக்குள் இருந்தாலும், இல்லாவிட்டாலும், குற்றம் சாட்டப்பட்டவரை, 15 நாட்களுக்கு மேற்படாத காலத்துக்கு, நடுவர் எவ்வகைக் காவலில் வைத்திருப்பது பொருத்தமானது என்று கருதுகிறாரோ அந்தக் காவலில் வைக்க ஆணையிடலாம். அந்தக் குற்றத்தை புலன் நீதி விசாரணை நடத்த அதிகாரம், அல்லது குற்ற விசாரணை துவக்கத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாத பட்சத்தில், மேற்கொண்டு கைது நீடிப்பு அவசியமில்லை என்று கருதினால், அவரை விசாரணை நடத்த தகுந்த நடுவரிடம் அனுப்பி வைக்க வேண்டும்.<br>நிபந்தனைகள்:<br>அ) அந்த நடுவர் குற்றம் சாட்டப்பட்டவரை, காவல்துறை காவல் அல்லாத, காவலில் 15 நாட்களுக்கு மேற்பட்ட நாட்களுக்கு வைப்பதற்கு தகுந்த அடிப்படை உள்ளதாக கருதினால், அவ்வாறு ஆணையிடலாம். ஆனால் எந்த ஒரு நடுவரும், குற்ற சாட்டப்பட்டவரை பின்வரும் காரணிகளின் அடிப்படையில், சொல்லப்படும் நாட்களுக்குக் கூடுதலாகக் காவலில் வைக்க உத்தரவிடக் கூடாது.<br>1) தூக்கு தண்டனை/ ஆயுள் தண்டனை/ 10 ஆண்டுக்குக் குறையாத தண்டனை விதிக்க வாய்ப்புள்ள குற்றங்களை புலனாய்வு செய்யும்போது – 90 நாட்கள்<br>2) மற்ற குற்றங்களுக்கான புலனாய்வு செய்யும் போது 60 நாட்கள். 90/60 நாட்களின் முடிவில் குற்றம் சாட்டப்பட்டவர் தகுந்த பிணை கொடுக்க தயாராக இருக்கும் பட்சத்தில்பிணையின் பேரில், விடுவிக்கப்படுவார். அவ்வாறு விடுவிக்கப்படுபவர், அத்தியாயம் XXXIII–ன் சட்ட வாசகங்கள் படி விடுவிக்கப்பட்டதாக கருதப்படுவர்.<br>பி) குற்றம் சாட்டப்பட்ட நபர் நடுவர் முன்னிலையில் நிறுத்தப்படாத போது எந்த ஒரு நடுவருக்கும் தடுப்புக் காவல் ஆணை தருவதற்கான அதிகாரம் இல்லை.<br>சி) இரண்டாம் வகுப்பு நடுவர் எவரும், அவருக்கு உயர்நீதிமன்றத்தின் சிறப்பு ஆணை அளிக்கப்படாத சமயத்தில், ஒருவரைக் காவல்துறை தடுப்புக் காவலில் வைப்பதற்கு உத்தரவிடும் அதிகாரம் இல்லை. |
| **169. போதுமான சான்றாதாரம் இல்லாத போது குற்றம் சாட்டப்பட்டவரின் விடுதலை** | இந்த அத்தியாயத்தின் கீழான விசாரணைக்குப் பிறகு புலன் விசாரணை நடத்தும் காவல் நிலைய பொறுப்பாளர்/ அதிகாரிக்கு குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக போதுமான ஆதாரங்கள்/ நியாயமான அடிப்படையில் இல்லை என்று கருதினால், அவரை நடுவரிடம் அனுப்பி வைக்க வேண்டியதில்லை என்று கருதினால், அந்த அதிகாரி அவரை, அந்த நபர் பொருத்தமான பிணை ஆட்களை கையொப்பத்துடன், அல்லது பிணை ஆட்கள் இல்லாமல், எழுத்து பூர்வ பத்திரத்தின் அடிப்படையில், அழைக்கப்படும்போது, குற்றத்தைப் புலன் கொள்ளக் கூடிய நடுவர் முன்பு ஆஜர் ஆகி விசாரணைக்கு உட்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் பிணையில் விடுவிக்கலாம். |

| | |
|---|---|
| **170. போதுமான நிரூபணம் உள்ள போது குற்றம் சாட்டப்பட்டவரை நடுவரின் முன் ஆஜராகச் செய்தல்** | இந்த அத்தியாயத்தின் கீழான விசாரணைக்குப் பிறகு புலன் விசாரணை நடத்தும் காவல் நிலைய பொறுப்பாளர்/ அதிகாரி குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக போதுமான ஆதாரங்கள்/ நியாயமான அடிப்படை உள்ளன என்று கருதினால், அவரை காவல்துறையின் அறிக்கையின் படி குற்றத்தை புலன் கொள்ள/ நீதிவிசாரணை நடத்த அதிகாரம் உள்ள நடுவர் முன் அனுப்பி வைக்க வேண்டும். ஜாமீனில் விடுதலை செய்யக்கூடிய குற்றமாக இருந்தால், அவர் தகுந்த பிணையோடு விடுவிக்கப்படலாம். அவ்வாறான நடுவர் முன் குறிப்பிட்ட நாளில் ஆஜர்படுத்தப்படுவார் என்ற உறுதிமொழியுடனும், நடுவர் வேறு விதமான உத்தரவிடும் வரை தினமும் ஆஜர்படுத்தப்படுவார் என்ற உறுதிமொழியுடனும் விடுவிக்கப்படலாம்<br>2) காவல்நிலைய பொறுப்பாளர் அவரை நடுவர் முன் அனுப்பி வைக்கும்போது, அல்லது அவரை நடுவர் முன் அனுப்பி வைக்க தனது பாதுகாப்பில் எடுக்கும் போது, அந்த நடுவர் முன் குற்றம் சாட்டப்பட்டவரிடமிருந்து கைப்பற்றிய ஆயுதம் அல்லது பொருளை, சமர்ப்பிக்க வேண்டியிருந்தால் சமர்ப்பிப்பார். புகாரளித்தவர் இருந்தால், அவரையும் மற்ற சம்பவத்தைப் பற்றி விபரங்கள் தெரிந்ததாக, தேவையென அவர் கருதும் ஏனைய சாட்சிகளையும் நடுவர் முன் ஆஜராவதற்கு தகுந்த பத்திரத்தைக் கொடுக்கும்படியும், வேண்டும் போது நடுவர் முன் ஆஜராகி, குற்றவாளிக்கெதிராக சாட்சியம் அளிக்கும்படியும்/ வழக்கு தொடுக்கும்படியும் ஆணையிடலாம்.<br>3) பத்திரத்தில் முதன்மை நீதித்துறை நடுவர் என்று குறிப்பிடப்பட்டிருந்தால், அந்த நீதிமன்றம், முதன்மை நீதித்துறை நடுவரால் பரிந்துரைக்கப்பட்ட, விசாரணை மற்றும் நீதி விசாரணை செய்யும் நீதிமன்றத்தையும் உள்ளடக்கும். அத்தகைய பரிந்துரை குறித்து புகார் அளித்தவருக்கும் மற்ற நபர்களுக்கும் தக்க முன்னறிவிப்பு வழங்க வேண்டும்.<br>4) எந்த அதிகாரியின் முன் அந்த பத்திரம் கையொப்பமிடப்படுகிறதோ, அவர், அதன் நகலை, பத்திரத்தில் கையெழுத்து இடுபவருக்கு அளிக்க வேண்டும். அதன் உண்மை நகலை, நடுவருக்கு தனது அறிக்கையுடன் அனுப்ப வேண்டும். |
| **172. புலன் விசாரணையில் நடப்புக்களின் குறிப்பேடு** | புலன் விசாரணையில் ஈடுபடும் எந்த ஒரு காவல்துறை அதிகாரியும் நடப்புக்களின் குறிப்பேட்டை பராமரிக்க வேண்டும் . புலன் விசாரணையின் போது, தினமும், அக்குறிப்பேட்டில் நடப்புக்களைப் பதிய வேண்டும். தகவல் கிடைத்த நேரம், விசாரணை ஆரம்பித்த மற்றும் முடித்த நேரம், பார்வையிடப்பட்ட இடங்கள், அங்கிருந்த சூழ்நிலைகள் பற்றி சேகரித்த விவரங்கள் முதலியவற்றை அதில் பதிய வேண்டும்.சாட்சிகளின் வாக்குமூலத்தையும் அதில் பதிய வேண்டும்<br>2) நீதி விசாரணையின் போதும், வழக்கு விசாரணையின் போதும் நீதி மன்றம், சான்றாதாரமாக அல்லாமல், ஒரு நடப்புக்களின் குறிப்பேட்டினை நீதி விசாரணைக்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். .<br>3) குற்றம் சாட்டப்பட்டவருக்கோ அவரது முகவர்களுக்கோ, நடப்புக்களின் குறிப்பேட்டின் உதவியை நாடும் உரிமையில்லை. நீதிமன்றம் நடப்புக்களின் குறிப்பேட்டினை பயன்படுத்துகிறது என்ற காரணத்தினாலே அவர்கள் அதைப் பார்வையிட உரிமையில்லை. ஆனால் அதை தயாரித்த காவல் துறை அதிகாரி நினைவு கூர்வதற்காக அதைப் பயன்படுத்தினாலோ, அவருடை கூற்றை மறுக்க நீதிமன்றம் அதைப் பயன்படுத்தினாலோ, இந்திய சாட்சிகள் சட்டம் 1872–ன், 161–வது அல்லது 145–வது பிரிவுகள் பொருந்தும். |

| | |
|---|---|
| **173. விசாரணையை முடித்த காவல்துறை அதிகாரியின் அறிக்கை** | 1) இந்த அத்தியாயத்தின் கீழ் உள்ள எந்தப் புலன் விசாரணையும் தேவையற்ற கால தாமதமில்லாமல் முடிக்கப்பட வேண்டும்.<br>2) (i) புலன் விசாரணைக்குப் பின் காவல்துறையினர் சமர்ப்பிக்கும் அறிக்கையில் பின் வருவன இடம் பெற வேண்டும்:<br>• சம்பந்தப்பட்டவர்களின் பெயர்கள்,<br>• தகவலின் தன்மை,<br>• வழக்கைப்பற்றிய விபரங்கள் அறிந்தவர்களின் பெயர்கள்,<br>• குற்றம் நடந்ததா, ஆம் எனில் யாரால் செய்யப்பட்டது<br>• குற்றம் சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்டாரா<br>• அவர் பத்திரத்தின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டாரா,<br>• பிணையுடனா அல்லது பிணை இல்லாமலா<br>• 170 வது பிரிவின் கீழ் அவர் காவலில் வைக்கப்பட்டாரா<br>(ii) குற்றம் பற்றிய தகவலை முதலில் காவல்துறைக்கு அளித்தவருக்குத் தான் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்த தகவலை, மாநில அரசு வகுத்துள்ள முறைகளின்படி, அளிக்க வேண்டும்.<br>3) 158 பிரிவின்படி அவருக்கு மேலதிகாரி நியமிக்கப்பட்டால்,மாநில அரசு அதன் சாதாரணமான அல்லது விசேஷமான உத்தரவின் மூலமாக வழிநடத்தினால்,அவருக்கு அறிக்கையை, சமர்ப்பிக்க வேண்டும் அவர் நடுவரின் உத்தரவிற்காக காத்திருந்து, காவல்நிலைய பொறுப்பாளரை மேற்கொண்டு புலனாய்வு செய்ய ஆணையிடலாம்.<br>4) குற்றம் சாட்டப்பட்டவர் பத்திரத்தின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தால், அந்த பத்திரத்தினை விடுவிக்கவோ அல்லது அவர் சரியென நினைக்கும் வேறு விதமாகவோ நடுவர் ஆணையிடலாம்.<br>5) 170 பிரிவின் கீழ் அந்த அறிக்கை இருக்குமானால், சம்பந்தப்பட்ட காவல் அதிகாரி அவ்வறிக்கையுடன், பின் வருவனவற்றையும் நடுவருக்கு அனுப்ப வேண்டும்; அவை<br>(அ) அவருக்கு முன்பே அனுப்பப்பட்டவை தவிர ஏனைய ஆவணங்கள், சம்பந்தப் பட்ட நகல்கள் எவற்றின் ஆதாரத்தில் குற்றம் சாட்டும் தரப்பு நம்புகிறதோ அவற்றை,<br>ஆ) 161 வது பிரிவின் கீழ் சாட்சியங்களாக பரிசீலிக்கப்பட வேண்டியவர்களின் வாக்குமூலங்கள்<br>6) அவ்வாறான வாக்குமூலங்களில் ஏதேனும் ஒரு பகுதி விசாரணைக்கு சம்பந்தமில்லாததாகவோ அல்லது அதனை குற்றம் சாட்டப்பட்டவருக்கு வெளியிடல் நீதிக்கு உகந்ததல்ல என்றாலோ, பொதுநலத்துக்கு தகுதியற்ற தாகவோ கருதினால், அவர் அப்பகுதியை சுட்டிக்காட்டி, அதனை குற்றம் சாட்டப்பட்டவருக்கு கொடுக்கும் படிகளிலிருந்து விலக்குமாறு செய்ய, அதற்கான காரணத்தை விளக்கி, நீதிபதியை வேண்டலாம்<br>7) சம்பந்தப்பட்ட காவல் அதிகாரி , அது அவருக்கு சௌகரியம் என்று பட்டால், குற்றம் சாட்டப்பட்டவருக்கு மேலே 5–வது கிளை ஷரத்தில் சொன்ன சம்பந்தப்பட்ட ஒரு ஆவணம்/ பல ஆவணங்களின் நகல்களைக் கொடுக்கலாம். |

| | |
|---|---|
| | 8) இந்தப் பிரிவில் உள்ள எதுவும், கிளைப்பிரிவு 2–ன் படியான குற்றத்தை பொறுத்தவரையில், அறிக்கையை நடுவருக்கு அனுப்பிய பின் மேல் கொண்டு நடக்கும் புலனாய்வை விலக்கும் என்று கொள்ளக்கூடாது. அவ்வாறான புலனாய்விற்குப் பின், காவல் நிலைய பொறுப்பாளர், மேற்கொண்டு தடயங்களைக் கைக்கொண்டால்,வாய் வழி/ எழுத்து மூலம், நடுவருக்கு மேல் கொண்டு அறிக்கையை/ அறிக்கைகளை அதற்கேற்ற வடிவில் அனுப்ப வேண்டும்.2ம் உபப்பிரிவில் சொன்ன அறிக்கைக்கு பின் அனுப்பப்படும் அறிக்கைகளுக்கு 2 முதல் 6 வரி உள்ள உபப்பிரிவில் உள்ள ஷரத்துக்கள் பொருந்தும். |
| **174. தற்கொலை முதலியவற்றை காவல்துறையினர் விசாரித்தல்** | **1)** ஒருவர் தற்கொலை செய்து கொண்டுவிட்டார் / மற்றொருவரால் / மிருகத்தால் / இயந்திரத்தால் / விபத்தால் கொல்லப்பட்டார் என்ற தகவல் காவல் நிலைய பொறுப்பாளர் / மாநில அரசால் அதற்காக சிறப்பாக நியமிக்கப்பட ஒரு காவல்துறை அதிகாரி ஒருவருக்கு கிடைக்கும்போது, அந்த மரணத்திற்கு மற்றொருவர் செய்த குற்றம் காரணமாக இருக்கலாம் என்ற ஐயம் எழுமானால்:<br><br>மாநில அரசின் வேறுபட்ட ஆணையில்லாத போது அல்லது மாவட்ட / உட்கோட்ட நடுவரின் ஆணையில்லாத போது, நீதிவிசாரணை நடத்த அதிகாரம் உள்ள அருகாமையில் உள்ள நிர்வாக நடுவருக்கு, அந்த குற்றம் பற்றி உடனடியாக தகவல்கொடுதுவிட்டு, உடல் இருக்குமிடத்துக்கு சென்று, அப்பகுதியைச் சேர்ந்த மரியாதைக்குரிய இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையில் உள்ளவர்கள் முன்னிலையில் ஆய்வு மேற்கொண்டு, மரணத்திற்கான காரணம் குறித்த அறிக்கையை தயார் செய்ய வேண்டும். அவ்வுடலில் உள்ள காயங்கள், முறிவுகள், தோற்காயங்கள், அவ்வுடலில் காணப்படும் காயத்திற்கான அடையாளங்கள் முதலியவற்றை குறிப்பிட்டு, எவ்வாறு அல்லது எந்த ஆயுதத்தால் (இருந்தால்),காயம் ஏற்பட்டிருக்கிறது போன்றவிவரங்களைக் குறிப்பிட வேண்டும்<br><br>**2)** காவல்துறை அதிகாரி அல்லது இதர அதிகாரி / அதிகாரிகள், உடனிருந்தவர்கள் அனைவரும் அதில் கையொப்பமிட்டு,மாவட்ட நடுவருக்கு/மாவட்ட உட்கோட்ட நடுவருக்கு அனுப்ப வேண்டும்.<br><br>**3)** அதில்<br><br>i) அந்த தற்கொலை திருமணம் ஆகி 7 ஆண்டுக்குட்பட்ட பெண்ணாக இருந்தால், அல்லது,<br><br>ii) அந்த சாவு திருமணம் ஆகி 7 ஆண்டுக்குட்பட்ட பெண் சம்பந்தப் பட்டதாகவும், அப்பெண்ணுக்கு அச்சாவு நிகழ வேறு ஒருவர் காரணமாக இருக்கக் கூடும் என்று நம்ப பொதுமான அடிப்படை இருந்தால், அல்லது,<br><br>iii) அந்த சாவு திருமணம் ஆகி 7 ஆண்டுக்குட்பட்ட பெண் சம்பந்தப் பட்டதாகவும், அதுபற்றி அவளுடைய உறவினர் புகார் செய்தாலோ, அல்லது, |

| | |
|---|---|
| | iv) அந்தச் சாவில் சந்தேகம் இருப்பதாக கருதினாலோ, அல்லது,<br>v) வேறு சில பல காரணத்தினால் அவ்வாறு செய்ய வேண்டும் என்று காவல்துறை அதிகாரி கருதினாலோ, மாநில அரசின் இது சம்பந்தமான ஆணைகளுக்குட்பட்டு, அதை பரிசோதிக்கும் எண்ணத்துடன், குடிமுறை அறுவை மருத்துவருக்கு/ அல்லது மாநில அரசால் இதற்கென்று நியமிக்கப்பட்டுள்ள ஏனைய தகுதி வாய்ந்த மருத்துவருக்கு அவ்வுடலை அனுப்பலாம். வானிலையும், தூரமும் அவ்வாறு அனுப்புவதால் வழியில் உடல் அழுகி விடாது, அவ்வாறு செய்வது பலனற்று போகாதென்று கருதினால் மருத்துவ சோதனைக்கு அவ்வுடலை அனுப்பலாம்<br>4) மாவட்ட நடுவர், உட்கோட்ட நடுவர், மாவட்ட ஆட்சியர், அல்லது மாநில அரசால் அதிகாரமளிக்கப்பட்ட நிர்வாக நடுவர் முதலியவர்கள் விசாரணைக்கு உத்தரவிட அதிகாரம் உள்ளவர்கள் |
| **179. குற்றம் நிகழ்ந்த இடம் அல்லது அதன் விளைவுகள் உருவான இடத்தில் நீதி விசாரணை** | செய்யப்பட்ட செயல் ஏதாவது ஒரு காரணத்தினால் குற்றமாகுமெனில், அல்லது அதன் விளைவுகள் அச்செயலைக் குற்றமாக்கும் எனில், அந்த செயல் நடந்த இடத்தை அல்லது அதன் விளைவுகள் பாதிப்பு ஏற்படுத்திய இடத்தைத் தன் அதிகார எல்லைக்குள் கொண்ட நீதிமன்றம் அதனை விசாரித்து நீதி வழங்கும் விசாரணையை மேற்கொள்ளலாம். |
| **190 நடுவர் குற்றங்களை புலன் கொள்ளுதல்** | 1) இந்த அத்தியாயத்தில் உள்ள ஷரத்துக்களை அனுசரித்து, ஒரு முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரெட் அல்லது இதற்காக கிளைப்பிரிவு 2ன் கீழ் சிறப்பாக நியமிக்கப்பட்ட இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரெட் எந்த ஒரு குற்றத்தையும் புலன் கொள்ளலாம்.<br>அ) அவ்வாறான குற்றம் நிகழ்ந்தததற்கான உண்மை விவரங்கள் அவருக்கு புகாராகக் கொடுக்கப்பட்டதும்<br>ஆ) அவ்வாறான உண்மைகள் குறித்த காவல்துறையினர் அறிக்கை கிடைத்ததும்<br>இ) அவ்வாறான குற்றம் நிகழ்ந்த செய்தி அவருக்கு காவல் துறை அல்லாத வரிடமிருந்து கிடத்தாலோ, அவரே நேரடியாகத் தெரிந்து கொண்டாலோ,<br>2) முதல் வகுப்பு குற்றவியல் நடுவர் இதற்காக உட்பிரிவு 1–ன் கீழ் இரண்டாம் வகுப்பு நடுவர் அவரது விசாரணை அதிகாரத்துக்குள் உள்ள குற்றத்தையும் புலன் கொள்ளலாம். |
| **198B குற்றங்கள் புலன் கொள்ளப்படல்** | அந்த நபர்கள் திருமண உறவில் இருக்கும் போது, மனைவி தன் கணவன் மீது குற்றப் புகார் கொடுத்து, அதில் குற்றத்திற்கான அடிப்படை ஆதாரம் இருப்பது உறுதியானால் தவிர, 376B பிரிவின் கீழ் தண்டிக்க தக்க எந்த ஒரு குற்றத்தையும் நீதிமன்றம் புலன் கொள்ளக் கூடாது. |
| **200. குற்றச்சாட்டு செய்பவரை ஆய்வு செய்தல்** | நடுவர் குற்றத்தைப் புலன் கொள்ள குற்றச்சாட்டு செய்பவரையும், இதர சாட்சியங்களையும் (இருந்தால்) ப்ரமாணத்தின் பேரில், ஆய்வு செய்து, அதன் சாராம்சத்தை எழுத்து மூலம் பதிவு செய்து அதில் குற்றச்சாட்டு செய்பவரையும், இதர சாட்சியங்களையும் கையொப்பமிடச் செய்து, தானும் கையொப்பமிட வேண்டும். எழுத்து மூலமான புகார் அளிக்கப்படின், நடுவர் புகார் அளிப்பவரையோ, சாட்சிகளையோ விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை.<br>அ) ஒரு பொது ஊழியத்தில் உள்ள அதிகாரி தனது அலுவலகப் பணியாகவோ அல்லது கடமையை நிறைவேற்றும் போக்கில், அவரது குற்றச்சாட்டு அளித்திருந்தால்<br>ஆ) ஒரு நடுவர் விசாரணை அல்லது நீதி வழங்குவதற்கான விசாரணையை மற்றொரு நடுவருக்கு கைமாற்றி பிரிவு 192ன் கீழ் அளித்தால்,<br>நடுவர் குற்றப் புகார் அளித்தவரை விசாரிக்கத் தேவையில்லை. |

| | |
|---|---|
| **202. செயல்முறைப் பிரச்சினை ஒத்தி வைக்கப்படல்** | 1) 192 வது பிரிவின் கீழ் ஒரு வழக்கை விசாரிக்க அதிகாரமுள்ள நடுவரிடம், ஒரு குற்றச் சாட்டைப் புலன் கொள்ள அவரிடம் புகார் வந்தவுடன், 192 வது பிரிவின் கீழ் ஒரு வழக்கை விசாரிக்க மற்றொரு மாஜிஸ்ட்ரட்டிடமிருந்து அவரிடம் ஒப்படைக்கப்பட்ட புகாரை, அவர் அவ்வாறு கருதினால், குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான செயல்பாடுகளின் போக்கை ஒத்தி வைக்கலாம். அதில் மேற்கொண்டு விசாரிக்க தேவையான உண்மை உள்ளதா இல்லையா என்று கண்டறிய அவரே நேரில் ஆய்வு செய்யலாம், அல்லது வேறு ஒரு காவல்துறை அதிகாரி / இதர நபர் ஆய்வு செய்ய உத்தரவிடலாம்.<br>மேற்படி உத்தரவை பின்வரும் நிலைமைகளில் மட்டுமே அளிக்க முடியும்:<br>அ) செஷன்ஸ் நீதி மன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றமாக இருந்தால்<br>ஆ) குற்றச்சாட்டை நீதின்றம் செய்யவில்லை என்றால், குற்றச்சாட்டு செய்பவரையும், இதர சாட்சியங்களையும் (இருந்தால்) ப்ரமாணத்தின் பேரில், பிரிவு 200ன் கீழ் ஆய்வு செய்யப்படவில்லை என்றால்<br>2) உட்பிரிவு 1–ன் கீழ், விசாரிக்க வேண்டுமென்று நடுவர் கருதினால், ப்ரமாணத்தின் பேரில் சாட்சியங்களையும் ஆய்வு செய்யலாம்.<br>அமர்வு நீதி மன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றமாக தெரிந்தால் குற்றச்சாட்டு செய்பவரையும் அழைத்து, ப்ரமாணத்தின் பேரில் சாட்சியங்களை ஆய்வு செய்யலாம்<br>3) உட்பிரிவு 1ன் கீழ், விசாரித்தவர், காவல்துறை அதிகாரியாக இல்லாவிட்டாலும், இந்த விசாரணைக்கு வாரண்ட் இல்லாமல் கைது செய்யும் அதிகாரம் தவிர மற்ற அதிகாரங்கள் இருந்தால் |
| **204. செயல்முறைப் பிரச்சினை** | 1) ஒரு நடுவரின் கருத்தின்படி, குற்றத்தைக் கண்டு கொள்ள, மேல் நடவடிக்கை எடுக்க போதுமான அடிப்படை இருப்பதாக கருதினால், அந்த வழக்கு<br>அ) அழைப்பாணை வழக்கு குற்றம் சாட்டப்பட்டவரை நேரில் ஆஜராக அழைப்பாணை அனுப்புதல்<br>ஆ) பிடியாணை வழக்கு குற்றம் சாட்டப்பட்டவரை நேரில் ஆஜராகச் செய்யும் பிடியாணை/ பிடியாணைகள், அல்லது அழைப்பாணை அனுப்பி, குற்றம் சாட்டப்பட்டவரை குறிப்பிட்ட நடுவர் முன் குறிப்பிட்ட தினத்தில் ஆஜராக்க/ஆஜராக கோரலாம். அவருடைய சட்ட அதிகார எல்லைக்கு அப்பாற்பட்டால், தகுந்த நடுவர் மூலம் அவ்வாறு செய்யலாம்.<br>2) குற்றம் சாட்டும் தரப்பின் சாட்சிகள் பட்டியல் தாக்கல் செய்யப்படாதவரை கிளைப்பிரிவு 1ன் கீழ் பிடியாணை/ அழைப்பாணை வழங்கப்பட மாட்டாது<br>3) எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டு அடிப்படையில் கொடுக்கப் படும் ஒவ்வொரு பிடியாணை/ அழைப்பாணையுடனும், அக்குற்றச்சாட்டின் நகல் இணைக்கப்பட வேண்டும்.<br>4) நடப்பில் இருக்கும் எந்த ஒரு சட்டத்தின் காரணமாக ஏதாகிலும் நடைமுறைக் கட்டணம் அல்லது வேறு கட்டணம், செலுத்தப்பட வேண்டுமாயின், அவ்வாறான கட்டணம் செலுத்தப்படாத வரையில் நடைமுறை மேற்கொண்டு செய்யப்படமாட்டாது. குறிப்பிட்ட கால கெடுவுக்குள் செலுத்த தவறினால், அந்த குற்றச்சாட்டு நடுவரினால தள்ளுபடி செய்யப்படும்.<br>5) இந்தப் பிரிவில் உள்ள எதுவும், 87 வது பிரிவில் உள்ள ஷரத்துகளைப் பாதிக்காது. |

| | |
|---|---|
| **207. குற்றம் சாட்டப் பட்டவருக்கு காவல்துறையின் அறிக்கையையும், ஒரு சில ஆவணங்களையும், அளித்தல்** | காவல்துறையின் அறிக்கையின்படி சட்ட நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டவுடன், கால தாமதமில்லாமல், நடுவரினால் குற்றம் சாட்டப்பட்டவருக்கு விலையில்லாமல் பின் வருவனவற்றின் நகல்கள் கொடுக்கப்பட வேண்டும்<br>1) காவல்துறையின் அறிக்கை<br>2) 154 வது பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட<br>எஃப் ஐ ஆர் இன் நகல்<br>3) 161(3) வது பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட குற்றம் சாட்டும் தரப்பின் சாட்சியங்களாக பரிசீலிக்கப்பட வேண்டியவர்களின் வாக்குமூலங்கள், 173(6) இன் படி குற்றம் சாட்டப்பட்டவருக்கு கொடுக்கும் படிகளிலிருந்து விலக்கி வைக்கும்படி காவல்துறை அதிகாரி வேண்டிக்கொண்ட பகுதி தவிர மீதி பகுதி<br>4) 164 வது பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள், அறிக்கைகள்<br>5) 173(5) இன் படி காவல்துறை நடுவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஏனைய ஆவணங்கள், அல்லாது பொருத்தமான பகுதிகளின் நகலைக் கொடுக்க வேண்டும்<br>மேற்கூறிய கிளைப்பிரிவு 3–ன் படியான அறிக்கைகளின் எந்த ஒரு பொறுத்தமான பகுதியையும் படித்தபின், காவல்துறை அதிகாரி கொடுத்த காரணங்களைக் கருத்தில் கொண்டு, அந்தப் பகுதியின் நகலை, குற்றம் சாட்டப்பட்டவருக்கு கொடுக்க வேண்டும் என ஆணையிட வேண்டும்.<br>உட்கூறில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள், மிகவும் அதிகமான பக்கங்கள் உடையதாக, அவர் கருதினால், நகலைக் கொடுப்பதற்குப் பதிலாக, குற்றம் சாட்டப்பட்டவர் தானே நேரில் வந்து அல்லது அவரது வழக்குரைஞர் மூலமாக பார்வையிடலாம் |
| **210. ஒரே குற்றத்திற்காக புகார் வழக்கும், காவல் துறையினரின் ஆய்வும் நிகழுமெனில் பின் பற்றப்பட வேண்டிய வழிமுறைகள்** | 1) காவல்துறையினரின் அறிக்கையின் அடிப்படையில் இல்லாமல் நிறுவப்பட்ட வழக்கு( இனிமேல், (புகார் வழக்கு என்று அழைக்கப்படும்) அந்த நடுவரின் விசாரணையின் / நீதி விசாரணையின் போது, அந்தப் புகார் சம்பந்தமாக, காவல்துறையினரின் விசாரணை நடந்து வருவதாக தெரிய வந்தால், அந்த விசாரணையினை / நீதி விசாரணையினை நிறுத்திவிட்டு, காவல் துறையினரின் அந்த விசாரணை பற்றிய அறிக்கையை கேட்டுப் பெற வேண்டும்.<br>2) அந்த விசாரணை பற்றிய காவல்துறையினரின் 173 வது பிரிவின் படியான அந்த அறிக்கையில் புகார் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக நடுவரினால் புலன் கொள்ளப்பட்டால், அந்த நடுவர் காவல் துறையினரின் அறிக்கையின் அடிப்படையில் நிறுவப்பட்ட வழக்கு , மற்றும் புகார் வழக்கும் ஒன்றாக்கப்பட்டு, அது காவல்துறையினரின் அறிக்கையின் அடிப்படையில் நிறுவப்பட்ட வழக்காக கொள்ளப்பட்டு விசாரணை / நீதி விசாரணை நடத்தப்படும்.<br>3) காவல்துறையினரின் 173 வது பிரிவின் படியான அந்த அறிக்கையால் புகார் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக ஏதும் இல்லையென்றால், காவல்துறையினரின் அறிக்கையின் அடிப்படையில் குற்றம் புலன் கொள்ளப்படவில்லை ஆனால், அவரால் நிறுத்திவைக்கப்பட்ட அந்த விசாரணையை மேற்கொண்டு, இந்த சட்டப்படி நடத்த வேண்டும். |

| | |
|---|---|
| **225. அரசு வழக்கறிஞரால் நடத்தப்பட வேண்டிய நீதிவிசாரணை** | அமர்வு நீதிமன்றத்தில் நடக்கும் விசாரணையின் போது, குற்றம் சாட்டுத் தரப்பு விசாரணையை அரசு வழக்கறிஞர் மேற்கொள்வார். |
| **226. குற்றம் சாட்டும் தரப்பு வழக்கைத் துவங்குதல்** | 209 வது பிரிவின்படியான வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவர் தானாகவே ஆஜரானால், அல்லது ஆஜர்படுத்தப்பட்டால், குற்றம்சாட்டும் தரப்பு அரசு வழக்கறிஞரால், குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக உள்ள குற்றப் புகாரை பற்றியும், அதை நிரூபிக்க அவரிடம் உள்ள ஆதாரங்களையும், கூறி துவங்க வேண்டும். |
| **232. குற்றம் சாட்டப்பட்டவரை குற்றத்திலிருந்து விடுவித்தல்** | குற்றம் சாட்டும் தரப்பு முன் வைத்த ஆதாரங்களைக் கேட்ட பின்பு, குற்றம் சாட்டப்பட்டவரை பரிசோதித்த பின், பிரதிவாதியின் வாதங்களைக் கேட்டபின், குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக குற்றம் செய்ததற்கான ஆதாரம் ஏதும் இல்லையென்று நடுவர் முடிவெடுத்தால் குற்றம் சாட்டப்பட்டவரை குற்றத்திலிருந்து விடுவித்து உத்தரவிடுவார். |
| **243. பிரதிவாதியின் சான்றாதாரங்கள்** | 1) குற்றம் சாட்டும் தரப்பு தன் துவக்கம் நிகழ்த்திய பின்னர் குற்றம் சாட்டப்பட்டவர் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள, சான்றாதாரங்களை முன்வைக்குமாறு அழைக்கப்படுவார். குற்றம் சாட்டப்பட்டவர் ஏதாவது எழுத்து மூலம் சமர்பித்தால், நடுவர் அதை ஆவணங்களுடன் தாக்கல் செய்வார்<br>2), குற்றம் சாட்டப்பட்டவர் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள, துவங்கிய பிறகு, நடுவரிடம் ஏதாவது சாட்சியத்தினை விசாரணைக்காக/ குறுக்கு விசாரணைக்காக வரும்படி கட்டாயப்படுத்தினால், ஏதாவது ஆதாரத்தை/ மற்றதை முன்வைக்குமாறு வேண்டினால், நடுவர் அந்த முறையை கொடுப்பார். ஆனால் அவ்வாறு முறையை வேண்டுவது காலதாமதத்தை செய்யவோ அல்லது சஞ்சலத்தை உண்டாக்கும் நோக்கத்துடன் செய்யப்படுவதாக கருதினால், நியாயத்தினை மறுக்கும் செயலாகும் என்று கருதினால், அந்த கோரிக்கையை நடுவர் மறுக்க வேண்டும். அதற்கான காரணத்தை எழுத்து மூலம் பதிய வேண்டும்.<br>குற்றம் சாட்டப்பட்டவர் ஏதாவது சாட்சியத்தினையும் விசாரணை/ குறுக்கு விசாரணை செய்த பிறகு, அல்லது அவ்வாறு செய்ய வாய்ப்பு இருந்த பிறகு, இந்த பிரிவின்படி கட்டாயப்படுத்த முடியாது. ஆனால் கட்டாயப்படுத்துவது நீதியை நிலைநாட்ட தேவையென்று கருதினால் செய்யலாம்.<br>3) உட்பிரிவு 2–ன் படி குற்றம் சாட்டப்பட்டவர் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள, துவங்கிய பிறகு, நடுவரிடம் ஏதாவது சாட்சியத்தினை விசாரணைக்காக/ குறுக்கு விசாரணைக்காக வரும்படி கட்டாயப்படுதினால், அதற்கு முன், விசாரணைக்காக சாட்சி அவ்வாறு வந்து செல்ல ஒரு நியமான தொகையை நீதிமன்றத்தில் கட்டும்படி கோரலாம். |
| **247. பிரதிவாதியின் சான்றாதாரங்கள்** | அதன் பின் 243 பிரிவின் படி குற்றம் சாட்டப்பட்டவர் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள, சான்றாதாரங்களை முன் வைக்குமாறு அழைக்கப்படுவார் |

| | |
|---|---|
| **255. விடுதலை அல்லது தண்டனை** | 1) நடுவர் 254 வது பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட அனைத்து சாட்சியங் களையும் ஆய்வு செய்த பின் மேலும் வேறு சாட்சியங்கள் இருந்தால் அவைகளையும் ஆய்வு செய்த பின், அவர் அவரது அபிப்பிராயத்தில், குற்றம் சாட்டப்பட்டவர் நிரபராதி என்று கொண்டால், அவரை விடுதலை செய்வதற்கான ஆணையை இடுவார்.<br>2) நடுவர் 325 வது அல்லது 360 பிரிவின் கீழ் மேற்கொள்ளவில்லை என்றால்,அவர், குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி என்று கொண்டால், சட்டப்படியான தண்டனையைக் விதிப்பார்.<br>3) 252 வது மற்றும் 255 வது பிரிவின் கீழ், இந்த அத்தியாயத்தின் கீழ் விசாரிக்கத் தகுந்த குற்றங்களை, அவர் முன் ஒப்புகொள்ளப்பட்ட அல்லது நிரூபிக்கப்பட்டவைகள் மூலம், அவர் குற்றம் செய்திருப்பதாக கொண்டால், குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி என்று கொண்டால், குற்றச்சாட்டு அல்லது சம்மன்கள் எவ்வாறு இருந்தாலும், குற்றம் சாட்டப்பட்டவருக்கு அநீதியாக அது ஆகாது எனில், குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி என்று தீர்ப்பளிப்பார். |
| **273. குற்றம் சாட்டப்பட்டவர் முன்னிலையில் பதிய வேண்டிய சான்றாதாரங்கள்** | மாறாக தெளிவாக கூறப்படாத போது, அனைத்து சான்றாதாரங்களும், குற்றம் சாட்டப்பட்டவர் முன்னிலையில், அல்லது அவரது இருப்பு தேவையில்லை என்றால், அவரது வழக்கறிஞர் முன்னிலையில், பதிய வேண்டும்.<br>பாலியல் வன்புணர்ச்சி அல்லது பாலியல் தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டதாக சொல்லப்படும், 18 வயதுக்குக் கீழான பெண்ணின், வாக்குமூலத்தை பதிவு செய்யும்போது, தேவை என்று கருதப்படும்போது, முன்னெச்சரிக்கைகள் எடுக்கப்பட்டு, அந்தப் பெண் குற்றம் சாட்டப்பட்டவரை எதிர் கொள்ளாதவாறு அதே சமயம் குறுக்கு விசாரணை உரிமையையும் நிலைநாட்ட வேண்டும்.<br>விளக்கம் viii வது அத்தியாயத்தின் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டவர் உள்பட குற்றம் சாட்டப்பட்டவர் என்று பொருளாகும். |
| **281 குற்றம் சாட்டப்பட்டவர் விசாரிக்கப்படுவதைப் பதிவு செய்தல்** | 1) பெருநகர நடுவர் முன்னிலையில் குற்றம் சாட்டப்பட்டவர் பரிசோதிக்கப் பட்டால், அந்த நடுவர், குற்றம் சாட்டப்பட்டவர் பரிசோதனையின் சாராம்சங்களை நீதிமன்ற மொழியில் குறிப்பாணையாக செய்திட வேண்டும். அந்தக் குறிப்பாணையில் நடுவர் கையெழுத்திடல் வேண்டும், அது ஆவணங்களில் அடங்கும்.<br>2) பெருநகர நடுவர் அல்லாத நடுவர் முன்னிலையில் , அமர்வு நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டவர் பரிசோதிக்கப்பட்டால், குற்றம் சாட்டப்பட்டவர் பரிசோதனையின் போது வெளிப்பட்ட அனைத்தையும் தலைமை நீதிபதி அல்லது நடுவர் பதிய வேண்டும். அவருக்கு சரீர குறைபாடு இருந்தாலோ அல்லது வேறு காரணத்தினாலோ செய்ய இயலவில்லையென்றால், அவரது வழிகாட்டுதல் படி, மேற்பார்வையில், நீதிமன்றத்தால் இதற்கென நியமிக்கப்பட்டுள்ள அதிகாரியைக் கொண்டு பதிய வேண்டும்.<br>3) முடிந்தவரை அந்த பதிவு குற்றம் சாட்டப்பட்டவர் விசாரிக்கப்பட்ட மொழியிலேயே இருக்க வேண்டும், அவ்வாறு முடியாத பட்சத்தில் நீதிமன்ற மொழியில் இருக்க வேண்டும்.<br>4) அவ்வாறு பதிவு செய்யப்பட்டவை குற்றம் சாட்டப்பட்டவருக்கு காட்டப்பட்டு/ படிக்கப்பட்டு, அல்லது பதிவு செய்யப்பட்ட மொழி அவருக்குப் புரியாதென்றால், அவருக்கும் புரியும் மொழியில் விளக்கப்பட்டு, அவர் மேலும் ஏதேனும் விளக்க வேண்டும், சேர்க்க வேண்டும் என்றால் அவ்வாறு செய்ய உரிமையுண்டு.<br>5) அதன் பின் அதில் குற்றம் சாட்டப்பட்டவர், தலைமை நீதிபதி அல்லது நடுவர் கையெழுத்திடல் வேண்டும். அவர் அவை முன்னிலையில் / கேட்பில் பரிசோதிக்கப்பட்டதையும், குற்றம் சாட்டப்பட்டவரின் உண்மையான, முழுமையான பதிவு என்று தனது கையால் எழுதிடல் வேண்டும்.<br>6) இந்தப் பிரிவில் உள்ள எதுவும், முழு விசாரணைக்கு பொருந்தும் என்று கருத முடியாது. |

| | |
|---|---|
| **294. சில ஆவணங்களுக்கு முறையான ஆதாரம் இல்லாமை** | 1) ஒரு ஆவணம் நீதிமன்றத்தின் முன் குற்றம் சாட்டும் தரப்பால்/ குற்றம் சாட்டப்பட்டவரால் சமர்பிக்கப்பட்டால், அது ஆவணப் பட்டியலில் சேர்க்கப்பட்டு, குற்றம் சாட்டும் தரப்பால் / குற்றம் சாட்டப்பட்டவரால், அவரது வழக்கறிஞரால் எவ்விதம் பொருந்துமோ அவ்வாறு, அதன் அசல்தன்மை ஏற்றுக் கொள்ளவோ/ மறுக்கப்படவோ கோரப்படுவர்.<br>2) ஆவணப் பட்டியல் மாநில அரசால் நிர்ணயிக்கப்பட்ட வடிவில் இருக்கும்<br>3) ஆவணத்தின் அசல் தன்மை மறுத்துரைக்கப்படாதவரை, அந்த ஆவணம் விசாரணையின் / இந்த சட்டத்தின் வேறு நடவடிக்கைக்காக சாட்சியாக, அது கையெழுத்திடப்பட்டதாக சொல்லப்படுபவரின் கையெழுத்தில்லாமல் ஆவணமாகக் கொள்ளப்படும்<br>நீதிமன்றம் அந்த கையெழுத்தை வேண்டினால் உண்மையென்று நிருபிக்க கோரலாம். |
| **301. அரசு வழக்கறிஞர் ஆஜர் ஆதல்** | 1) எந்த நீதிமன்றத்தின் முன்னும் உள்ள வழக்கில் விசாரணை/ நீதி விசாரணை/ மேல்முறையீட்டில், கையெழுத்திடப்பட்ட ஆணையேதுமில்லாமலே, அரசு வழக்கறிஞர் / உதவி அரசு வழக்கறிஞர் ஆஜராகலாம்.<br>2) அவ்வாறான வழக்குகளில், தனி நபர் தன் வழக்கறிஞரை எவரையேனும் நீதிமன்றத்தில் நீதி விசாரணை செய்யக் கோரினால், அரசு வழக்கறிஞர் / உதவி அரசு வழக்கறிஞர் ஆஜராகி வழக்கை நடத்த வேண்டும்,அவ்வாறு கோரப்பட்ட வழக்கறிஞர், அரசு வழக்கறிஞர் / உதவி அரசு வழக்கறிஞரின் ஆலோசனைப்படி நடக்கவும், நீதிமன்றம் அனுமதித்தால் சாட்சியங்கள் முடிந்தபின், எழுத்து மூலமான வாதங்களை முன் வைக்கலாம். |
| **302. குற்றம் சாட்டும் தரப்பை நடத்துவதற்கான அனுமதி** | 1) வழக்கில் விசாரணை / நீதி விசாரணை நடத்தும் எந்த நடுவரும், ஆய்வாளருக்கு கீழில்லாத காவல்துறை அதிகாரியைத் தவிர எந்த ஒருவரையும், குற்றம் சாட்டும் தரப்பை நடத்த அனுமதிக்கலாம். அவ்வாறு அனுமதி இல்லாமல் குற்றம் சாட்டும் தரப்பை நடத்த தலைமை அரசு வழக்கறிஞர், அரசு வழக்கறிஞர், உதவி அரசு வழக்கறிஞர் தவிர ஏனைய எவருக்கும் அதிகாரமில்லை.<br>எந்த ஒரு காவல்துறை அதிகாரியையும், அவ்வழக்கின் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக புலன் விசாரணையில் அவ்வதிகாரி பங்கு பற்றியிருந்தால், அவர் குற்றம் சாட்டும் தரப்பை நடத்த அனுமதி இல்லை.<br>2) குற்றம் சாட்டும் தரப்பை நடத்துபவர் அவர் தானே முன் நின்றோ அல்லது அவரது வழக்கறிஞர் மூலமாகவோ நடத்தலாம். |

| | |
|---|---|
| **309. விசாரணையை தள்ளி வைக்கவும், ஒத்தி வைக்கவும் உள்ள அதிகாரங்கள்** | 1) ஒவ்வொரு விசாரணையிலும்/நீதிவிசாரணையிலும், ஒவ்வொரு நாளும் விசாரணை என்ற முறையில் அனைத்து சாட்சியங்களும் விசாரிக்கப்பட்டு முடியும்வரை தொடர்ந்து விசாரிக்கப்பட வேண்டும். ஆனால், அவ்வாறு செய்ய முடியாமல் போனால், அடுத்த தினத்தைத் தாண்டி தள்ளி வைக்க தகுந்த காரணங்களைப் பதிவு செய்ய வேண்டும்.<br><br>I.P.Cன் 309–ன் உள் பிரிவின்படி, CrPCன் 376, 376A, 376B, 376C, 376D–ன் பிரிவின்படி உள்ள வழக்குகளில், நீதிமன்ற ஆய்வுக்கான விசாரணையை, நீதிமன்ற விசாரணையை, கூடிய மட்டிலும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த தேதியிலிருந்து, இரண்டு மாதங்களுக்குள் முடிக்க வேண்டும்<br><br>2) குற்றத்தை நீதிமன்றம் புலன் கொண்டபின், நீதிமன்ற விசாரணை ஆரம்பித்த பின், தேவை என்று கண்டு கொண்டால், அறிவுறுத்தப்பட்டால், விசாரணை ஆரம்பிப்பதை ஒத்திவைக்க, விசாரணையை / நீதிமன்ற விசாரணையை அவ்வப்போது தள்ளி வைக்கவும், ஒத்தி வைக்கவும், அது சரியென்று நினைக்கும் அடிப்படையில், காரணங்களை எழுத்து மூலம் பதிவு செய்து, தேவையென்று நினைத்தால், குற்றம் சாட்டப்பட்டவரை அவர் கைது செய்யப்பட்டிருந்தால், காவலில் வைக்க ஆணையிடலாம்.<br><br>குற்றம் சாட்டப்பட்டவரை எந்தக் காரணம் கொண்டும், ஒரே தடவை, 15 நாட்களுக்கு மேல் போலீஸ் காவலில் வைக்க எந்த நடுவரும் ஆணையிடக் கூடாது.<br><br>சாட்சிகள் ஆஜராகி உள்ள போது, அவர்களை விசாரிக்காமல், ஏதேனும் எழுத்தில் பதியப்பட்ட, சிறப்பான காரணம் இல்லாத போது, தள்ளி வைக்கவும், ஒத்தி வைக்கவும் கூடாது.<br><br>தன் மேல் சாட்டப்பட்ட குற்றத்திற்கான தீர்ப்பை, அவர் மீது சுமத்துவதைத் தள்ளி வைக்கும் நோக்கத்துடன் மட்டுமே கேட்கப்படும், தள்ளி வைப்பைத் தரவும் கூடாது. |
| | மேலும்,<br><br>அ) கட்சிக்காரர்களின் கட்டுப்பாட்டுக்கு மீறிய சூழ்நிலையில் அல்லாது அவர் களுடைய கோரிக்கைக்காக மட்டும் என்று, ஒத்தி வைக்கக்கூடாது.<br><br>ஆ) அவரது வழக்கறிஞர் மற்றொரு நீதிமன்றத்தில் வழக்காடுகின்றார் என்ற கோரிக்கைக்காக மட்டும் ஒத்தி வைக்கக்கூடாது.<br><br>இ) சாட்சி நீதிமன்றத்தில் இருக்கும் போது, கட்சிக்காரர்/ அவரது வழக்கறிஞர் நீதிமன்றத்தில் இல்லை என்றாலோ அல்லது நீதிமன்றத்தில் இருந்தாலும், சாட்சியை ஆய்வு/குறுக்கு விசாரணை செய்ய தயாராக இல்லையென்றாலும் ஒத்தி வைக்கக்கூடாது<br><br>விளக்கம் 1: குற்றம் சாட்டப்பட்டவருக்கெதிராக குற்றம் சாட்டப்பட்டவர் அதைச் செய்திருக்கலாம் என்ற சந்தேகம் வந்தால், போதுமான நிரூபணங்கள் கிடைக்கப் பெற்ற பின், மேற்கொண்டு நிரூபணங்கள் கிடைக்கப் பெற அவரைக் காவலில் வைத்தால் அது சாத்தியம் என்றால், அது அவரைக் காவலில் வைக்க நியாயமான அடிப்படையாகும்.<br><br>விளக்கம் 2: தள்ளி வைக்கவும், ஒத்தி வைக்கவும் உள்ள நடைமுறையில், பொருந்தும் இடங்களில், தேவையான கட்டணத்தை குற்றம் சாட்டும் தரப்பு/குற்றம் சாட்டப்பட்டவர் செலுத்த வேண்டும் |

| | |
|---|---|
| **311. சாட்சியங்களை ஆஜராக அழைப்பது, சாட்சியங்களை ஆய்வு செய்வதற்கான அதிகாரம்** | எந்த ஒரு நீதிமன்றமும், விசாரணையின் / நீதி விசாரணையின் எந்த ஒரு நிலையிலும் நேரில் சாட்சியாக ஆஜராகும்படியோ, சாட்சியாக ஆஜராகும்படி கோராமல் ஆஜரான நபர்களை விசாரிக்கவோ, ஏற்கெனவே சாட்சி சொன்னவரை மீண்டும் அழைக்கவோ, மீண்டும் விசாரிக்கவோ செய்யலாம். அவ்வாறான அவரது சாட்சியம் தேவை என்றும், வழக்கின் நியாயமான தீர்ப்புக்கு அது தேவை என்றும் அப்போது கருதினால் ஏற்கெனவே சாட்சி சொன்னவரை மீண்டும் அழைக்கவோ, மீண்டும் விசாரிக்கவோ செய்யலாம் |
| **313. குற்றம் சாட்டப்பட்டவரைப் பரிசோதிக்கும் அதிகாரம்** | 1) ஒவ்வொரு விசாரணையிலும்/ நீதி விசாரணையிலும், கீழ் குற்றம் சாட்டப் பட்டவர் நேராக அவருக்கு எதிராக சொல்லப்படும் சாட்சியங்களின், சூழ்நிலைகளை நீதிமன்றத்தில் விளக்க<br>அ) நீதிமன்றம் தேவை என்று நினைக்கும் எந்த ஒரு வினாவையும், குற்றம் சாட்டப்பட்டவரிடம், முன்னறிவிப்பு ஏதுமின்றி கேட்கலாம்.<br>ஆ) குற்றம் சாட்டும் தரப்பு சாட்சியங்கள் விசாரிக்கப்பட்ட பின், குற்றம் சாட்டப் பட்டவர் நேராக அவருக்கு எதிராக சொல்லப்படும் சாட்சியங்களின், சூழ்நிலைகளை நீதிமன்றத்தில் விளக்குவதற்கு முன், பொதுவாக அவரை விசாரிக்க<br>அழைப்பாணை வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவர் நேராக ஆஜராகத் தேவையில்லை என்று நீதிமன்றம் உத்தரவிட்ட பின், கிளைப் பிரிவு 2ன் கீழ் விசாரிக்கத் தேவையில்லை என்றும் ஆணையிடலாம்.<br>உட்பிரிவு 1ன் கீழ் விசாரிக்க குற்றம் சாட்டப்பட்டவரிடம் பிரமாணம் பெற வேண்டியதில்லை.<br>3) குற்றம் சாட்டப்பட்டவர் பதில் சொல்ல மறுத்தோ அல்லது தவறான தகவல்களைக் கொடுத்தோ, தன்னைத் தானே தண்டனைக்குள்ளாக்கிக் கொள்ள கூடாது.<br>4) குற்றம் சாட்டப்பட்டவர் கொடுக்கும் பதில் அந்த வழக்கின் விசாரணை/ நீதி விசாரணைக்குப் பயன்படுத்தப்பட்டு, அவருக்கு ஆதரவாகவோ அல்லது அவருக்கு எதிராகவோ, மேலும் அவரின் பதில் அவர் புரிந்ததாக காண்பிக்கும் வேறு எந்தக் குற்றத்தையும் விசாரணை/ நீதி விசாரணை செய்ய பயன்படுத்தப்படலாம். |

| | |
|---|---|
| **321. குற்றம் சாட்டும் தரப்பை நடத்துபவர் தன்னைத்தானே விலக்கி கொள்ளுதல்** | வழக்கை நடத்தும் பொறுப்பில் உள்ள எந்த ஒரு அரசு வழக்கறிஞர், உதவி அரசு வழக்கறிஞரும், நீதிமன்றத்தின் அனுமதியுடன், தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன், ஒருவருக்கு எதிராக நடத்தப்படும் பொதுவான வழக்கிலிருந்தோ, ஒன்று அல்லது பல குற்ற விசாரணையிலிருந்தோ, தன்னைத்தானே விலக்கி கொள்ளலாம். அவ்வாறு விலக்கி கொள்ளும் போது<br>அ) குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்படாமலிருந்தால், அக்குற்றதிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவர் விடுவிக்கப்படுவார்.<br>ஆ) குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தால் அல்லது இந்த சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டு தேவையில்லையென்றால், அவற்றிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவர் விடுவிக்கப்படுவார்.<br>இருந்தபோதும், பின்வரும் சமயங்களில் குற்றவிடுவிப்பு நிகழாது:<br>1) அவ்வாறான குற்றம் மத்திய அரசின் நிர்வாக அதிகாரத்தின்படியான ஒரு சட்டத்தை எதிர்த்து செய்யப்பட்டிருந்தால்<br>2) டில்லி சிறப்பு காவல் படை சட்டம் 1946 (251946) கீழ் டில்லி சிறப்பு காவல் படையால் ஆய்வு செய்யப்பட்டிருந்தால்<br>3) மத்திய அரசின் ஏதாவது ஒரு சொத்துக்கு அழிவு, சேதாரம், செய்யப்பட்டிருந்தால்<br>4) மத்திய அரசின் ஏதாவது ஒரு அதிகாரியால் கடமையை செய்யும் போது, அவரது அரசுப்பணியை செய்ததாகச் சொல்லும் போது, அரசு வழக்கறிஞர் மத்திய அரசினால் அனுமதிக்கப்படாத போது, நீதிமன்றத்தை அணுகி, ப்ராசெக்யூஷனை விலக்கி கொள்ள அனுமதி பெற்று விலக்கி கொள்ளலாம். அதற்கு முன் மத்திய அரசின் குற்றம் சாட்டும் தரப்பிலிருந்து விலக்கி கொள்ள அனுமதிக் கடிதத்தை சமர்ப்பிக்க கோரவேண்டும் |

| | |
|---|---|
| **357. இழப்பீட்டுத் தொகை வழங்க உத்தரவிடல்** | 1) எந்த ஒரு நீதிமன்றமும், தண்டத்தொகை அல்லது அபராதம் விதித்தால் / தண்டனை (மரண தண்டனை உள்பட) விதிக்கும்போது, தண்டத்தொகை அதில் ஒரு பாகம் வகித்தால், நீதிமன்றம், தீர்ப்பு வழங்கும்போது, பகுதி / முழு தண்டம் வசூலிக்கப்பட்டு, பின் வருமாறு பயன்படுத்தப்பட வேண்டும் எனக் கூறலாம்.<br>அ) சரியாக செய்யப்பட்ட குற்றச்சாட்டு தம் தரப்பின் செலவை ஈடுகட்ட<br>ஆ) அந்தக் குற்றத்தால் நஷ்டம் / காயம் அடைந்த நபருக்கு நஷ்ட ஈடாக. அவ்வாறான நஷ்ட ஈடு உரிமை வழக்கு மூலம் வசூலிக்கத் தகுந்தது என நீதிமன்றம் கருதினால்<br>இ) படுகாய விபத்து சட்டம் 1855 (13 1855) கீழ், நஷ்ட ஈடாக வசூலிக்கத் தகுந்த, ஒருவர் மற்றொருவரின் சாவுக்கு காரணம்/உடந்தை என்ற குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டால்<br>ஈ) திருட்டு, கையாடல், நம்பிக்கை துரோகம், ஏமாற்று, நேர்மையற்ற முறையில் பெறுதல், வைத்திருத்தல், தானாகவே முன் வந்து விற்க உதவிடல், திருடப்பட்ட பொருளை, தெரிந்து கொண்டே, அல்லது திருடப்பட்டிருக்கக் கூடும் என்று தெரிந்தே, நியாயமாக அந்த சொத்தை வாங்கியவருக்கு நஷ்ட ஈடாக, அந்த சொத்து அதன் உரிமையாளருக்கு திருப்பிக் கொடுக்கப்பட்டால்<br>2) மேல் முறையீட்டிற்கு வழியுள்ள வழக்குகளில், அவ்வாறான மேல் முறையீடு செய்ய உள்ள கால அவகாசம் முடிவதற்குள், அல்லது மேல் முறையீடு செய்யப்பட்டால், அதன் இறுதித் தீர்ப்பு வரும் வரை<br>3) நீதிமன்ற தீர்ப்பில், தண்டம் ஒரு பகுதியாக இல்லாத போது, நீதிமன்றம், தீர்ப்பு வழங்கும்போது, குற்றம் சாட்டப்பட்டவரிடமிருந்து, நஷ்ட ஈடாக, அவரது குற்றத்தால் நஷ்டம் / காயம் அடைந்த நபருக்கு கொடுக்கும்படி உத்தரவிடலாம்.<br>4) இம்மாதிரியான உத்தரவை மேல் முறையீட்டு நீதிமன்றம், உயர் நீதிமன்றம், அமர்வு நீதி மன்றமும் இடலாம்.<br>5) இதன்பின் தீர்ப்பு வழங்கப்படும், இதே விஷயம் சம்பந்தமான உரிமையியல் நீதிமன்ற வழக்கில், நஷ்ட ஈடு நிர்ணயிக்கப்படும் போது, வசூலிக்கப்பட்ட, கொடுக்கப்பட்ட நஷ்ட ஈடு கணக்கில் கொள்ளப்பட வேண்டும். |
| **357 பாதிக்கப்பட்டவருக்கு மருத்துவ சிகிச்சை** | IPC 326A, 376, 376A, 376B, 376C, 376D, 376E ஆகியவற்றின் கீழ் குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு அனைத்து தனியார், பொது மற்றும் அரசு, உள்ளாட்சியினரால் நடத்தப்படும் மருத்துவ மனைகளிலும் உடனடியாக முதலுதவி அல்லது சிகிச்சை இலவசமாக அளிக்கப்பட வேண்டும். அவ்வாறு நடந்ததைப் பற்றி உடனடியாக காவல்துறையினருக்கு அவர்கள் தெரிவிக்கவேண்டும் |
| **372 மேல் முறையீடு செய்வதற்கான வாய்ப்பு** | இந்தச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள வாய்ப்புகள், அல்லது அப்போது நடைமுறையில் இருக்கும் வேறொரு சட்டத்தின் அடிப்படையில் இன்றி வேறு எந்த வகையிலும் குற்றவியல் நீதிமன்றத்தின் தீர்ப்பின் மீது மேல் முறையீடு செய்ய முடியாது.<br>இருந்த போதும், குற்றத்தால் பாதிக்கப்பட்டவர், குற்றவாளியின் விடுதலையை எதிர்த்து, குறைவான தண்டனை அல்லது பற்றாக்குறை இழப்பீடு வழங்க உத்தரவு குற்றவாளிக்கு வழங்கப்பட்டதாக கருதினால், குற்றவியல் நீதிமன்றதின் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யலாம். அத்தகைய மேல்முறையீடு தண்டனைக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்படும் நீதிமன்றத்திலேயே தாக்கல் செய்யப்பட வேண்டும். |

**437, பிணை வழங்க இயலாத வழக்கில் பிணை பெறுதல்**

1) பிணை வழங்க இயலாத குற்றத்தை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட/ சந்தேகப்படுகின்றவர், கைது செய்யப்பட்டால்,பிடியாணை இல்லாமல் காவல்நிலைய பொறுப்பதிகாரியால், பிடித்து வைக்கப்பட்டவர், உயர் நீதிமன்றத்துக்கு அமர்வு நீதிமன்றத்துக்கு தவிர மற்ற நீதி மன்றத்துக்கு தானாகவே வந்தாலோ/ கொண்டுவரப்பட்டாலோ ஜாமீனில் விடுவிக்கப்படலாம்.

ஆனால்,

அ) குற்றம் சாட்டப்பட்டவர், தூக்கு/ஆயுள் தண்டனைக்குரிய குற்றத்தை செய்ததாக, நம்புவதற்கு போதுமான ஆதாரம் இருப்பதாக தோன்றினால்.

ஆ) குற்றம் சாட்டப்பட்டவர், கண்டுகொள்ளக்கூடிய குற்றத்தை செய்ததாக, நம்புவதற்கு போதுமான ஆதாரம் இருப்பதாக தோன்றினால், தூக்கு / ஆயுள் / 7 ஆண்டுக்கு மேல் சிறை தண்டனைக்குரிய குற்றத்தை முன்னமே செய்த குற்றவாளியானால், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட முறை / 3 ஆண்டுக்குமேல் / 7 ஆண்டுக்குள் சிறை தண்டனைக்குரிய புலன் கொள்ளக்கூடிய குற்றத்தை செய்திருந்தால் அவரை பிணையில் விடுவிக்க முடியாது.

இருந்தபோதும்,

நம்புவதற்கு போதுமான ஆதாரம் இருப்பதாக தோன்றினால்

மேற்கூறிய அ, ஆ வில் குறிப்பிடப்பட்ட குற்றத்தை செய்தவர் 16 வயதுக்குட்பட்டவரானால், பெண்ணானால், வியாதியஸ்தரானால், நிலை தடுமாறுபவரானால் அவர் பிணையில் விடுவிக்கப்படலாம்.

மேலும்,

நீதிமன்றம் 2–வது பாராவில் குறிப்பிடப்பட்ட நபரை ஏதேனும் சிறப்பு காரணத்திற்காக அவ்வாறு செய்வது நியாயம். சரி என்றும் நீதிமன்றம் கருதினால் ஜாமீனில் விடுதலை செய்ய உத்தரவிடும்,

குற்றம் சாட்டப்பட்டவரை விசாரிக்கும் போது ஜாமீன் பெற உரிமை இருந்தால், அவர் நீதிமன்ற வழிகாட்டுதலின் பேரில் நடப்பதாக உறுதியளித்தால், சாட்சியங்கள் அடையாளம் காட்டவேண்டும் என்ற காரணம் ஒருவருக்கு ஜாமீன் மறுக்க போதுமான காரணமாகாது.

2) அதிகாரிக்கோ அல்லது நீதிமன்றத்திற்கோ , விசாரணையின் எந்த கட்டத்திலும், அவர் ஜாமீன் மறுக்கப்பட வேண்டிய குற்றம் செய்ததாக நம்ப போதுமான ஆதாரம் இல்லையென்றபோதும் அவரை மேலும் விசாரிக்க வேண்டும் என்று கருத்து இருந்தால், 446A பிரிவின்படி விசாரணை நடக்குமுன், பிணையில் விடுதலை செய்ய அல்லது அந்த அதிகாரியின் விருப்பப்படி பிணையாளர் இல்லாமல் பத்திரத்தின் அடிப்படையில், இதன் கீழ்கண்ட பிணை நிபந்தனைகளில் பிணை விடுதலை செய்ய உத்தரவிடும்

3) IPC ன் VI, XVI, XVII வது அத்தியாயங்களின்படி 7 ஆண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் சிறைதண்டனை கொடுக்கத்தக்கதான குற்றத்தை செய்ததாக சந்தேகிக்கப்படும், குற்றம் சாட்டப்படும், அதற்கு துணை போன, சதி செய்த, குற்றம் செய்ய முயன்றவரை, ,பிணையில் விடுதலை செய்ய கிளைச் சட்டம் 1ன் கீழ் நிபந்தனைகள் விதிக்கலாம்.

அ) இந்த அத்தியாயத்தின்படி, பத்திரத்தின் அடிப்படையில், அந்த நபர் வேண்டும் போதெல்லாம் வருவார் என்ற நிபந்தனையுடன்

ஆ)அவர் செய்ததாக சந்தேகிக்கப்படும் குற்றத்தை, குற்றம் சாட்டப்படும் குற்றத்தைப் போன்ற மற்றொரு குற்றத்தை மறுபடியும் செய்யமாட்டார் என்ற நிபந்தனையுடன்

| | |
|---|---|
| | இ) அவர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, எந்த தூண்டுதல், மிரட்டல், வாக்கு கொடுத்தல் முதலிய எதையும் சம்பவத்தினைப் பற்றிய உண்மைகளறிந்தவரிடம் சொல்லி அவரை அந்த உண்மைகளை, நீதிமன்றத்திலோ, காவல் துறையினரிடமோ சொல்வதைத் தடுக்கவோ, சாட்சியங்களை கலைக்கவோ கூடாது.<br>நீதியின்பால் உள்ள பற்றின் காரணமாக, தேவையான வேறு, நிபந்தனைகளை விதிக்கக்கூடும்<br>4) ஒரு அதிகாரியோ, நீதிமன்றமோ கிளை பிரிவு (1) அல்லது (2)–ன் கீழ் ஒருவரை பிணையில் விடுதலை செய்யும்போது, அவரது/அதனுடைய காரணங்களை எழுத்து மூலம் பதிவு செய்யவண்டும்.<br>5) ஒரு நீதிமன்றமோ கிளை பிரிவு 1–ன் கீழ், கிளை பிரிவு 2–ன் கீழ் ஒருவரை பிணையில் விடுதலை செய்த பின் தேவை என்று கருதினால் அவரை கைது செய்ய, ஜெயிலில் வைக்க உத்தரவிடலாம்<br>6) ஏதாவது ஒரு நடுவரால் விசாரிக்கப்படும் பிணையில் விடுதலை செய்யமுடியாத குற்றத்தை செய்ததாக சந்தேகிக்கப்படும், காவலில் உள்ள ஒருவரது நீதி விசாரணை முதல் சாட்சியை விசாரிக்க விதித்த தினத்திலிருந்து 60 நாட்களுக்குள் முடிக்கப்படவில்லை என்றால், அந்நபர், விசாரணை நடைபெற்ற முழு காலத்திலும் காவலில் இருந்திருந்தால், அவர், நடுவரின் திருப்திக்கேற்றவாறு நிபந்தனைகளுடன் பிணையில் விடுதலை செய்யலாம். அவ்வாறில்லையெனில் அதற்கான காரணங்களை நடுவர் எழுத்து மூலம் பதிவு செய்யவேண்டும்.<br>7) ஏதாவது ஒரு நடுவரால் விசாரிக்கப்படும் பிணையில் விடுதலை செய்யமுடியாத குற்றத்தை செய்ததாக சந்தேகிக்கப்படும் ஒருவரை, விசாரணை முடிந்தபின், தீர்ப்பு வழங்கப்படும் முன், நீதிமன்றம், ஏதாவது ஒரு காரணத்தினால் அவர் நிரபராதி என்று கருதினால், அவர், போலீஸ் காவலில் இருந்தால், பிணைதாரர்கள் இல்லாத பத்திரத்துடன், அவர் தீர்ப்பை கேட்க வரும்படிக் கூறி விடுதலை செய்திடவேண்டும். |
| **482. உயர்நீதிமன்றத்தின் உள்ளார்ந்த அதிகாரங்களைப் பாதுகாத்தல்** | இந்த சட்டத்தில் உள்ள எந்த ஷரத்தும் உயர்நீதிமன்றத்தின் உள்ளார்ந்த அதிகாரங்களை இந்த சட்டத்தினை பயனுள்ளதாக்கும் செயல்களை செய்ய எல்லையிடவோ, பாதிக்கவோ ஆகாது. அல்லது நீதிமன்ற நடைமுறைகளை துஷ்ப்ரயோகம் செய்ய அல்லது நீதியின் முடிவுகளை உறுதி செய்யவோ ஆகாது |
| | **இந்திய சான்றாதாரச் சட்டம் 1872––ன் பொருத்தமான சட்ட வாசகங்கள்** |
| **53A. நடத்தை அல்லது முந்தைய பாலுறவு அனுபவம் குறித்த சான்றாதாரங்கள் சில வழக்குகளில் பொருந்தத் தக்கதல்ல** | IPC 354, 354A, 354B, 354C, 354D, 376, 376A,376B, 376C, 376D, 376E இன் கீழான குற்றச் செயலுக்கு குற்ற வழக்குத் தொடரும்போது அல்லது அது போன்றதொரு குற்றச்செயல் புரிய முயலும்போது, அந்தப் பெண் அதற்குச் சம்மதம் தெரிவித்தாரா என்ற கேள்வி எழும்போது, சம்பந்தப்பட்ட பெண்ணின் நடத்தை அல்லது அவருக்கு முன்பே வேறு நபர்களுடன் பாலியல் அனுபவம் இருந்தது என்பது அவளின் சம்மதம் அல்லது சம்மதத்தின் தரம் என்ன என்பதற்கான சான்றாதாரம் ஆகாது. |
| **113A. திருமணமான பெண்ணைத் தற்கொலைக்குத் தூண்டுதல் எனும் உத்தேசத்தை அடிப்படையாகக் கொள்ளுதல்** | தற்கொலை செய்துகொண்ட பெண்ணிற்கு, அவளுடைய கணவன், அல்லது அவரது உறவினர் எவரேனும் துண்டுதலாக இருந்தார்களா என்பது வினாவானால், அவள் திருமணம் ஆன தினத்திலிருந்து 7 ஆண்டுக்குள் தற்கொலை செய்துகொண்டிருந்தால், அவளது கணவன், அல்லது அவரது உறவினர்கள் அவளைக் கொடுமைபடுத்தினார்கள் என்பதும் காண்பிக்கப்பட்டால், நீதிமன்றம், வழக்கின் ஏனைய சூழ்நிலைகளைக் கவனிக்கையில், அவளுடைய கணவன், அல்லது அவரது உறவினரும், தற்கொலைக்குத் தூண்டினார்கள் என்ற உத்தேசத்தை அடிப்படையாகக் கொள்ளவேண்டும். விளக்கம்–கொடுமை என்ற வார்த்தை, இந்தப் பிரிவைப் பொறுத்தவரை கொடுமை என்ற வார்த்தைக்கு IPC 498(A)ல் கொடுக்கப்பட்டுள்ள பொருள் பொருந்துவதாகும். |

| | |
|---|---|
| **114A சில பாலியல் வன் புணர்ச்சி குற்றவியல் வழக்குகளில் சம்மதம் இல்லை எனும் உத்தேசத்தை அடிப்படையாகக் கொள்ளுதல்** | IPC 376–ன் கீழ் உட்பிரிவு 2–ன் கீழ், சட்டக்கூறு a முதல் n வரையில் உள்ள பாலியல் வன்புணர்ச்சி சம்பந்தமான நீதி விசாரணையில், குற்றம் சாட்டப்பட்டவர் பாதிக்கப்பட்ட பெண்ணுடன் உடல் உறவு கொண்டது நிரூபிக்கப்பட்டுவிட்டால் அது அந்தப் பெண்ணின் சம்மதத்துடன் நடந்ததா அல்லது சம்மதமில்லாமல் நடந்ததா என்ற கேள்வி எழும்போது, அப்பெண் அவ்வாறு சம்மதம் இல்லை என தனது சாட்சியத்தில் கூறினால், அவள் சம்மதிக்கவில்லை என்ற உத்தேசத்தை நீதிமன்றம் அடிப்படையாகக்கொள்ளும். |
| **146 குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் சட்டபூர்வ கேள்விகள்** | ஒரு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படும் போது, இங்கு முன்பே சொல்லப்பட்ட வினாக்களுடன், பின் வரும் விஷயங்களைப் ஆராயும் வினாக்களும் கேட்கப்படலாம்<br>1) அவரது உண்மைத் தன்மையைப் பரிசோதிக்க<br>2) அவர் யாரென்று அரிய, அவர் வாழ்வில் எவ்வாறு உள்ளார் அல்லது<br>3) அவருடைய நம்பிக்கையை அசைக்க, அவரது நடத்தயை காயப்படுத்தி, அவ்வாறான வினாக்களுக்கு அவருடைய பதில்கள் அவரை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ குற்றவாளியாக்கவோ, அவரை அம்பலப்படுத்தவோ, அவரை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அபராததுக்கோ, பறிமுதலுக்கோ உள்ளாக்குவதற்கான கேள்விகள்.<br>இருந்தபோதும்,<br>IPC 376, 376A இன் கீழான குற்றச்செயல், அல்லது குற்றச்செயல் புரிய முயன்றதில், பெண்ணுக்கு அதில் சம்மதம் இருந்ததா என்ற கேள்வி எழும்போது, அவளின் கெட்ட நடத்தை, அல்லது அவள் பிறருடன் முன்பே பாலுறவு கொண்டவள் என்ற பதில்களை அளிக்கும்படியான கேள்விகளை சாட்சியிடம் கேட்கவும், குறுக்கு விசாரணையின்போது அவளிடம் கேட்கவும் அனுமதியில்லை. |
| **154. ஒரு தரப்பு தன் சொந்த சாட்சியிடம் கேட்கும் கேள்விகள்** | 1) நீதிமன்றம், அதன் தனிவிருப்ப உரிமையின்படி, தரப்பினர் தனது தரப்பு சாட்சியிடம் மாற்றுக் கட்சியினர் குறுக்கு விசாரணையில் கேட்கும் கேள்விகளை கேட்க அனுமதிக்கலாம்,<br>2) உட்பிரிவு (1)ன்படி அனுமதிக்கப்பட்ட தரப்பு அந்த சாட்சியத்தின் சான்றாதாரத்தின் எந்தப் பகுதியையும் தனக்குத் துணையாக் கொள்வதை இந்த பிரிவின் வாசகங்கள் தடுக்காது.<br>இந்திய தண்டனைச் சட்டத்தில் பொருத்தமான பிரிவுகள் |
| **166A. ஒரு பொது ஊழியர் சட்டத்தின் வழிகாட்டுதலை கீழ்படிய மறுத்தல்** | ஒரு பொதுஊழியர் எவெரேனும்,<br>அ) குற்றமொன்றை புலனாய்வு செய்வதற்காக அல்லது பிறவற்றுக்காக ஏதேனும் ஒரு இடத்தில் ஏதேனும் ஒருவருடைய வருகையைக் கட்டாயமாக்குவதைத் தடுக்கும் சட்டத்தின் வழிகாட்டுதலை தெரிந்தே மீறுவாரென்றால்<br>அல்லது,<br>ஆ) எந்தவொருவருக்கும் பாதகமாக, குற்றப் புலனாய்வை எப்படி மேற்கொள்ளவேண்டும் என்ற சட்டத்தின் வழிகாட்டுதலை தெரிந்தே மீறுகின்றாரென்றால்,<br>அல்லது,<br>இ) ஒரு பொது ஊழியர் ஒருவர் CrPCன் 154(1) பிரிவின் படி கொடுக்கப்படும் தகவலை, பதிவு செய்யத் தவறினால்; கீழ் கண்ட 326A, 326B, 354, 354B, 370, 370A, 376, 376A, 376B, 376C, 376D, 376E அல்லது 509 பிரிவுகளின்படி குற்றம் பற்றிய தகவல்களை பதிவுசெய்யத் தவறினால்,<br>அவர், ஆறு மாதத்திற்கு குறையாத, இரண்டு ஆண்டு வரை நீடிக்கப்படக் கூடிய கடுங்காவல் சிறைவாசத்துடன் அபராதத் தொகையும் செலுத்த நேரிடும். |

| | |
|---|---|
| **354. ஒரு பெண்ணை மானபங்கப்படுத்தும் நோக்கத்துடன் குற்றத் தன்மை வாய்ந்த தாக்குதல் நடத்துதல்** | ஒரு பெண்ணை மானபங்கப்படுத்தும் நோக்கத்துடன், அல்லது தான் செய்யும் செயல் பெண்ணின் கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படுத்தும் என்று தெரிந்து, குற்றத்தன்மை கொண்ட தாக்குதலை பெண் மீது தொடுக்கும் ஒருவர் ஓராண்டுக்குக் குறையாத ஐந்து ஆண்டுகள் வரை நீளக்கூடிய சிறைத்தண்டனையையுடன் அபராதமும் செலுத்தும்படி தண்டிக்கப்படலாம். ஒரு பெண்ணை மானபங்கப்படுத்தும் நோக்கத்துடன், அல்லது தான் செய்யும் செயல் பெண்ணின் கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படுத்தும் என்று தெரிந்து, குற்றத்தன்மை கொண்ட தாக்குதலை பெண் மீது தொடுக்கும் ஒருவர் ஓராண்டுக்குக் குறையாத ஐந்து ஆண்டுகள் வரை நீளக்கூடிய சிறைத்தண்டனையையுடன் அபராதமும் செலுத்தும்படி தண்டிக்கப்படலாம். |
| **354A பாலியல் துன்புறுத்தல்களும், அவற்றிற்கான தண்டனைகளும்** | பின்வரும் செயல்களைச் செய்யும் ஓர் ஆண்:<br>(1) விரும்பத்தகாத, வெளிப்படையான பாலியல் நோக்கம் கொண்ட உடல் தொடர்பு ஏற்படுத்துதல், அல்லது அச்சாரம் செய்தல்<br>(2) பாலியல் சலுகைகளைக் கேட்டல் அல்லது கோருதல்<br>(3) பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக, ஆபாசப் படங்களை/ இலக்கியங்களைக் காட்டுதல்<br>(4) பாலியல் குறிப்புகளைக் கொண்ட வாசங்களை வெளிப்படுத்துதல்<br>பாலியல் துன்புறுத்தல் குற்றம் செய்தவர் ஆவார்.<br>2) 1 முதல் 3 எண்ணுள்ள குற்றங்களுக்கு மூன்று ஆண்டுவரை நீடிக்கக்கூடிய தீவிர சிறை வாசம். (அ) அபராதம் (அ) இரண்டும் சேர்த்தோ விதிக்கப்படும்.<br>3) 4 வது எண்ணுள்ள குற்றங்களுக்கு ஒரு ஆண்டுவரை நீடிக்கக்கூடிய சிறை வாசம். (அ) அபராதம் (அ) இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும். |
| **354B பெண்ணைத் துகிலுரிவதற்காக குற்றத் தன்மைகொண்ட தாக்குதல் அல்லது தாக்குதல்** | தாக்குதல் தொடுத்து அல்லது குற்றத்தன்மை கொண்ட தாக்குதல் தொடுத்து, பெண்ணின் ஆடையைக் களைய முயலும், அவளை நிர்வாணமாக இருக்க வற்புறுத்தும், எந்த ஒரு ஆணிற்கும் மூன்று ஆண்டுக்கு குறையாத 7 ஆண்டு வரை நீடிக்கக் கூடிய சிறை வாசமும். அபராதமும் விதிக்கப்படலாம். |
| **354C பெண்ணின் அந்தரங்கத்தை அல்லது பிறரின் அந்தரங்க நடவடிக்கைகளை வெறித்து நோக்குதல்** | வழக்கமாக எந்த ஒருவரும் பார்க்கமுடியாது என்ற சூழலில், அந்தரங்க நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டிருக்கும் ஒரு பெண்ணை குற்றச்செயல் செய்தவர் அல்லது அவரின் சார்பில் மற்றவர் பார்ப்பது, படம் பிடிப்பது, குற்றச்செயல் செய்தவரோ அல்லது அவரின் சார்பிலோ ஒருவர் அந்தப் படங்களை வெளியிடுவது ஆகிய குற்றங்களுக்கு, அது முதல் குற்றம் என்றால், ஓராண்டுக்குக் குறையாத மூன்று ஆண்டுகள் வரை நீளக்கூடிய சிறை தண்டனை அத்துடன் அபராதம் விதிக்கப்படலாம். அதே குற்றம் திரும்பவும் செய்யப்படும் என்றால், மூன்றாண்டுகளுக்குக் குறையாத ஏழு ஆண்டுகள் வரை நீளக் கூடிய சிறைதண்டனையும் அத்துடன் அபராதமும் விதிக்கப்படலாம்.<br>விளக்கம் 1<br>தனிமையாக செயல்படுதல் இந்தப்பிரிவிற்காக, தனிமையாக செயல்படுதல் என்பது அந்த சந்தர்ப்பங்களில் அந்தரங்கத்தன்மை இருக்கும் என்று எதிர்பார்க்க படக் கூடிய சந்தர்ப்பங்கள், பாதிக்கப்பட்டவரின் ஜனநேந்திரியங்கள், பின்புறம், மார்பகங்கள் வெளிபடுத்தப்பட்டபோது அல்லது உள்ளாடையால் மட்டும் மூடப்பட்டிருந்தால், கழிப்பிடத்தை பயன்படுத்தும்போது, பொதுவிடத்தில் பொதுவாக செய்யாத பாலியல் உடலுறவில் ஈடுபட்டிருப்பது.<br>விளக்கம் 2<br>பாதிக்கப்பட்டவரை படம்பிடிப்பதை, அல்லது செயல்களை படம்பிடிப்பதை, சம்மதம் தெரிவித்து ஆனால் அதை மூன்றாமவர்க்கு வெளியிடக்கூடாதென்ற போது, அதை மூன்றாமவர்க்கு வெளியிட்டால் அவை இந்த சட்டப் பிரிவின்படி குற்றமாக கொள்ளப்படும் |

| | |
|---|---|
| **354D பிரிவு விடாதுபின் தொடர்தல்** | **1.** எந்த ஒரு ஆணும் –<br>i. பெண்ணை விடாதுப்பின் தொடர்ந்து, அவளுடன் தொடர்பு கொள்ளல், தொடர்புகொள்ள முயலுதல், பெண்ணுக்கு அதில் விருப்பம் இல்லை என்று தெரிந்த பின்பும் பேச்சு வளர்க்க முயலுதல்<br>ii. அவளுடைய வலைமனை, மின்னஞ்சல் மற்றும் இதர மின்னணுத் தகவல் பரிமாற்றத்தை மேற்பார்வையிடல் ஆகிய குற்றங்களில் எதனையேனும், சிலவற்றையேனும் செய்பவர் பெண்ணை விடாதுப்பின் தொடரும் குற்றத்தை செய்தவராகிறார்<br>இருந்தபோதும்,<br>i. ஒரு குற்றத்தைக் கண்டுபிடிப்பதற்காக, அல்லது தடுப்பதற்காக செய்யப்பட்டதென்றால், குற்றத்தைக் கண்டுபிடித்தல் அல்லது தடுத்தல் என்ற பொறுப்பு அவருக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டிருந்தால்,<br>அல்லது,<br>ii. ஏதேனும் ஒரு சட்டத்தின்படி அல்லது சட்டத்தின்படியான ஒரு நிபந்தனையாக ஒருவரால் நியமனம் செய்யப்பட்டிருக்கும்போது,<br>iii. நியாயமான தக்க காரணங்களுக்காக விடாதுப் பின்தொடர்தல் ஒரு குற்றமாக கருதப்பட மாட்டாது.<br>2) முதல்முறை தண்டனை சிறைத் தண்டனை. அது மூன்று வருடம் வரை நீடிக்கப்படலாம் அபராதம் விதிக்கப்படலாம். மறுமுறையும் அதே குற்றத்தைச் செய்யும்போது 5 வருடம் சிறைதண்டனை. அபராதமும் விதிக்கப்படலாம் |
| **376. பாலியல் வன் புணர்ச்சிக்கான தண்டனை** | 376 பிரிவின் கீழ்;<br>கீழே கொடுக்கப்பட்டுள்ள உட்பிரிவு 2–ல் பட்டியல் இடப்பட்டுள்ளவர்கள் தவிர மற்றவர்கள் வன்புணர்ச்சி செய்தால் குறைந்த பட்சம் 7 ஆண்டு தீவிர சிறை தண்டனை, அது ஆயுள் சிறை வரை நீட்டிக்கப்படலாம், அத்துடன் அபராதமும் விதிக்கப்படும்.<br>உட்பிரிவு (2)<br>(a) காவல்துறை அதிகாரியாக உள்ளவர் வன்புணர்ச்சி செய்தால்<br>(I) அவர் பணி செய்யும் காவல்நிலைய எல்லைக்குள் வன்புணர்ச்சி குற்றம் செய்தல்<br>(II) காவல்நிலைய வளாகத்தில்<br>(III) வன்புணர்ச்சிக்கு ஆளான பெண் அக்காவல் அதிகாரியின் பொறுப்பிலோ அல்லது அவர் கீழ் உள்ள காவல் அதிகாரியின் பொறுப்பிலோ இருந்தால் அல்லது<br>(b)) பொது ஊழியர் ஒருவரின் பொறுப்பில் ஒரு பெண்ணை, அல்லது அவரின் கீழ் அதிகாரியின் பொறுப்பிலோ உள்ள அந்த பொது ஊழியர் வன்புணர்ச்சி செய்தால்,<br>(c) மத்திய பாதுகாப்புத் துறையின் உறுப்பினராக உள்ளவர், மத்திய/ மாநில அரசால் அவ்விடத்தில் பணியமர்த்தப்பட்ட ஒருவர் வன்புணர்ச்சி செய்தால்<br>(d) சிறை அதிகாரியாகவோ அல்லது பணிபுரிபவராகவோ, காவல் இல்லம் அல்லது அது போன்ற வேறு காவலிடங்களில், சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட (i) இடங்களில், பெண்கள் குழந்தைகளுக்கான நிறுவனங்களில் அதிகாரப் பொறுப்பில் இருக்கும் (ii) ஒருவர் அங்கு தங்கியுள்ளவரை வன்புணர்ச்சி செய்தால்,<br>(e) மருத்துவமனையில் அதிகாரியாகவோ அல்லது பணிபுரிபவராகவோ இருப்பவர் மருத்துவமனையில் உள்ள பெண்ணின் மீது வன்புணர்ச்சி செய்தால், |

| | |
|---|---|
| | (f) உறவினராகவோ, பாதுகாவலராகவோ, ஆசிரியராகவோ, நம்பிக்கைகுரிய பதவி/அதிகாரத்தில் உள்ளவராகவோ இருப்பவர் வன்புணர்ச்சி செய்தால்<br>(g) மதக்கலவரம் அல்லது ஜாதிக் கலவரத்தின் போது வன்புணர்ச்சி செய்தால்<br>(h) கர்ப்பிணி என்று தெரிந்தும் வன்புணர்ச்சி செய்தால்<br>(i) 16 வயதிற்கு கீழ் உள்ள பெண்ணை வன்புணர்ச்சி செய்தால்<br>j) சம்மதம் தெரிவிக்க இயலாத பெண்ணை வன்புணர்ச்சி செய்தால்<br>k) அதிகாரத்திலோ அல்லது ஆதிக்கம் செய்யக்கூடிய அதிகாரத்தில் உள்ளவராகவோ உள்ள ஒருவர் வன்புணர்ச்சி செய்தால்<br>l) மனநிலை பாதிக்கப்பட்ட அல்லது அங்க ஹீனமுள்ள பெண்ணையோ வன்புணர்ச்சி செய்தால்<br>m) வன்புணர்ச்சியின் போது உடலுக்கு பலத்த காயம் ஏற்படுத்தினால், முடமாக்கினால், உருக்குலைத்தால், பெண்ணின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தினால்<br>n) மீண்டும் மீண்டும் ஒரு பெண்ணை வன்புணர்ச்சி செய்தால்<br>அவர்களுக்கு 10 ஆண்டுக்கு குறையாத கடுங்காவல் சிறை வாசமும். அபராதமும் விதிக்கப்படலாம். ஆயுள் சிறைதண்டனை விதிக்கப்படலாம்.<br>ஆயுள் சிறைதண்டனை என்பது அவர் இயற்கையாக இறக்கும்வரை என்பதாகும் அபராதமும் விதிக்கப்படலாம் |
| **376A மரணத்தை விளைவித்தல் மற்றும் உணர்வற்ற பிண்டமாக்கு வதற்கான தண்டனை** | பிரிவு (1), (2) பிரிவின்படி மேற்படியான சாவிற்கு காரணமான செயலைச் செய்யும் எவருக்கும், உணர்வற்ற பிண்டமாக உயிர் வாழ செயலைச் செய்யும் எவருக்கும் 20 ஆண்டுக்கு குறையாத தீவிர சிறை வாசம். தூக்குதண்டனையும் விதிக்கப்படலாம். ஆயுள் சிறை வாசம் விதிக்கப்படலாம்.<br>ஆயுள் சிறை வாசம் என்பது அவர் இயற்கையாக இறக்கும் வரை என்பதாகும். |
| **376 B. பிரிந்திருக்கும் மனைவியுடன் அவளின் கணவன் உடலுறவு கொள்வது** | பிரிதலுக்கான தீர்ப்பின்படி அல்லது அப்படியில்லாமல் பிரிந்து வாழும் மனைவியுடன், அவளின் ஒப்புதல் இல்லாமல் உடலுறவு கொள்ளும் கணவன் யாராக இருந்தாலும் இரண்டாண்டுகளுக்குக் குறையாத, ஏழு ஆண்டுகள் வரையிலான சிறைதண்டனையைப் பெறுவார். அத்துடன் அவருக்கு அபராதமும் விதிக்கப்படலாம். |
| **376 C பிரிவின்படி அதிகாரத்தில் உள்ளவரால் செய்யப்படும் பாலியல் உடல் உறவு** | அ) அதிகாரத்தில் உள்ளவராகவோ, பொறுப்பாண்மையில் இருப்பவராகவோ<br>ஆ) பொது ஊழியராக இருக்கும் ஒருவர்<br>இ) ஜெயிலில் அதிகாரியாகவோ அல்லது பணிபுரிபவராகவோ காவல் இல்லத்தில் அல்லது அது போன்ற வேறு காவலிடங்களில், சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட இடங்களில் அல்லது பெண்கள் (அ) குழந்தைகளுக்கான நிறுவனங்களில் இருக்கும் ஒருவர்<br>(ஈ) மருத்துவமனையில் அதிகாரியாகவோ அல்லது பணிபுரிபவராகவோ இருப்பவர்<br>தனது பதவி அல்லது பொறுப்பாண்மையினை துஷ்ப்ரயோகம் செய்து, தன் அதிகாரத்தின் கீழ் அல்லது பொறுப்பின் கீழ், அல்லது அந்த வளாகத்தில் உள்ள ஒரு பெண்ணை, உடலுறவுக்கு தூண்டினாலோ நெறிதவறச் செய்தாலோ, அல்லது உடலுறவு பாலியல் உடல் உறவு கொண்டால் அது வன்புணர்ச்சி குற்றமாகாது, என்றாலும் 5 ஆண்டுக்கு குறையாத தீவிர சிறைதண்டனையும். அபராதமும் விதிக்கப்படலாம். அது 10 வருடம் வரை நீடிக்கப்படலாம். அபராதமும் விதிக்கப்படலாம். |

| | |
|---|---|
| **376D கூட்டு வன்புணர்ச்சி** | ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களால், கும்பலாக வன்புணர்ச்சி செய்யப்பட்டால் அல்லது பொதுவான ஒரு எண்ணத்துடன் கும்பலாக செயல்பட்டால், அந்த ஒவ்வொரு நபரும், தனித்தனியே வன்புணர்ச்சி செய்ததாக கருதப்படுவார் அவருக்கு 20 ஆண்டுகளுக்குக் குறையாத ஆயுள் வரையிலான கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும், மேலும் அவருக்கு அபராதமும் விதிக்கப்படலாம்.<br>ஆயுட்கால சிறைவாசம் என்பது அவர் இயற்கையாக இறக்கும் வரை என்பதாகும். அவ்வாறு வசூலிக்கப்படும் அபராதத் தொகையிலிருந்து, பாதிக்கப்பட்டவருக்கு நியாயமான மற்றும் சரியான தொகையை மருத்துவ செலவுக்கும், மறுவாழ்வுக்கும் கொடுக்கப்பட வேண்டும். மேலும் விதிக்கப்படும் அபராதம் பாதிப்புக்கு ஆளானவருக்கு அளிக்கப்பட வேண்டும். |
| **376E–ன் பிரிவின் படி மீண்டும் மீண்டும் குற்றம் புரிபவருக்கு தண்டனை** | ஏற்கெனவே 376, 376A, 376B பிரிவுகளின் படி தண்டிக்கப்பட்டவர் மீண்டும் அதே குற்றம் செய்வார் என்றால், 376E–ன் பிரிவின் படி தண்டனை: வாழ்நாள் சிறை வாசம் அவர் இயற்கையாக இறக்கும் வரை அல்லது தூக்குதண்டனை |
| **406. குற்றவியல் நம்பிக்கை மோசடிக்கான தண்டனை** | குற்றவியல் நம்பிக்கை மோசடி செய்யும் எவருக்கும் மூன்றாண்டு வரை நீடிக்கப்படக் கூடிய சிறைதண்டனை மற்றும் அபராதமும் விதிக்கப்படலாம்<br>அல்லது இரண்டும் சேர்த்தும் விதிக்கப்படலாம் |
| **498 A பெண்ணிற்கு, அவளுடைய கணவன், அல்லது அவரது உறவினர் எவரேனும் கொடுமை செய்தால்** | பெண்ணிற்கு, அவளுடைய கணவன், அல்லது கணவரது உறவினர் எவரேனும் கொடுமை செய்தால், மூன்றாண்டு வரை நீடிக்கப்படக் கூடிய சிறைதண்டனை மற்றும் அபராதமும் விதிக்கப்படலாம்.<br>(a) கொடுமை என்பது வேண்டுமென்று, தெரிந்தே செய்யப்படும் ஏதோ ஒரு செயலால் அவள் தற்கொலை செய்துகொள்ள தள்ளப்படுதல், உயிருக்கு ஆபத்து விளைவிக்கும், உடல் உறுப்புக்கு, மனநிலைக்கு காயத்தை ஏற்படுத்தும் எந்த செயலும் கொடுமை எனப்படும்.<br>அல்லது<br>துன்புறுத்துதல் அவளோ அல்லது அவளுடைய உறவினர் ஒருவர் அவர்களின் சொத்து/விலை உயர்ந்த பொருளை சட்ட விரோதமாக பெறவேண்டி, அவர்கள் தராததால் செய்யப்படும் துன்புறுத்தல். |
| **509 பெண்ணின் கௌரவத்தைப் பாதிக்க வேண்டி செய்யப்படும் சைகை, செயல்பாடு, வார்த்தைப் பிரயோகம்** | எவரேனும், ஒரு பெண்ணின் தன்மானத்தை பங்கப்படுத்த நினைத்து, எதேனும் வார்த்தை சொல்லல்.<br>ஒரு பெண்ணின் கௌரவத்தைப் பாதிக்கும் நோக்கத்துடன், அவளுக்குக் கேட்கும் என்ற எண்ணத்துடன் சொல்லப்படும் வார்த்தை, அல்லது அவள் கண்ணில்படும் என்பதற்காகச் செய்யப்படும் செய்கை அல்லது பொருள் அல்லது ஒரு பெண்ணின் அந்தரங்கத்தில் தலையிடுதல் ஆகிய குற்றங்களுக்கு மூன்றாண்டுகளுக்குக் குறையாத சாதாரண சிறைதண்டனையும் அத்துடன் அபராதமும் விதிக்கப்படலாம். |

# அருஞ்சொல் அகராதி

1. **குற்றவிடுதலை:** குற்றவியல் வழக்கொன்றில் "குற்றமற்றவர்" என்று அறியப்படல். பிணையில் விடுதலையாவதற்கு "குற்றமற்றவர்" என்று பொருளில்லை.

2. **பிணை:** விசாரணைக்கு ஆஜராவார் என்பதை உறுதி செய்வதற்காக பணம் பெறப்பட்டு சிறை செல்வதிலிருந்து தற்காலிகமாக விடுதலை செய்யப்படல்.

3. **முடிவு அறிக்கை:** மேற்கொண்டு குற்ற விசாரணை தேவையில்லை என்று பரிந்துரைக்கும் அறிக்கை.

4. **புலன் கொள்ளுதல்:** ஒரு குற்றவியல் வழக்கு குற்றத்தைக் புலன் கொள்ளுதலில் தான் துவங்குகிறது. ஒரு குற்றவியல் நீதிபதி அல்லது நடுவர் எப்போது குற்றவியல் வழக்கொன்றில், முதலில் சட்டப்படியாக புலன் கொள்கிறாரோ, அப்போது புலன்கொள்ளுதல் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. குற்றவியல் வழக்கொன்றில் புலன் கொள்ளும்போது, குற்றம் சாட்டப்பட்டவர் இருக்க வேண்டியதில்லை.

5. **மாற்றுத் திறனாளி:** பொதுவான புத்தி பூர்வமான, உடலியல் ரீதியான செயல்களை, தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ செய்ய இயலாத நபர்கள்/ குழந்தைகள் மாற்றுத் திறனாளிகள் என்று இந்த ஆவணத்தில் குறிப்பிடப்படுகிறார்கள்.

6. **விசாரணை:** ஒவ்வொரு புலனாய்விலும், சட்டத்தின் கீழ் ஒரு நீதிபதியின் வழிகாட்டுதலின்படி விசாரணை நடத்தப்படும். பொதுவாக காவல்துறையினரால் இது செய்யப்படுகிறது.

7. **காவல்துறை அறிக்கை:** பிரிவு 2(r)–ன் படி, காவல்துறை அறிக்கை என்பது, குற்றவியல் நடைமுறைச் சட்டம் , பிரிவு173(2)–ன் படி குற்றவிசாரணை நடத்த வேண்டும் என்ற பரிந்துரையுடனான அறிக்கை. இது குற்றபத்திரிக்கை என்றும் கூறப்படும்.

8. **குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்:** இந்த ஆவணத்தில் பட்டியல் 1 முதல் 3–ல் உள்ள பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட, குணமடைந்துவரும், குணமடைந்த ஒரு சிறார்/பெண்.

9. **மருத்துவ அதிகாரி / நல வாழ்வு அதிகாரி:** தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் மருத்துவ உதவி சேவையை செய்யும், பொது மருத்துவர்கள், சிறப்பு மருத்துவர்கள், செவிலியர்கள், மனநல மருத்துவர்கள், மற்றும் பொதுநல மருத்துவர்கள்.

10. **துவக்க சான்றாதார வழக்கு:** துவக்க சான்றாதார வழக்கு என்பது முதல் விசாரணையிலேயே நிறுவப்பட்ட வழக்கு

11. **அரசு வழக்கறிஞர்:** இந்த ஆவணத்தை பொருத்தவரை, அரசு வழக்கறிஞர் என்பவர் Cr.P.C–ன் 24 இன்கீழ் நியமிக்கட்டவர் மற்றும், POCSO சட்டப்படி 32–ன் கீழ் நியமிக்கப்பட்ட சிறப்பு அரசு வழக்கறிஞர்.

12. **சிறப்புச் சிறார் காவல் பிரிவு:** சிறார் நீதி (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்ட 2000–ன் படி சிறார்களுடன் முக்கயமாக பணி செய்யும், காவல்துறையின் அதிகாரிகளடங்கிய காவல்துறை பிரிவு. இந்தக் காவலதிகாரிகள் சிறார்களுடைய வழக்குகளைக் கையாள சிறப்பாக பயிற்சி பெற்றவர்கள். அவ்வாறான, சிறப்பாக பயிற்சி பெற்ற, மனோபாவம் உள்ள காவல்துறையின் அதிகாரி, சிறார் நல அதிகாரியாக நியமிக்கப்பட்டு, அவர் சிறார்களுடைய வழக்குகளைக் கையாளவும், இதர காவல்துறையினருடன் இணைந்து செயலாற்றுவார். இந்த காவல் பிரிவு, ஒவ்வொரு மாவட்டம், நகரம் தோறும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

13. **அதிகார எல்லை :** காவல்நிலைய/ நீதிமன்ற எல்லை என்பது நீதிமன்றம்/காவல் நிலையம் குற்றத்தை கண்டுகொள்ள அதிகாரமுள்ள நிலப்பரப்பு. உதாரணமாக, தென் டில்லியில் நடக்கும் குற்றத்தை, தென் டில்லி காவல்நிலையம் ஆராய அதிகாரமுள்ள நிலப்பரப்பு.

14. **நீதிப் பேரணை அதிகார வரம்பு:** இந்திய அரசியல் சட்டத்தின் பிரிவுகள் 226 மற்றும் 32ன் படி அடிப்படை உரிமைகளை நிலைநாட்டுவதற்காக, ஆட்கொணர்வு (Habeas Corpus), கீழ் நீதிமன்றங்களின் ஆவணங்களைச் சமர்ப்பிக்க உத்தரவிடுதல் (Certiorari), தடுப்பாணை (Prohibition), நீதிப் பேராணை (Mandamus), அரசுப் பதவி வகிப்பதை/ சலுகைகள் பெறுவதைக் கேள்விக்குள்ளாக்குவது (Quo-warranto) என்ற வடிவங்களில் இந்தியாவில் உள்ள உயர் நீதிமன்றங்களும், உச்சநீதிமன்றமும் நீதிப் பேராணைகளை இடும் அதிகாரமுள்ளவை. அடிப்படை உரிமைகள் மட்டுமல்லாமல், இதர உரிமைகள் குறித்தும் உயர்நீதிமன்றங்கள் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்த முடியும்.